இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | இதழ் 126 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 19 சனிக்கிழமை 01.04.2017

## இந்திய மீனவர்கள் சகலரும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 38 பேரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் 3 தடவைகளில் பிடிபட்ட 30 மீன 04

# போர்க்குற்ற விசாரணைக்கு

# பன்னாட்டு பங்களிப்பு அவசியமே

## மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் அதிரடிக் கருத்து



கொழும்பு, ஏப்ரல் 1

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதில் இலங்கைக்குப் போதிய அனுபவம் இல்லை. அதனால் உள்ளக விசாரணையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகப் 24

## மோடி இலங்கை வர முன் இந்தியா செல்வார் ரணில்

கொழும்பு, ஏப். 1

இந்திய நடுவண் அரசின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னதாக, கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. வெசாக் நாள் கொண்டாட்டங்கள் இலங்கையில் பிரமாண்டமாக கொண்டாடப்படவுள்ளன. பல நாடுகளின் தலைவர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள் 24

## சவேந்திர சில்வாவுக்கு இராணுவ உயர் பதவி



கொழும்பு, ஏப். 1

இறுதிப் போரில் போர்க்குற்றங்களை இழைத்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இலங்கை இராணுவத் தலைமையகத்தில் பொது உதவி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். 04

## போர்க்குற்றங்கள் நிகழவேயில்லை

### ஜெனிவாவில் 7 அறிக்கைகளை சமர்ப்பித்தது மகிந்த அணி

கொழும்பு, ஏப். 1

இறுதிப்போரின் போது போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்று தெரிவித்து 7 அறிக்கைகளை இம்முறை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பித்துள்ளோம் என்று மகிந்த அணியான பொது எதிரணி தெரிவித்தது. இவ்வாறான அறிக்கைகளை ஜெனிவா மாநாட்டில் இலங்கை அரசு சமர்ப்பிக்க வில்லை என்றும் பொது எதி 24

## நிச்சயம் விடுவிக்கப்படும் கேப்பாபிலவுக் காணிகள்

### சம்பந்தனிடம் இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, ஏப். 1

கேப்பாபிலவுக் காணிகள் நிச்சயமாக விடுவிக்கப்படும். இவ்வாறு இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்று முன்தினம் உறுதியளித்துள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 24

## கிடைக்குமா ஜி.எஸ்.பி.?

### மே 15 க்குப் பின்னர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 1

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு வழங்கப்படுமா, இல்லையா என்பது குறித்த தீர்மானம் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதியின் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீள வழங்குவது குறித்த அறிக்கை கடந்த டிசெம்பர் 24

## மைத்திரிக்கு வாக்களித்தும் மக்களுக்கு பயனில்லை

### நாமல் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 1

"மோசடிகளைத் தடுத்து வறுமையை ஒழிக்கவே மக்கள் மகிந்தவுக்கு வாக்களிக்காமல் மைத்திரிக்கு வாக்களித்தனர். ஆனால் அவரும் அதனையே செய்கின்றார். எம்மைச் சிறையில் அடைத்தாலும் கூட்டு அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளைக் கைவிடப்போவதில்லை" இவ்வாறு மகிந்தவின் புதல்வரும் 24

## கடனில் மூழ்கிய நாட்டை மீட்டெடுக்க முழு முயற்சி

### தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 1

நாடு கடனில் மூழ்கியுள்ளது. 2026ஆம் ஆண்டு வரைதான் எமக்குக் கடனை மீளச் செலுத்தும் காலம் உள்ளது. குறித்த காலப்பகுதிக்குள் நாட்டைக் கடனில் இருந்து மீட்பதுடன், அபிவிருத்தியையும் செய்ய அரசு திட்டங்களை வகுத்துள்ளது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 24

## தேர்தலை நடத்த அரசு பின்னடிப்பு

### அசோக பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 1

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்று எல்லை நிர்ணயக் குழுவின் முன்னாள் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற நிகழ் 24




உவயள தப்ப வைக்க பதவி வழங்கத்தானே வேணும்...

## பாடசாலைச் சீருடைகள் நிறம் மாறும்

கொழும்பு, ஏப். 1

அரச பாடசாலைகளில் மாணவர்களுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்டு வந்த வெள்ளை நிறச் சீருடைக்குப் பதிலாக வர்ணத்திலான சீருடையை அறிமுகப்படுத்தக் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்களுக்குள்ள விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கிலும் இந்த வர்ணச் சீருடை மாற்றத்துக்கான நடவடிக்கை கவனத்தில் எடுக்கப்படவுள்ளது.

வெள்ளைச் சீருடைகள் விரைவில் அழுக்கடைந்து விடுவதால் மாண 04

## அமைச்சரின் தவறால் தாமதமடைந்து வரும் இழுவைமடிச் சட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 1

இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கும் வகையில், கொண்டுவரப்பட்ட சட்டவரைவு அமைச்சரின் தவறினால் கடந்த மாதம் 24

## ரகசிய ராணுவக் குழுக்கள் எவையுமே இயங்கவில்லை

### கூறுகிறார் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் கபில

கொழும்பு, ஏப். 1

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இரகசிய இராணுவக் குழுக்கள் எவையும் இயங்கவில்லை என்று தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர் 24

## யாழ். லிடோ தியேட்டர் காணி; முதலமைச்சரும் மாநகர சபையும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 1

ஸ்ரான்லி வீதிச் சந்தியில் முன்னர் லிடோ தியேட்டர் இருந்த காணி தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சின் அமைச்சும், யாழ்ப்பாண மாநகர சபையும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வழங்கியுள்ளன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக எழுப்பப்பட்ட கேள்விக்கே இவ்வாறு முரண்பட்ட பதில் கிடைக் 24


## சிலரின் ஒழுக்கமீறல்களை நியாயப்படுத்த உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தலாமா?

### யாழ். பல்கலை. கலைப்பீடாதிபதி கவலை

### 13 மாணவர்களுக்கான வகுப்புத் தடையும் இடை நீக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 1

"உண்மையான அறத்தின் பாற்பட்டு மேற்கொள்ளப்படவேண்டிய உணவு ஒறுப்புப் போராட்டம், மாணவர்கள் சிலரின் ஒழுக்க மீறல்களை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவது, கலைப்பீட மாணவர்கள் இந்தச் சமூகம் தொடர்பில் காட்டிவரும் பொது அக்கறைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியது. மாணவர்களின் 22





# ராணுவ வாகனம் மோதிய இளைஞனின் கால் முறிவு

## புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 1

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனை அவரின் பின்னால் சென்ற இராணுவ கப் ரக வாகனம் மோதியதில் அவரது கால் முறிந்தது. முறிந்த எலும்பின் ஒரு பகுதி வீதியில் காணப்பட்ட நிலையில், இளைஞன் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் புன்னாலைக் கட்டுவனில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த நாகராசா பயூரதன் (வயது 19) என்பவரே விபத்தில் படுகாயமடைந்தார்.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உரும்பிராய் திசையில் இருந்து பலாலி நோக்கி குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அதேபோன்று பலாலி நோக்கி இராணுவ கப் ரக வாகன்ம் பயணித்துள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதியின் எதிர்ப் பக்கம் திரும்பியவேளை இராணுவ வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளி இழுத்துச் சென்றுள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனின் வலது கால் முழுமையாக முறிந்ததோடு கையிலும் பலத்த காயம் ஏற்பட்டது. முறித்த கால் எலும்பு வீதியில் கிடந்தது. இதனால் காயமடைந்த இளைஞன் உடனடியாக வீதியால் பயணித்த முச்சக்கர வண்டியின் உதவியுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டனர். பின்னர் விபத்தில் சிக்கிய வாகனங்களைப் பொலிஸார் கொண்டு சென்றதோடு, இராணுவ வாகனச் சாரதியையும் அழைத்துச் சென்றனர். (த-4-101)

# விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் இலக்கத் தகட்டை மாற்றிய ராணுவம்



யாழ்ப்பாணம், ஏப். 1

விபத்தை ஏற்படுத்திய இராணுவ கப் ரக வாகானம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்னர் அவசர அவசரமாக வீதியில் வைத்து இலக்கத்தகடு மாற்றப்பட்டது.

இதனை அங்கிருந்த பலரும் அவதானித்தனர். இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் 11ஆம் மைல் கல்லுக்குக்கு அண்மையில் நேற்றுக்காலை 8.15 மணியளவில் விபத்து ஒன்று இடம்பெற்றது. இராணுவ கப் ரக வாகனம் வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதியதால் அதில் பயணித்த இளைஞரின் கால் முறிந்தது. விபத்தை அடுத்து அந்தப் பகுதிக்குப் பொலிஸார் மற்றும் இராணுவப் பொலிஸார் சென்று விசாரணைகளில் ஈடுபட்டனர். இராணுவ வாகனத்தைப் பொலிஸார் பொலிஸ் நிலையம் கொண்டு செல்ல முயன்றவேளை இராணுவ வாகனச் சாரதி அதில் இருந்த இலக்கத் தகட்டைக் கழற்றிவிட்டு வேறொரு இலக்கத் தகட்டைப் பொருத்தினார். அதன் பின்னரே வாகனம் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது.

புதிதாகப் பொருத்தப்பட்ட இலக்கத் தகடும் குறித்த வாகனத்திற்குள் இருந்தே எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு நடு வீதியில் வைத்து இலக்கத் தகட்டை இராணுவத்தினர் அகற்றியதை அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் நோக்கினர். (த-4-101)

## காணிகளை விடுவிக்காவிட்டால்

# அரசுக்கு எதிராக அணி திரட்டும் கூட்டமைப்பு

## கேப்பாபிலவு மக்களிடம் உறுதியளித்தார் மாவை



முல்லைத்தீவு, ஏப். 1

தொடர் அமைதிவழிப் போராட்டத்தின் மூலம் மக்கள் பலத்தைப் பிரயோகித்து விரைவில் காணிகள் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இல்லாதுபோனால் நாங்களும் மக்களாகிய உங்களுடன் இணைந்து அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிராகப் போராடுவோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

கேப்பாபிலவில் உள்ள பூர்வீக நிலங்களான 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் அமைதிவழிப் போராட்டம் நேற்று 31ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. போராட்டக் களத்துக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சென்று மக்களுடன் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"போர் காரணமாக இடம்பெயர்ந்து இன்றும் அகதியாக வாழ்ந்து வரும் எமது துன்பங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டியது இல்லை. உங்களுக்கு எல்லாம் புரியும். சுடலைக்கு அருகில் இரவு பகலாக பெண்கள், குழந்தைகள் எனப் பலரும் இருந்து எமது சொந்த நிலத்துக்காகப் போராடி வருகின்றோம். எங்கள் காணிகளுக்குள் நாங்கள் மீள்குடியேறுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் அரச தரப்பினருடன் கலந்துரையாடி விரைவில் வழி செய்யவேண்டும். இது தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இறுக்கமான கடும் அழுத்தம் கொடுக்கவேண்டும்" என்று போராட்டத்தில் பங்கேற்றுள்ள கேப்பாப்பிலவு மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் வலியுறுத்தினார்கள்.

இதற்குப் பதிலளித்த சேனாதிராசா,

"எங்கள் மக்களின் காணிப் பிரச்சினை முக்கியமானது. எங்கள் மக்களின் மீள்குடியேற்றம் முக்கியமானது. அதன் அடிப்படையில் கேப்பாபிலவு மக்களாகிய நீங்கள் விரைவில் உங்கள் சொந்தக் காணிகளுக்குத் திரும்ப வேண்டும். ஏற்கனவே பிலக்குடியிருப்பு மக்கள் முன்னெடுத்த போராட்டத்தையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் காணிகளை உடன் விடுவிக்குமாறு நாடாளுமன்றத்திலும், அரச தலைவரிடமும் மிக இறுக்கமாகச் சொன்ன பின்னர் அந்த நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. அதே பலத்தை நீங்கள் கொண்டுள்ளீர்கள். நாங்கள் அந்தப் பலத்தைப் பிரயோகிப்போம். அரச தலைவரிடம் மீண்டும் மிகத் திட்டவட்டமாக எடுத்துக்கூறி இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவோம். கேப்பாப்பிலவுக் காணிகள் ம்ட்டுமல்ல இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்று நல்லாட்சி அரசு எமக்குத் தந்த உறுதிமொழி இருக்கின்றது. நீங்கள் சொல்லுகின்ற ஆவேசமான கருத்துக்களை நாங்கள் இதைவிட அதிகமான பலமான ஆவேசத்துடன் அரசதலைவரிடம் எடுத்துச் சொல்லுவோம். நீங்கள் விரைவில் உங்கள் சொந்த இடத்துக்குச் செல்லவேண்டும். இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இல்லாதுபோனால் நாங்களும் மக்களாகிய உங்களுடன் இணைந்து அரசுக்கு எதிராகவும், இராணுவத்துக்கு எதிராகவும் போராடுவோம். உங்கள் மீள்குடியேற்றம், உங்கள் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு, அவர்களின் எதிர்கால வாழ்க்கை எல்லாவற்றையும் கட்டியெழுப்புவதற்கு முழுமையாக உங்களுடன் நாம் இருப்போம் என்றார். (த-47)

# மகிந்த அணியின் மே தினக் கூட்டம் காலிமுகத்திடலில்


கொழும்பு, ஏப். 1

மகிந்த ஆதரவு அணியின் இந்த வருடத்துக்கான மே தினக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

இதற்கான அனுமதியைத் துறைமுக அதிகாரசபை கடந்த 28ஆம் திகதி கடிதம் மூலம் வழங்கியிருக்கின்றது என அதிகார சபையின் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

இம்முறைமேதினக்கூட்டத்துக்குக் காலிமுகத்திடலைக் கேட்டு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி அனுப்பியிருந்த விண்ணப்பம் இலங்கைத் துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை தனியார் நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# முள்ளிக்குளம் விடுவிப்பு; வடக்கு ஆளுநருடன் பேச்சு



மன்னார், ஏப்ரல் 1

மன்னார் முள்ளிக்குளம் கிராம மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிப்பது தொடர்பான அவசரக் கலந்துரையாடல் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தலைமையில் சென்ற ஆயர் இல்லப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயுடன் இது குறித்துப் பேச்சு நடத்தினர்.

முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிப்பது தொடர்பாக அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடுவதாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆயர் இல்லப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

முள்ளிக்குளம் கிராம மக்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 9 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (த-56)

# கேப்பாபிலவுக் காணிகள் மே 15க்கு முன் விடுவிப்பு

## கூறுகிறார் அமைச்சர் சுவாமிநாதன்

கொழும்பு, ஏப். 1

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவில் அமைந்துள்ள 279 ஏக்கர் காணிகள், எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன் விடுவிக்கப்படும் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

"கடந்த வாரம் அமைச்சருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின் விளைவாகவே கேப்பாபிலவில் உள்ள 279 ஏக்கர் காணிகளை மே 15ஆம் திகதிக்கு முன்னர் விடுவிப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு உறுதியளித்துள்ளது.

அந்தவகையில், கேப்பாப்பிலவிலிருந்து 248 ஏக்கர் காணிகளும், சீனியாமோட்டையிலிருந்து 31 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்படவுள்ளன.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கைக்கமைய 5 மில்லியன் ரூபா நிதி மீள்குடியேற்ற அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்படுமிடத்து, மேலும் 189 ஏக்கர் தனியார் காணிகளும் ஒரு மாத காலத்துக்குள் விடுவிக்கப்படும்.

இதன் பிரகாரம், மொத்தமாக 468 ஏக்கர் காணிகள் பாதுகாப்பு அமைச்சின் மூலமாக விடுவிக்கப்படும்" என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த-4)

# அரசுக்கு எதிராக முசலியில் மக்கள் கண்டனப் பேரணி

## புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்தி

மன்னார், ஏப். 1

முசலிப் பிரதேச மக்களின் வாழ்விடங்களையும், நிலங்களையும் கபளீகரம் செய்யும் புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக நீக்கக் கோரி முசலிப் பிரதேசத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் பின் கண்டனப் பேரணி நடத்தினர்.

இந்தப் பேரணி மறிச்சுக்கட்டி ஜும்மாப் பள்ளிவாசலில் தொழுகையின் பின்னர் பிற்பகல் 1.15 மணியளவில் ஆரம்பமாகி மறிச்சுக்கட்டி சக்கியா பள்ளிவாசலைச் சென்றடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் அரசுக்கு எதிராகப் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினர்.

மக்களின் பூர்வீகக் குடியிருப்பு நிலங்கள், விவசாயக் காணிகள், மேய்ச்சல் தரைகள், மேட்டு நிலக் காணிகள் என்பன புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வனபரிபாலனத் திணைக்களத்துக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு விடுவிப்பதற்கான முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்றுவருவதாகவும் குற்றம் சாட்டினர்.

குறித்த வர்த்தமானிப் பிரகடனம் வெளியிடப்பட்ட நாள் முதல் நேற்று வெள்ளிக்கிழமை வரையான 4 தினங்கள் முசலிப் பிரதேச மக்கள் மறிச்சுக்கட்டி சக்கியா பள்ளிவாசலுக்கு முன் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே நேற்றைய கண்டனப் பேரணி நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-56)





# காணாமற்போனோரைத் தேடி 4 மாவட்டங்களில் தொடரும் கவனவீர்ப்பு

## அரசு தொடர்ந்தும் பாராமுகம்

யாழ்ப்பாணம், ஏப். 1

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் அது தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்துமாறும் கோரி வடக்கின் 4 மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்தப் போராட்டங்கள் குறித்து அரசு தொடர்ந்தும் பாராமுகமாகவே இருக்கிறது எனப் போராட்டக்காரர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சிகந்தசுவாமிகோவில் முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை நாற்பதாவது நாளாகத் தொடர்ந்தது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நாளாந்தம் பல்வேறு அமைப்பினரும் அரசியல் தரப்பினர்களும் வருகை தந்து செல்கின்றனர்.

**வவுனியா**

வவுனியா ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக 36ஆவது நாளாக இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் நேற்றுக் கலந்துகொண்டார்.

இதன்போது பல தாய்மார் கண்ணீர் விட்டழுது தமது நிலைமைகளை விளக்கியிருந்தது டன் பிள்ளைகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

காணாமற்போனவர்கள் உயிருடன் திரும்பி வருவதற்கு எங்களால் முடிந்த எல்லா ஒத்துழைப்பையும் வழங்குவோம். மக்களின் எதிர்பார்ப்புக்களை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் முன்னர் இருந்த அரசுக்கு ஏற்பட்ட நிலையே இந்த அரசுக்கும் ஏற்படும் என்று அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இதுதவிர, முல்லைத்தீவில் 24 ஆவது நாளாகவும் யாழ்ப்பாணத்தில் 17ஆவது நாளாகவும் திருகோணமலையில்27ஆவது நாளாகவும் நேற்றும் போராட்டம் தொடர்ந்தது. (த-4)

# முரசுமோட்டை பாடசாலையின் பரிசளிப்பு இன்று

கிளிநொச்சி.முரசுமோட்டை புனித அந்தோனியார் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழ்மை பி.ப. ஒரு மணிக்கு அதிபர் செல்வி இ. இந்திரா தேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தின் வேண்டுதலின் பேரில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் அழைப்பின் பேரில் முதன்மை விருந்தி னராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.

விழாவுக்கு நிதிப் பங்களிப்பு வழங்கிய தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள், திக்கம் தங்க வேலாயுதம் அறக்கட்டளை நிறுவன இயக்குநர் தொழில் அதிபர் ரி.ஜங்கரன் ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளனர். (த-173)

# ஆட்சிக் கவிழ்ப்பு எண்ணங்கள் அனைத்துமே தவிடுபொடி

## கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஏப். 1

கடுமையான வறட்சியினால் நாடு அழிந்து போகும். அதனால் ஆட்சி கவிழும் என்று ஒரு சிலர் எதிர்பார்த்தனர். எனினும் அப்படியான நினைவுகள் தவிடு பொடியாகி விட்டன.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் பேண்தகு இலங்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கான கண்காட்சியை ஆரம்பித்து வைத்து நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தற்போது வறட்சி இல்லை. குளங்கள் நிரம்பியுள்ளன. இனிமேல் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே எமது இலக்காகும். இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு வேறுபட்டுள்ள அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் கைகோர்த்து செயற்பட முன்வர வேண்டும்.

விமர்சனங்கள் முன்வைப்பது ஜனநாயக நாடுகளின் சுபாவமாகும். எனினும் விமர்சனங்களுக்கு பின்னால் நாம் செல்லலாம். எமது இலக்குகளைச் சிறப்பான முறையில் வெற்றி கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். எமது இலக்கை வெற்றிக்கொள்வதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் கைகோர்க்க வேண்டும். அதன்போதே இலக்கை அடைந்துகொள்ள முடியும்.

அபிவிருத்தியின் போது எமது தேசத்தின் முறைமையைக் கையாள வேண்டும். எங்கள் மீது நாங்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். சவால்கள் வரும்போது சவால்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டும் என்றார். (த-5)

# முல்லைத்தீவில் முஸ்லிம்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வேண்டும்

## வலியுறுத்தி தொடர் போராட்டம் நேற்று ஆரம்பம்

"முல்லைத்தீவில் முஸ்லிம் மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்க வேண்டும். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டு அகதிகளாக வாழும் ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கு அரச காணிகளை வழங்க வேண்டும்"

இவ்வாறு வலியுறுத்தி முல்லைத்தீவு, முறிப்பு கொத்தியாகும்பம் கிராம விசாலிப்புத் திட்ட அமைப்பினரால் நேற்றையதினம் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.




முல்லைத்தீவு , கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவின் கீழுள்ள முறிப்பு கொத்தியாகும்பம் கிராம விசாலிப் புத் திட்ட அமைப்பினரால் நேற்று மாலை 5 மணி முதல் முல்லைத்தீவு மாங்குளம் முதன்மைச் சாலையில் நீராவிப்பிட்டி குமாரபுரம் சந்தியில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பிரத்தியேக கொட்டகை அமைத்து அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

"முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 77 குடும்பங்களுக்கு 1982ஆம் ஆண்டு அரசால் வழங்கப்பட்ட முறிப்பு கொத்தியாகும்பம் கிராம விசாலிப்புத் திட்டத்துக்கான காணிகள் இன்றுவரை அளவீடு செய்யப்பட்டு அதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள நாகன், சோலைதீவுக்காடு கிராம விசாலிப்புத் திட்டக் காணிகள் 1977ஆம் ஆண்டு 46 முஸ்லிம்களுக்கும், 56 தமிழர்களுக்கும் வழங்கப்பட்டன. அந்தக் காணிகள் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள நல்லு முறிப்பு அம்பலன் பற்று காணிகள் என்பன இன்றுவரை அரசால் அளவீடு செய்யப்பட்டு உரிய குடும்பங்களிடம் வழங்கப்படவில்லை. எனவே இந்த காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன், மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றி இன்று புத்தளம் பகுதியில் நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கும் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அவர்களும் முல்லைத்தீவில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர். (வ-21-102)

# வில்பத்து வர்த்தமானி; விரைவில் உரிய தீர்வு

## மைத்திரி வழங்குவார் என்கிறார் செயலாளர்

கொழும்பு, ஏப். 1

வில்பத்து வடக்கை மையப்படுத்திப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலால் எழுந்துள்ள பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அந்த மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில் பொருத்தமான தீர்க்கமான தீர்வை அரச தலைவர் வழங்குவார் என்று அரச தலைவரின் செயலாளர் பி.பி.அபேகோன் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் நேற்று உறுதியளித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனின் வேண்டுகோளின் பேரில் அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற பேச்சிலேயே இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார்.

மன்னார் மாவட்டச் செயலர் வை.தேசப்பிரிய, வனவிலங்கு, வன ஜீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரிகள், அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி, ஜம் இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் எம்.எம். முபாரக் மௌலவி, ஏ.சி.கலீல் மௌலவி, முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம். அமீன், உப தலைவர் ஹில்மி அஹமட், செயலாளர் எஸ்.ஏ. அஸ்ஹர் கான், மூத்த சட்டத்தரணி என்.எம். ஷஹீட் ஆகியோர் கலந்துகொண்டு புதிய வர்த்தமானிப் பிரகடனத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைத் தெளிவுபடுத்தியிருந்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் நௌபல், வில்பத்துத் தொடர்பான சகல ஆவணப்படங்கள், பட வரைவுகள் ஆகியவற்றுடன் அது தொடர்பான ஒளிநாடா விவரணங்களைச் சமர்ப்பித்து அந்தச் சரணாலயத்தின் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியதுடன் மக்களுக்கு உரித்தான காணிகளும், குடியிருப்புக்களும், மேய்ச்சல் நிலங்களும் வர்த்தமானி மூலம் எவ்வாறு கபளீகரம் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்தினார்.

இதனையடுத்தே அரச தலைவரின் செயலாளர் பி.பி.அபேகோன் இந்த விவகாரத்தை அரசதலைவர்மற்றும்தலைமை அமைச்சரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு செல்வேன் என்றும், அரச தலைவர் இதற்கு விரைவில் உரிய தீர்வை முன்வைப்பார் என்றும் உறுதியளித்தார். (ந-4)

# 15 சீனிக் கொள்கலன்களை தடுத்துவைத்துள்ள மைத்திரி

கொழும்பு, ஏப். 1

நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான தாமதக் கட்டணத்தைச் செலுத்தாமல் கொழும்புத் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படவிருந்த 15 சீனிக் கொள்கலன்கள் அரச தலைவரின் உத்தரவால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வார ஆரம்பத்தில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த 15 கொள்கலன்களினதும் தாமதக் கட்டணத்தை அறவிடாமலே அவற்றை விடுவிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தத் தீர்மானம் அரச தலைவரால் நிராகரிக்கப்பட்டதுடன், அந்தக் கொள்கலன்களைத் தடுத்துவைக்குமாறு துறைமுக அதிகாரசபைக்கும் அவரால் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

பிரேசிலிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்தக் கொள்கலன்களில் போதைவஸ்துகள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாகவே நூறு கோடி ரூபா வரை தாமதக் கட்டணம் செலுத்தவேண்டியிருந்தது.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மேலதிக அறிவுரைகளை வழங்கும் வரை அந்தக் கொள்கலன்கள் தடுத்துவைக்கப்படுமெனத் துறைமுக அதிகாரசபை வட்டாரங்கள் கூறின. (ந-4)



வயாவிளான் மத்திய கல்லூரி தொழில்நுட்ப பீடம் திறப்பு விழாவும் புதிய கட்டட அடிக்கல நாட்டு விழாவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. முதன்மை விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.பி.செல்வின் இரேனியஸ்,தெல்லிப்பழை கோட்டக்கல்வி பணிப்பாளர் மா.ஆனந்தராஜா ஆகியோர் கலந்து தொழில்நுட்ப பீடத்தைத் திறந்துவைத்தனர் (வ-[illegible])

### உணவு ஒறுப்பில் ஈடுபட்ட

# மாணவர்கள் மூவர் மயங்கிச் சரிந்தனர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட உணவு ஒறுப்பு போராட்டத்தில் 3 மாணவர்கள் நேற்றிரவு மயங்கிச் சரிந்தனர். அவர்கள் மூவரும் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

"13 மாணவர்கள் மீது விதிக்கப்பட்ட வகுப்பு தடையை நீக்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த புதன் கிழமை பல்கலைக்கழகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டம் மறுநாள் வியாழக்கிழமை உணவு ஒறுப்பாக மாற்றம் அடைந்தது.

உணவு ஒறுப்பு போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று இரவு அதில் ஈடுபட்ட 3 மாணவர்கள் மயங்கிச் சரிந்தனர். அவர்கள் உடனடியாக சக மாணவர்களால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்"என்று மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (வ-21)

# கடத்தல்கள், சித்திரவதைகள் மைத்திரியின் ஆட்சியிலும் தொடர்ச்சியாக நடக்கின்றன

## *ஐ.நாவின் மீளாய்வுக்கு அறிக்கை முன்வைப்பு*

இலங்கையில் மைத்திரி- ரணில் ஆட்சியிலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கடத்தல் மற்றும் சித்திரவதைகள் தொடர்பில் சாட்சியங்களுடன் கூடிய ஆவணமொன்று ஐ.நா மனித உரிமைகள் சபையின் மீளாய்வுக்கு பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா ஜொஹான்ஸ்பேர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் இலங்கையின் உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் (ஐ.ரி.ஜே.பி) என்ற அமைப்பே 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரை மைத்திரி ரணில் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற 48 கடத்தல் மற்றும் சித்திரவதைச் சம்பவங்களை உள்ளடக்கிய இந்த ஆவணத்தை ஐ.நா மனித உரிமைகள் சபையின் மீள்பார் வைக்கு முன்வைத்துள்ளது.

ஐ. நாவின் உறுப்பு நாடுகளில் நிலவும் மனித உரிமை நிலைமைகள் காலத்துக்குக் காலம் காத்திரமான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மீளாய்வுச் செயற்பாட்டின் 28 ஆவது கூட்டம் இலங்கை தொடர்பில் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (வ-21)

# நெல்லியடி லயன்ஸ் கழகத்தால் 100 பேருக்கு வாழ்வாதார உதவி

நெல்லியடி, ஏப். 1

பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தால் 100 பயனாளிகளுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

"இந்த நிகழ்வு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நாளை மு.ப.10.30 மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் லயன் மருத்துவர் தியாகராசா, லயன் சீமாட்டி திருமதி ரஞ்சிதமலர் தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டு நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் சார்பில் வாழ்வாதார உதவிகளை வழங்கி வைப்பர்.

நிகழ்வில் 60 ஆயிரம் ரூபா செலவில் 75 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், 75ஆயிரம் ரூபா செலவில் 5 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் ஒரு மாணவனுக்கு 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பார்வைக் கண்ணாடி மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் சில குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்படும்" என்று நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர். (வ-173)

# மணல் கடத்தியோரிடம் ரூ. 40,000 தண்டம் அறவீடு

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய நால்வருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிவான் மன்று .

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அனுமதிப் பத்திரமின்றி கச்சாய்ப் பகுதியில் மணல் ஏற்றியபோது கொடிகாமம் பொலிஸாரால் நால்வரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மணல் கடத்தப் பயன்படுத்திய உழவு இயந்திரமும் மணலும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். இதேவேளை ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் சாவகச்சேரி நீதிவான் மன்றால் விதிக்கப்பட்டது. (வ -9)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### *இந்திய...*

வர்களும் மன்னாரில் பிடிபட்ட 8 பேரும் இவ்வாறு விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4- 101)

### *பாடசாலைச்...*

வர்களில் பெரும்பாலானோர் விளையாட்டுக்களில் தமது திறமைகளை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டி வருகின்றனர். தங்கள் சீருடையை அழுக்கடையாமல் வைத்திருக்கவே மாணவர்கள் விரும்புகின்றனர். இதற்காக, ஒன்றுக்கு மேற்பட்ட நிறங்களை அறிமுகப்படுத்தி அதில் விரும்பிய நிறத்தைத் தமது மாணவர்களுக்குப் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பாடசாலைகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளைநிறச் சீருடையை அணியும் பாடசாலைகள் இலங்கையில் மாத்திரமே காணப்படுகின்றன.

இதற்காக நான்கு அல்லது ஐந்து நிறங்களைப் பாடசாலைகளுக்கு வழங்கி, நிர்வாகம் தெரிவு செய்யும் நிறச் சீருடைகளை அவ்வப் பாடசாலைகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கத் திட்டமிட்டுள்ளது.

எனினும், இந்தத் திட்டம் எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்து தீர்மானிக்கப்பட வில்லைஎன்றார்.மழை மற்றும் அதிகூடிய புழுதிக் காற்று வீசும் காலங்களிலும் பிற சந்தர்ப்பங்களிலும் வெள்ளை நிறச் சீருடை அணிவதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக ஏற்கனவே அபிப்பிராயங்கள் இருந்து வரும் நிலையில் கல்வியமைச்சின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ந-4)

### *சவேந்திர...*

இலங்கை இராணுவத்தின் 28ஆவது பொது உதவி அதிகாரியாக அவர்நேற்றுப்பதவியைப் பொறுப்பேற்றார்.

இராணுவத் தலைமையகத்தில்இராணுவத் தளபதிக்கு உதவியாக அவர் நிர்வாகப் பணிகளை முன்னெடுத்துள்ளார். இதற்கு முன்னர் இவர் இராணுவத்தின் 53 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகபணியாற்றி வந்தார். போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆள் கொணர்வு மனுக்கள்தொடர்பான விசாரணைக் காக மேஜர்ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை விடுப்பது தொடர்பாகஅடுத்த ஏப்ரல் 27ஆம் திகதி தீர்மானிக்கவுள்ள நிலையில், அவர் இந்தப் புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இறுதிக்கட்டப் போரில், இராணுவத்தின் 58ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, போர்க்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிலையிலும், இராணுவத் தலைமையகத்தில் முக்கிய பதவி ஒன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# காச நோய்க்குச் சிகிச்சை பெற மறுப்பவர் மீது எதிராகப் பிடியாணை

சாவகச்சேரி, ஏப். 1

காச நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் நபரைக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தர விட்டது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உசன் பகுதியைச் சேர்ந்த ஒருவர் யாழப்பாணம் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் கடந்த டிசம்பர் மாதம் சிகிச்சை பெற்றார். அவருக்கு காச நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கோப்பாய் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் ஆறு மாதங்கள் சிகிச்சை பெறுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அவர் இதுவரை தொடர் சிகிச்சை பெறவில்லை. சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரப் பரிசோதகர் வலியுறுத்திய போதிலும் அவர் சிகிச்சை பெற மறுத்துள்ளார்.

"உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய காச நோய்க்கு சிகிச்சை பெற மறுத்து வருகிறார். ஏனையோருக்கும் உயிராபத்தை விளைவிக்கக்கூடிய நோயைப் பரப்பும் விதத்தில் அவர் செயற்படுகிறார். சிகிச்சை பெறுமாறு அறிவுரை கூறும் பொது சுகாதார பரிசோதகரை கடமையைச் செய்ய விடாமல் அவர் தடுத்து வருகிறார்" என்று பொதுச் சுகாதார பரிசோதகரால் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த நபரை கோப்பாய் மார்பு நோய் சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெறுவதற்கும் அல்லது வேறு இடத்தில் வைத்து சிகிச்சை வழக்குவதற்கும் உத்தரவிடுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நீதிமன்றில் அறிக்கையிட்டுள்ளார். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், குறித்த நபரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பித்தார். அவரைக் கைது செய்து எதிர்வரும் ஐந்தாம் திகதி நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (வ - 9)

# வெளியீட்டு விழா

புதிய நதியா நகை மாடத்தின் அனுசரணையுடன் கவிஞர் வேலணையூர் சுரேசின் 2 படைப்புக்களின் வெளியீட்டு விழா மண்கும்பான் விநாயகர் மணிமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சைவப்புலவர் வே.கமலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள அச்சகத்திறகு பெண் வேலையாள்கள் தேவை. (புத்தகம் கட்டுனர்) பழக விரும்புபவர்களும்

**கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

076 769 3903

**தேவை**

லொத்தர் விற்பனை செய்வதற்கு ஆள் தேவை. (நல்லூர்)

T.அன்பழகேந்திரன் 077 568 3882

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி, கரந்தன் - ஊரெழு பிரதான வீதியில் 8பரப்பு வாழைத்தோட்டத்துடனான காணி விற்பனைக்கு உண்டு. (69337) (14,18,20)

தொடர்பு: 077 968 7745

**வெளிவந்துவிட்டது**

குவி அச்சகத்தின் புதிய வெளியீடுகளாக
- Practise your Grammar Grade-8
- விஞ்ஞானம் தரம்-10 (வினாவிடை பயிற்சி நூல்)
- கணிதம் தரம்-7 (தமிழ் மொழி மூலம் & English Medium)
- கணிதம் தரம்-8 (தமிழ் மொழி மூலம் & English Medium)
- Happy Kids English Grade-1

சகல புத்தகக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

K.V.Printers Book Distributing Center
355, Clock tower Road, Jaffna.
T.P: 021 720 0237

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



Congratulations Congratulations

யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மாணவியாகிய

**செல்வி வாணிதாசன் கிருஷனா [தமிழ்]**

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 7 A, B, C ஆகிய பெறுபேற்றை பெற்றமைக்காக வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மா (பாசமலர்), அப்பப்பா (முத்துலிங்கம்)
அப்பம்மா (பிறேமாவதி), அத்தை (பிரியதர்ஷினி NORWAY)
மாமா (குபேந்திரன் NORWAY)
சித்தப்பா (ஸ்குடியோ ராஜ் நாலுகால்மடம்)
சித்தி (மேனகா), நந்தன் மாமா, குஞ்சன்ரி, அன்பு மாமா, கௌரிமாமி

மேலும் இப்பாடசாலையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் மனமார வாழ்த்துவதோடு பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

தொலைபேசி இல. 077 927 1613

**பிரத்தியேக வகுப்புக்கள்**

தரம் 06 - O/L கணிதம், வரலாறு, குடியுரிமை, வீடுகளுக்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். குழு வகுப்புக்கு குறைந்த கட்டணம். O/L Day Class மாணவர்களுக்கு விசேட வகுப்புகள்.

**யாழின் பிரபல ஆசிரியர்**

078 491 4259

**காணி விற்பனைக்கு**

மன்னார் ஸ்ரேடியம் சந்தியில் இருந்து 25m தூரத்தில் மூர் வீதியில் அமைந்துள்ள 6.3 பேர்ச் காணியுடன் சிறிய வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு.

077 958 3343

**வேலையாள்கள் தேவை**

புத்தளத்தில் அமைந்துள்ள இறால் பண்ணைக்கு நிரந்தரமாக தங்கி வேலை செய்வதற்கு பணியாள் தேவை. வாரம் 6.000/= சம்பளத்துடன், தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும். நபர் தங்குவதற்கும், குடும்பத்துடன் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

077 678 6312, 077 833 2297

**யாழ்ப்பாணம் பலநோ.கூ.சங்கம்(வ.து)**
**அங்கத்தவர்களில் வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்**

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலின் பிரகாரம் 31.03.2017 இல் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதிடைய வாக்காளர் இடாப்பின் பட்டியல் இன்று 01.04.2017 ஆம் திகதி முதல் 20.04.2017 ஆம் திகதி வரை உரிய கிளை நிலையங்களில் லீவு நாள்கள் தவிர்ந்த கடமை நேரமாகிய காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையிலும் காட்சிப்படுத்தப்படுகின்றது. ஏனைய பின்வரும் விவரப்படியான 12 கிளைகளுக்குரிய வாக்காளர் பட்டியல்கள் . இல.127, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக கட்டடத்தின் 2ஆம் மாடியில் கடமை நேரங்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும் காட்சிப்படுத்தப்படுகிறது.

| கிளை இல. | கிளைப்பெயர் |
|---|---|
| 3C | முஸ்லிம் தெரு |
| 04 | ஓட்டு மடம் |
| 10 | யாழ்பாடி |
| 13 | கைலாசபிள்ளையார் |
| 14 | ஆனைப்பந்தி |
| 15 | ஆரியகுளம் |
| 16 | நீராவியடி |
| 26 | மூத்த விநாயகர் |
| 28 | ஸ்ரேஷன் சந்தி |
| 31 | மவுண்காமல் |
| 33 | சென் அன்ரனீஸ் |
| 35 | சின்னக்கடை |

மேற்படி வாக்காளர் இடாப்பு தொடர்பில் அங்கத்தவர்களின் உறுப்புரிமை தொடர்பிலும் வாக்குரிமை தொடர்பிலும் ஏதேனும் குறைபாடுகள், திருத்தகள் இருப்பின் அவை தொடர்பாக 24.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் " செயலாளர் " யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இல.127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கூட்டுறவுச் சங்கத்தின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் மட்டுமே கிளைப் பொதுச்சபைக் கூட்டகளுக்கு சமுகமளிக்கவோ, வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்கள் ஆவர். (முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாக சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ததுடன் ஒரு முழுப் பங்கு ரூபா 100.00 ஐச் செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்)

நெறியாளர் குழு கட்டளைப்படி.

**திருமதி.சி.சிவகுமார்**
**செயலாளர்**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



2016 க.பொ.த (சா.தர) பரீட்சையில்

**8A,C**

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற

**செல்வி சதீஸ்கரன் சயிந்தா** அவர்களை

வாழ்த்துகின்றோம்

**பாடசாலைச் சமூகம்**

**கிளி/ ஞானிமடம் அ.த.க.பாடசாலை ஞானிமடம் பூநகரி.**

Best Wishes

STUDY IN CANADA

"Study in Canada... Step up in Life"

PROGRAMS OFFERED
- INFORMATION TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION
- HOTEL MANAGEMENT

NO IELTS REQUIRED
Scholarship available
Work Permit after graduation
PR options Available

St.Clair College, Windsor, Ontario

Pathway programs : JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!

First semester in INDIA March'17, Rest in CANADA September'17

Also available direct study programs
Admission for May and September 2017

ICGE

TIES, 273, Main street, Northern Province, Jaffna, Srilanka

admission@ICGE.education
admission@THIGUVI.com
www.ICGE.education
(+94) 021 45 48464

STUDY IN CANADA ICGE
www.ICGE.education

Admission for May and September 2017

Niagara College Canada | CONESTOGA | ST.CLAIR

Why CANADA?
- Work Permit after graduation
- Permanent residency options
- Earn-While –U – Learn options

Courses offered
Diploma, bachelor and post graduate courses

Why ICGE?
- Since 1998 – The oldest and largest counseling organization in the sub continent
- Counselors – Not Agents
- On Spot interview
- Complete Guidance – Admission to graduation, Travel and stay arrangements, change of status

admission@ICGE.education
admission@THIGUVI.com
273, Main street, Northern Province, Jaffna, Srilanka
(+94) 021 45 48464
MDP Srilanka
TIES

# ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் -2016

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**
*ஆங்கிலமொழி மூலம்*
9ஏ
எஸ்.நிலோதமன், எஸ்.சௌமிகா, பி.சாரங்கி, ஜி.சஞ்கீரணி, ரி.ரூபவதனா, வி.ஜனார்த்தனி

*தமிழ் மொழி மூலம்*
ஜெ.அபிராஜ் 8ஏபி, என்.மயூரா 7ஏ2பி, எஸ்.யேர்லின் கிராஷியா 7ஏபிசி, எம்.மதுசன் 7ஏபி. எஸ், ஆர்.சைலஜா 6ஏ3பி, எஸ்.நிலோஜனா 6ஏ3பி.

**யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**
ஜோ.கர்மி 8ஏஎஸ், டெ.ஷீபா 7ஏபிசி, ப.மேரி தனுஷா7ஏபிஎஸ், டி.பிரவீனா 4ஏ4பிஎஸ், றொ.அஜந்தினி 4ஏபி3சி, சு.தமிழினி 3ஏ3பிசிஎஸ். றெ.இதயநிலா 3ஏபி3சிஎஸ்.,அ.ஆன்.டென்சியா 2ஏ3பி2சிஎஸ், ப.டெனோஷியா 2ஏபி4சி2எஸ், வி.சிந்துக்கா 2ஏபி4சிஎஸ், டொ.ஜெனிபர் 2ஏ4சி2எஸ், கி.மேரிஜெனுயா 2ஏசி4எஸ்.

**கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்**
வி.சோபிகன் 7ஏபிசி, த.மாதுரி 5ஏ3பிஎஸ்,பே.ஜனனன் 4ஏ3பி2எஸ், த.பிரணவன் 3ஏ3பி3சி,ச.கேசிகா 3ஏ3பி2எஸ், இ.கேதா 3ஏ2பிசிஎஸ்,ஜெ.கிருஸ்ணி 3ஏபி3சி,ஜெ.நித்தியா 2ஏபி4சிஎஸ்,சோ.சாமந்தி 2ஏ3சி3எஸ், ஜெ.டமிஸ்கா 2ஏ4சி2எஸ்,சி.தாரங்கினி 2ஏபி3சி2எஸ், ச.பிரியங்கா 2ஏ5சிஎஸ்.

**வ /திருஞானசம்பந்தர் வித்தியாலயம்**
யோ.கலிஸ்தா 6ஏ2பிஎஸ், யோ.பவித்ரா 6ஏ2பிஎஸ், கு.கிருஷாந்தா 6ஏ2பி2சிஎஸ், க.கிப்ஷன் போல் 5ஏ2பி2சி,செ.அஜந்தன் 4ஏ2பி2சிஎஸ்

**விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்**
ந.கார்த்திகன் 6ஏபிசி,சி.சிவலக்சியா 2ஏ3பி2சி2எஸ், அ.சிவடர்சி ஏ5பிசி2எஸ், சொ.மதுரசன் ஏ5சி3எஸ்.

**யா/சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்**
அ.அனார்த்தனி 6ஏபிசிஎஸ், இ.ஜதுஷா 4ஏ2பி2சிஎஸ், கே.டிலக்சனா 4ஏ2பி2சிஎஸ், ச.பிரியங்கன் 4ஏபி3எஸ்,ஸ்ரீ.பிரதீபன் 3ஏ2பி2சிஎஸ்,சி.திசான் 2ஏ4பிசி2எஸ், சி.டனிசன் 2ஏ2பி2சி2எஸ், சு.நிதாபன் 2ஏ2பி2சி2எஸ், இ.துபாறஷன் 2ஏபி5சி, ஸ்ரீ.பவதாரணி 2ஏ2சி5எஸ், ம.அனித்தா 2ஏ2சி3எஸ்.

**யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி**
கு.விதுஷா8ஏஎஸ், ப.பானுமதி 8ஏ, து.லக்ஷாயினி 7ஏபிசி , பா.மினுஷா 7ஏசிஎஸ், செ.பானுஜா 6ஏபிசிஎஸ், அ.சகீதா 6ஏபிசி, மோ.கொலின்ஸ்6ஏ2பிசி, யோ.கேதுஜா 5ஏ2பிசிஎஸ், ச.சண்முகப்பிரியா 4ஏ2பிசிஎஸ்.

**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்**
தர்மினி 7ஏபி, ம.சுயானா 4ஏ4பிஎஸ், த.வினோசன் 2ஏபி4சிஎஸ், சி.விஜிந்தன் ஏ2பி5சி, ர.கேதினி ஏ5சி2எஸ், ம.மோகனரூபி ஏ3சி4எஸ், த.ஜோதிகா பி2சி5எஸ், தி.கனிஷ்டன் 4சி3எஸ், தே.சாருஜன் சி7எஸ்.

**ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.**
ம.பிரகாசன் 7ஏசி, ப.டிலக்சன் 6ஏபிசிஎஸ், ஜெ.டிலக்சன் 3ஏ3பி2சிஎஸ்,த.யதுசிகா 2ஏ5பிசிஎஸ்.

**புத்தூர் பூதகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி.**
60 வருடகால வரலாற்றில் முதல் முறையாக நவரட்ணம் கவிஷ்ணா 8ஏசி.


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன்

(ஓய்வு நிலை நீதிமன்றப் பதிவாளர் - சாவகச்சேரி - சமாதான நீதிவான் )



அன்னை மடியில் - 20.04.1943
ஆண்டவன் அடியில் - 29.03.2017

யாழ். நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கு மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் 29.03.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - லட்சுமியம்மா தம்பதியினரின் அன்புப் மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரதியின் (ஓய்வு நிலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், லக்ஷி(ஐக்கிய அமெரிக்கா), கௌஷி(கனடா), நிலுஷி(கனடா), அனுஷி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன், சிவகுமார், செந்தூரன், லக்ஷ்மணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவிதா, அபிஷேக், ஷியான், லவீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளிநாயகி, காலஞ்சென்ற பத்மநாதன், சிவயோகநாதன், தில்லைநாயகி, கணேசநாதன், ரஞ்சிதநாயகி, காந்திநாயகி, டேவிட் திருலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கராஜா, சந்திரலிங்கராஜா மற்றும் ராஜா, தர்மபூபதி, பாக்கியலிங்கம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணிக்கு St. John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Rd, Toronto, ON M4L 1S7, Canadaவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவாலய வீதி, நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**


## 'ஏழுகடல் கன்னிகள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 1
கடலையும் கடல் சார்ந்த மனிதர்களின் பாடுகளையும் அவர்களுடைய கதைகளையும் பேசும் 'ஏழு கடல் கன்னிகள்' என்ற நூலின் வெளியீடும் விமர்சன அரங்கும் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியிலுள்ள யாழ். பீச் இன் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
சிறந்த ஒளிப்பதிவாளரும் கூத்துக் கலைஞரும் புலம்பெயர் எழுத்தாளருமான தமயந்தி எழுதியிருக்கும் இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வு சத்தியதேவன் தலைமையில் நடைபெறுகிறது. விமர்சன உரைகளை யதார்த்தன், சுகு ஸ்ரீதரன், தமிழ்க்கவி, தர்ஷன் அருளானந்தம், கபில் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோர் ஆற்றுகின்றனர். ஏற்புரையை தமயந்தி நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## சகவாழ்வு சங்கம் நல்லூரில் நிறுவல்

யாழ்ப்பாணம், ஏப். 1
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பிரதேச சகவாழ்வுச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. அதன் தலைவராக எஸ்.மோகனதாசும்,செயலாளராக திருமதி சி.பி.கௌசல்யாவும்,பொருளாராக ந.சர்வகுணசீலனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சங்க உருவாக்கமானது தேசிய சகவாழ்வு.கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் அறிவுறுத்தற்கமைய, அரச கரும மொழிக்கொள்கை மற்றும் இனங்களுக்கிடையே சகவாழ்வை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-12)

## சந்நிதியான் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.ஏப்.1
சந்நிதியான் அற்புதங்கள் நூல் வெளியீடு எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நிகழ்வில் அருளாசியுரையை செல்வச்சந்நிதி ஆலய முதன்மைக் குரு சிவத்திரு ஆறு.சிவசண்முக ஐயரும், வெளியீட்டுரையை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப்பிரிவு மூத்த விரிவுரையாளர் அ.குமாரவேலும் நிகழ்த்துவர் என்று அறிவிக்கப்பட்டது.
(வ-12)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
09 . 10 . 1961

உதிர்வு
01 . 04 . 2015

### திருமதி பாமா விஜயஸ்ரீ

*திதி: துவாதசி வளர்பிறை (07.04.2017)*

ஈராண்டுகள் சென்றதெப்படியோ அம்மா
பாரெங்கு தேடினும் உனைப்போலொருத்தி வருமோ
தேர் போல நீயசைந்து வருதல்
எம் மனக்கண்ணில் தெரியுதம்மா
யார் பாவி கண்ணெறிபட்டதோ
உனைக் காலன் கவர்ந்திட ?

**என்றும் உன் நினைவுடன்**
**கணவர்: மா.விஜயஸ்ரீ**
(ஓய்வு நிலை - இ.மி.ச. மின்பொறியியலாளர்)
**மகன்: வி.கஜானனன்**
(யா/புனித ஜோன் பொஸ்கோ மாணவன் தரம் - 4C)

**" முருகன் இல்லம் "**
**அரசடி வீதி,**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**



## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி (சாமி அம்மா) நடராஜா



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி (சாமி அம்மா) நடராஜா 30.03.2017 வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராஜாவின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், அமிர்தலிங்கம் மற்றும் பற்குண சிங்கம்(கனடா), பரமேஸ்வரி (கிளி), யோகேஸ்வரி (ராசு), கனகேஸ்வரி(குஞ்சு) காலஞ்சென்ற விசயா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி(முத்து மச்சாள்), நகுலேஸ்வரி, பேரின்பநாயகி, சோமசேகரம் (சோமு), கந்தசாமி (கந்தர்), செல்வராசா காலஞ்சென்றவர்களான இராசையா, ரட்ணம், மகேஸ்வரி, பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் சிறீஸ்கந்தராஜா(சிறி), ரவீந்திரராஜா(பவா - இந்தியா), நாகேஸ்வரி (வசந்தி) காலஞ்சென்றவர்களான விமலேஸ்வரி(விமலா), விக்னேஸ்வரராஜா(ராசன்) மற்றும் குகேஸ்வரி (ராணி), புவனேந்திரராஜா(இந்திரன்), புவனேஸ்வரி(ஈஸ்வரி), நிர்மலாதேவி(செல்வி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரலீலா(பேபி), மகாலட்ஸ்மி(ராதா), சிவகுமாரி (சிவா), சந்திரன், செந்தில்நாதன்(கண்ணன்), கந்தசாமி, சதானந்தன்(சதா), தேவகுமார்(கலினா) ஆகியோ ரின் பாசமிகு மாமியும் துஷியந்தன்(காந்தன்), நிரஜா, தனுஜா, கீர்த்தி, ஜனா, நிஷாந்தன், மேனகா, கஜன், அனுஷா, ஆதவன், ஐங்கரன், தர்சன்,கௌதமன், விதுஷா, சினேகா, அஜெய், சஞ்சை, சங்கீதா, துர்ஷிகன், வாசு, மதுஷா, மதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தரணி, ஆரணன், கிஷோரி, ஜீவி, சந்ஜித், ஆரியா, அஜன், அர்யூன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(02.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோயில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 609 9887/ 077 631 4196**

# கசிப்பு உற்பத்தி செய்த மூவரிடம் ரூ. 120,000 தண்டப் பணம் அறவீடு

சாவகச்சேரி, ஏப். 1

சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கெற்பேலி மத்தியைச் சேர்ந்த மூவருக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்த சாவகச்சேரி நீதிவான் மன்று, அவர்களுக்கு ஐந்து வருடாங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனையும் வழங்கி உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கெற்பேலி மத்தியில் உள்ள பற்றைப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 10 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் அதனை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த மூவருக்கு எதிராக சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை 10 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முன்வைக்கப்பட்டன.

வழக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

முதலாவது குற்றச்சாட்டுக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், இரண்டாவது மூன்றாவது குற்றச்சாட்டுக்களுக்குத் தலா ஒரு வருட சிறைத்தண்டனை விதித்தார். இந்தத் தண்டனைகளை ஐந்து வருடாங்களுக்கு ஒத்தி வைக்கப்படுவதாக நீதிவான் கட்டளையிட்டார்.

மூன்றாவது குற்றவாளி குற்றப் பணம் செலுத்தாததால் அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மன்று உத்தரவிட்டது. (வ - 9)

# சைக்கிளைத் திருட முயன்றவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்

யாழ்ப்பாணம்,ஏப். 1

யாழ்ப்பாண நகர் மணிக்கூட்டு கோபுர வீதியில் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை திருட முயன்றவரை அந்தப் பகுதியில் நின்றவர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து யாழ்ப் பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

"வீட்டின் முன்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்றை ஒருவர் திருட முற்பட்டுள்ளார். இதனை அந்தப் பகுதியில் நின்றவர்கள் அவதானித்துள்ளனர். அவர்கள் உடனடியாக திருடனைப் பிடித்து நையப்புடைத்தனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கும் அவர்கள் தகவல் வழங்கினர்.

இதையடுத்து சம்பவ இடத்துகக்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக"

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.03.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

**திருமதி லக்ஷி நந்தகுமார்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 31.03.2017 வெள்ளிக்கிழமை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 02.04.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு **இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நீராவியடி** (இந்துக் கல்லூரி அருகில்) யிலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

**சின்னத்துரை சிற்பாலயம்**
**118, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

(AJA/2879) (22,17)

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.03.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

**வேலுப்பிள்ளை பேரம்பலம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியநிகழ்வு 04.04.2017 செவ்வாய்க்கிழமை மதியம் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மீசாலை வடக்கு,**
**வேம்பிராய்,**
**கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**
**077 615 4078,**
**075 927 8025**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 03 . 1937



இறப்பு 01 . 04 . 2010

**திருமதி மேரி யோசவின் பாக்கியநாதர்**

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

**"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்"**

**(யோவான் 11.25)**

அன்புடன் நினைவு கூரும்

**கணவர்:**
**அ.பாக்கியநாதர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைக்ள் மற்றும்**
**உறவினர்கள், நண்பர்கள்.**

**"மரியன்ஸ்"**
**கல்லூரி வீதி,**
**மானிப்பாய்.**
**077 635 9240**

## மரண அறிவித்தல்



**சிவசம்பு திருஞானசம்பந்தன்**

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிட மாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு திருஞானசம்பந்தன் 30.03.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கொட்டாஞ் சேனை வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் நல்லம்மாவின் அன்புக்கணவரும் கெங்காதேவி, வைகுந்தவாசன் (சிறீ), ஞானதேவி, ராசகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராசம்மா மற்றும் அன்னபாக்கியம், கணபதிப்பிள்ளை, இராசேந்திரன் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சபாநாயகம், சோதிநாதன் காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனரும், சிவகுமாரன், ராதிகா, சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீஹரன், யாழினி ஆகியோரின் மாமனாரும், மகிஷனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**174/12, கோவில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**கந்தையா கணேசபிள்ளை**

மண்மகிழ 01 . 05 . 1938



விண்நெகிழ 31 . 03 . 2017

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கணேசபிள்ளை (காசாளர் யாழ்ப்பாணம் லைடன் புடைவை தொழிற்சாலை) 31.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா அழகம்மா தம்பதியரின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனியின் அன்புக் கணவரும் கிருபாகரன் (ஜேர்மனி), பிரபாகரன்(சுவிஸ்) காலஞ்சென்ற திவாகரன் மற்றும் சுதாகரன் வாசுகி(ஜேர்மனி), தேவகி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவா, ரஜனி, சுசீலகுமார், கணேசகுமார் துசி ஆகியோரின் அன்பு மாமனாரும் காண்டீபன், திசாலினி, சாரங்கா, பிரவீனா,பிரண்வி, அபிநதன்,சுஜீதா, விஜிதா, சஜிதா, விதுஷன், பிரதீசன், அபிசன், டிலக்ஷன், லதுஷன், நவ்வியா ஆகியோரின் அன்புப் பேரனும் நோயரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், இராசம்மலர், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலன் (சிப்பாள்) காலஞ்சென்ற தேவபாலன், காலஞ்சென்ற கந்தசாமி காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் வசந்தகுமாரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.04.2017) திங்கட்கிழமை மு.ப 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குளப்பிட்டி லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்**

## 80 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

அமரர்

**நாகேஸ்வரி வரதலிங்கம்**

மண்ணுலகில்
22.09.1933

விண்ணுலகில்
22.09.1933



அன்புடன் பாலமுதமூட்டி சீராட்டி தாலாட்டி
வளர்த்த மடியைத் தேடுகிறேன் - அம்மா
உன் பொன்னுடல் மேல் ஏந்தித் தாங்கிய
கைகளைத் தேடுகிறேன் - அம்மா
என் வாழ்விற்கு ஒளியூட்டி உயிரூட்டி
வளர்த்த தெய்வமே
பாசமுடன் எனை அணைத்து - என்னையே
நினைத்து வாழ்ந்த - அம்மம்மாவே
மறு ஜென்மம் என்றிருந்தால் - மீண்டும்
என் அம்மம்மாவாக வருவீர்களா??
உங்கள் எண்பதாவது பிறந்த நாளை
மறந்தனையோ ?
வானவருடன் கொண்டாடி மகிழுங்கள்

**கயல்விழி ராஜாராம்** (மகள்)
**சகானா ராஜாராம்** (பேர்த்தி)

# யாழ். நீதிவான் மன்ற பதிவாளரின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ்ப்பாண நீதிவான் மன்றில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சான்றுப்பொருள்களை உரிமையாளர்கள் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்தார்.

"பொலிஸாரால் எம்பி. பிஈஈ 7754 இலக்க பல்சர் வர்க்க கறுப்பு, சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் மற்றும் கெல்மட் 1, இலக்கம் தெளிவற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி 1, எம்பி. எக்ஸ்வை 4128 இலக்க சபாரி வர்க்க மோட்டார் சைக்கிள் 1, இலக்கம் தெளிவற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி 1 ஆகியனவே உரிமைகோரப்படாமல் உள்ளன. உரிமை கோருபவர்கள் எவராயினும் 2 மாத காலப்பகுதிக்குள் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று அவர் தெரிவித்தார். (வ)

# அரசியல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.1

'ஜெனிவாக் களமும் தமிழ்த் தலைமைகளும்' கருத்துரையும் கலந்துரையாடலும் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் என்.இன்பம் தலைமையில் நடைபெறும் என்று தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம் அறிவித்தது. (வ)

# தெரு மின் விளக்குகள் அமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஏப். 1

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மருத்துவர் வீரசிங்கம் சாலையின் வளைவுப் பகுதியில் தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபையினரிடம் அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். "சாவகச்சேரி - கச்சாய் சாலையில் ஆரம்பித்து அல்லாரை - மீசாலை ஊடாக ஏ-9 சாலையை மீசாலை - புத்தூர் சந்தி வரை சென்றடையும் சாலையாகும். அத்துடன் சங்கத்தானை சாவகச்சேரி வடக்கு அல்லாரை உள்ளிட்ட 5 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பயணிக்கும் சாலையாக மருத்துவர் வீரசிங்கம் சாலை உள்ளது.

சாலையின் பல்வேறு இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும், கண்ணன் கோவிலுக்கும் அம்பாள் ஆலயத்துக்கும் இடையே உள்ள சாலை வளைவில் தெரு விளக்கு பொருத்தப்படவில்லை. இதனால் இரவு வேளைகளில் பயன்படுத்த முடியாத அளவுக்கு இருளாகக் காணப்படுகிறது. சுமார் 20 மீற்றர் தூரத்தில் உள்ள சாலை வளைவில் மின் விளக்கு பொருத்துமாறு பலதடவைகள் நகர சபையிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை. பகல் வேளையில் இப் பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான மாணவர்கள் இச்சாலையைப் பயன்படுத்திவருகின்றனர். தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் இந்தச் சாலையூடாக பயணிப்பதற்கு அச்சம் கொண்டு வேறு சாலைகள் ஊடாகச் செல்கின்றனர்" என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சாலையில் தெரு விளக்குகள் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அவை பொருத்தப்படும் என்று சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். (வ-9)

# கசிப்பு உற்பத்தி; சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

சாவகச்சேரி, ஏப்.1

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கெற்பேலி வாசியை நிபந்தனையுடன் பிணையில் விடுவித்தது சாவகச்சேரி நீதிவான் மன்று.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் மிருசுவில் கெற்பேலிப் பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரை மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்தனர். அவரிடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 15 லீற்றர் 750 மில்லி லீற்றர் கசிப்பு, உற்பத்திக்குத் தயாராக வைத்திருந்த 280 லீற்றர் 250 மில்லிலீற்றர் கோடா மற்றும் உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் மறுநாள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் கடந்த புதன் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், சந்தேகநபரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன், சந்தேகநபர் தினமும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் மன்று நிபந்தனை விதித்தது.

இதேவேளை, சாவகச்சேரி மதுவரி நிலையத்தால் தென்மராட்சி பிரதேசத்தில் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது வீடுகளில் அனுமதிப் பத்திரமின்றி அளவுக்கு அதிகமான கள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 12 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளைத் தனித்தனியாக விசாரணை செய்த நீதிவான், தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 12 பேருக்கும் தண்டம் விதித்தார். (வ-9)

யாழ் நகரில் இயங்கும் தங்க ஆபரண காட்சியறைக்கு
வேலையாள்கள் தேவை



187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
நர்மதா Gold Centre இற்கு
(கோல்ட் சென்ரருக்கு)

01. விற்பனை முகாமையாளர்,
02. விற்பனையாளர்,
03. நிர்வாக உதவியாளர்,
04. சிற்றூழியர்

ஆண், பெண் இருபாலாருமாக 10 பேர் தேவை.
ஆர்வமுடையோர் எதிர்வரும் திங்கட்கிழமை (03.04.2017) பி.ப 2.30 மணிக்கு சுயவிவரக் கோவையும் கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழுடன் நேரில் சமுகம் தரவும்

தொடர்புக்கு:
075 999 1769

முகாமையாளர்
நர்மதா கோல்ட் சென்ரர்
இல.187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



சிவன் ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்
076 585 9977 , 077 835 7307

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.

100% உத்தரவாதம்

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்
மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்

எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை தியானப்பயிற்சிகள்
எளியமுறை காயகல்பப் பயிற்சிகள், அகத்தாய்வுப்பயிற்சிகள்

இடம்- யாழ்ப்பாணம், அறிவுத்திருக்கோவில்
காலம்- 02.04.2017 ஞாயிறு மாலை 05.00 மணி

அகத்தாய்வு-02
01.04.2017, 02.04.2017 (சனி, ஞாயிறு) தினங்களில் காலை 09.00 மணிக்கு ஆரம்பமாகும்.

வழங்குபவர்
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி V.பாஸ்கரன் அவர்கள்

பிரம்ம ஞானம்
08.04.2017, 09.04.2017, 10.04.2017 (சனி,ஞாயிறு,திங்கள்) ஆகிய தினங்களில் நடை பெறவுள்ளது.

வழங்குபவர்
தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள்

பயிற்சி பெற விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்
021 222 2772, 071 440 3288

வாழ்க வளமுடன்
அறிவுத்திருக்கோவில், மனவளக்கலை மன்ற அறக்கட்டளை,
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ பாடநெறிகளுக்கான பயிற்சியாளர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வு
### (பயிற்சிக் கட்டணம் முற்றிலும் இலவசம்)

வடமாகாணசபைக்கும், சுற்றுலாத்துறை அபிவிருத்திமற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சிற்கும், இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கும் இடையே மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் சுற்றுலாமற்றும் விடுதி முகாமைத்துவ துறைகளில் காணப்படுகின்ற பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முயற்சிகளில் ஒன்றாக வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ துறைகளில் இலவசமாக பயிற்சிகள் வழங்குவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதனடிப்படையில் கீழ் வரும் பாடநெறிகளுக்கான பயிலுனர்கள் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

| இல. | பயிற்சி பாடநெறி | பயிற்சிக் காலம் (மாதம்) | செயல்முறை பயிற்சிக் காலம் (மாதம்) | பாடநெறிக்காக செலவாகும் முழுக் காலம் (மாதம்) |
|---|---|---|---|---|
| 1 | விருந்தினரை வரவேற்கும் முகாமைத்துவம் (Front office & Reception Management) | 1 1/2 | 3 | 4 1/2 |
| 2 | உணவகச் சேவை (Restaurant Service) | 3 | 1 1/2 | 4 1/2 |
| 3 | இல்லமுகாமைத்துவம் (House Keeping Management) | 3 | 1 1/2 | 4 1/2 |

இப பாடநெறிகளில் இணையவுள்ள தனிநபர்கள் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள் :-

- இலங்கை பிரஜையாக இருப்பதுடன் வடமாகாணத்தினை நிரந்தரவதிவிடமாக கொண்டிருத்தல்.
- ஆகக் குறைந்தது க.பொ.த சாதாரண (O/L) தரக் கல்விவரைக்கும் கற்றிருத்தல்.
- 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 30 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல்.

அடிப்படை நிபந்தனைகள்

- இப் பாடநெறிகளில் இணையவுள்ளவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று பாடநெறிகளில் ஏதாவதொரு பாடநெறியை மாத்திரமே தெரிவு செய்யமுடியும்.

இப் பாடநெறிகள் யாவும் வடமாகாணத்திலேயே நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பாடநெறியிலும் ஆகக் கூடியது 40 நபர்களே தெரிவுசெய்யப்படுவர். இப் பாடநெறிகளை முழுமையாக கற்று முடித்தவர்களுக்கு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11.04.2017 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A9வீதி, கைதடியில் நடைபெறவுள்ளது. இந் நேர்முகப் பரீட்சைக்கான தனிப்பட்ட அழைப்புகள் எதுவும் அனுப்பப்படாது என்பதுடன் இப்பத்திரிகை விளம்பரம் மூலமான அறிவித்தலையே அழைப்பாக ஏற்று கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- தேசியஅடையாளஅட்டை (பிரதிஉட்பட)
- பிறப்புஅத்தாட்சிப் பத்திரம் (பிரதிஉட்பட)
- கல்விசார் சான்றிதழ்கள் - (O/L)(பிரதிஉட்பட)
- வதிவிடத்தினைஉறுதிப்படுத்தும் கிராமசேவையாளரால் வழங்கப்பட்டவதிவிடச் சான்றிதழ்.

மேலதிகதகவல்களுக்கு 021 205 7114|021 205 7113 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

திருமதி.வி.கேதீஸ்வரன்
செயலாளர்
முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்.

# தமிழ் பேசும் மீனவர்களுக்கு சிங்கள மொழியில் படிவங்கள்

மட்டக்களப்பு, ஏப்.1

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடியைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மீனவர்கள் சிங்கள மொழியில் படிவங்கள் பூர்த்தி செய்யும் பிரச்சினைக்கு , கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும் போது ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியிலான படிவங்களைத் தினந்தோறும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்த விடயம் குறித்து மீனவ சமூகத்தால் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமக்கு வேற்று மொழிகளிலான படிவங்களைப் பூர்த்தி செய்வதைப் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துகிறது என்று மீனவர்கள் முறையிட்டிருந்தனர்.

இதனையடுத்து முதலமைச்சர் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுடனும், கடற்றொழில் திணைக்களத்துடனும் தொடர்பு கொண்டு மீனவர்கள் எதிர்நோக்கும் மொழிபுரியாத பத்திரங்களின் நிலமையால் ஏற்படும் சிரமங்களை தெளிவுபடுத்தினார்.

முதலமைச்சர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக தற்போது தமிழ் முஸ்லிம் மீனவர்களுக்கு தமிழ் மொழியிலான படிவங்கள் கடற்றொழில் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கிழக்கு முதலமைச்சரிடம் தெரிவித்தார்.

அத்துடன் தினந்தோறும் படிவங்கள் நிரப்பும் செயன்முறையை மாதமொரு முறையாக மாற்ற உதவுமாறு மீனவர்கள் கேட்டிக் கொண்டதற்கிணங்க அது தொடர்பான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-ய-46)

# வறட்சியால் 9 லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு,ஏப்.1

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியுடனான காலநிலையால் 9 லட்சத்துக்கும் அதிகமான மக்க்ள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாடளாவிய ரீதியில் வறட்சியுடனான காலநிலையால் 2 லட்சத்து 61 ஆயிரத்து 979 குடும்பங்களைச் சேர்ந்த 9 லட்சத்து 66 ஆயிரத்து 283 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 218 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 27 ஆயிரத்து 740 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 28 ஆயிரத்து 333 குடும்பங்களைச் சேர்ந்த 98 ஆயிரத்து 257 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 ஆயிரத்து 670 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 20 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஆயிரத்து 206 குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 973 பேரும், வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 510 குடும்பங்களைச் சேர்ந்த 85 ஆயிரத்து 780 பேரும், மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 499 குடும்பங்களைச் சேர்ந்த 47 ஆயிரத்து 710 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடமேல் மாகாணத்தில் 39 ஆயிரத்து 48 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 459 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைவாக புத்தளம் மாவட்டத்தில் 17 ஆயிரத்து 671 குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரத்து 15 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 21 ஆயிரத்து 377 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 444 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய, கம்பஹா மாவட்டத்தில் 48 ஆயிரத்து 847 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 9 ஆயிரத்து 951 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் மூவாயிரத்து 398 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 250 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றுள்ளது.

(ஐ)

# இலங்கைக்கு 10,000 மெ.தொன் அரிசியை வழங்கியது பாகிஸ்தான்

கொழும்பு,ஏப்.1

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள வறட்சியுடனான காலநிலையை அடுத்து, அந்த நாட்டின் தலைமை அமைச்சரின் நேரடி உத்தரவுக்கு அமைய இந்த அரிசித் தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரிசி தொகை அடங்கிய கொள்கலன்கள், கப்பலின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியுடனான குறித்த கப்பல், எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, அவசர தேவை நிமித்தம் கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி 25 மெற்றிக் தொன் அரிசி கொழும்புக்கு வானூர்தி மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக அயலுறவுத் துறை அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்ப ட்டுள்ளது.

(ஐ)

# றுகுணு பல்கலையில் இரு பீடங்கள் பூட்டு

கொழும்பு.ஏப்.1

றுகுணு பலகலைக்கழகத்தின் இரண்டுபீடங்கள் நேற்று முன்தினம் முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப்பிரிவு அறிவித்துள்ளது.

திடீரென பரவிவரும் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் காரணமாக , மாணவர்களின் பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்தப் பிரிவு அறிவித்துள்ளது.

குறித்த இரு பிரிவுகளும் சிங்கள, தமிழ்ப் புதுவருட விடுமுறைகளின் பின்னரே மீண்டும் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாபலான மற்றும் வெல்லமடம வளாகத்திலுள்ள விவசாய மற்றும் தொழில்நுட்ப பீடங்களே இவ்வாறு மூடப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.

(ஐ)

# குவைத்தில் இலங்கையர் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.1

குவைத்தில் குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மந்திரச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் குறித்த இலங்கையர், அந்த நாட்டின் குற்றவியல் தடுப்பு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குடும்பங்களைப் பிரிப்பதாகவும், காதலர்களை இணைப்பதாகவும் கூறி, குறித்த நபர் மோசடி செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபரிடம் இரகசியமான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டுவருவதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

# தாஜுதீன் இறப்பு விசாரணைக்கு கால அவகாசம் வேண்டும்

## சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.1

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் இறப்புத் தொடர்பிலான விசாரணை சிக்கலானது. அதனை நிறைவு செய்வதற்கு நியாயமான கால அவகாசம் வேண்டும் என்று சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்று முன்தினம் நீதிமன்றுக்கு அறிவித்தது.

இது தொடர்பிலான வழக்கு, நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவுக்கு பிணை வழங்குமாறு அவரது சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதி மன்றில் கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதிலளிக்கையில், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க இதனை நீதிமன்றில் குறிப்பிட்டார்.

தாஜுதீனின் சடலத்தின் முக்கிய பகுதிகள் காணாமல் போயுள்ளன. அதனால் இது தொடர்பான விசாரணைக்கு கால அவகாசம் தேவை என்று டிலான் ரத்னாயக்க நீதிமன்றில் குறிப்பிட்டார்.

அதனால், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவை மீண்டும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ஐ-4)



காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

# அதிஉச்ச அழுத்தத்தை கூட்டமைப்பு கொடுக்கும்

## மாவை. சேனாதிராசா எம்.பி. முல்லைத்தீவில் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஏப்.1

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்ககளின் கண்ணீரைத் துடைப்பதற்கான பன்னாட்டு சமூகத்திடமும். அரசிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னாலான அழுத்தங்களைக் கொடுக்கும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கடந்த 24 நாள்களாகப் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அவர் நேற்று நேரில் சென்று சந்தித்தார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமது பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்தோம். இதுவரை எந்தப் பதிலும் எமக்கு இல்லை. 7 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் வீதியோரத்தில் யாரும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தின் பல இடங்களில் இருக்கும் எமக்கு இங்கு வருவதற்குக் கூட வசதியில்லை. பிள்ளைகளை நினைத்து ஏங்கியே எமது ஆயுள் முடிந்து விடும்போல் இருக்கின்றது. எம்மைக் கொண்டு சென்று எரிக்கவும் யாருமில்லை. நாம் நிம்மதியாக வாழ வழி செய்யுங்கள்." என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவிடம் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர்.

"இந்தச் சம்பவங்கள் கடந்த அரசின் காலத்தில் நடந்திருந்தாலும், இது தொடர்பாகத் தற்போதைய அரசு பதிலளிக்க வேண்டும். உங்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். நாங்கள் இது தொடர்பாக பன்னாட்டு சமூகத்திடமும், அரசிடம் எம்மாலான வற்புறுத்தல்களை வழங்குகின்றோம்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (ற - 7)

# முள்ளிக்குளம் காணி விவகாரம்: அரச தலைவருக்கு அவசர கடிதம்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

மன்னார், முள்ளிக்குளம் கிராம மக்களின் போராட்டம் அரச தலைவர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

தமது காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அவற்றை விட்டு விலக வேண்டும் என்று வலியுறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் போராட்டம்



நடத்துகின்றனர். அவர்களுக்கு தீர்வு வழங்க வேண்டும் என்றும். இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும் அரச தலைவருக்கு கடந்த புதன்கிழமை கடிதம் அனுப்பியுள்ளேன்.

இந்த விடயத்தில் உரிய கவனம் எடுத்து கடற்படையினரை அகற்றி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி ஏற்படுத்த வேண்டும் என்று இன்று (நேற்று) வடக்கு மாகாண ஆளுநரிடம் கத்தோலிக்க குருமார்கள் இணைந்து கடிதம் மூலம்வேண்டுகோள்விடுத்துள்ளனர். அந்தப் பகுதியை வந்து ஆராய்ந்து பதிலளிக்கின்றேன் என்று ஆளுநர் கூறியுள்ளார்.

இந்த மக்களின் கோரிக்கைக்கு உரிய தீர்வை உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ற - 101)

# முல்லை. மாவட்டத்தில் 63 பேருக்கு எச்1 என்1

முல்லைத்தீவு, ஏப்.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 63 பேர் எச்1 என்1 தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெப்ரவரி 14ஆம் திகதிக்குப் பின்னர் எச்1என்1 தொற்று இனங்காணப்பட்டது. தொற்றுக்குள்ளானவர்கள் எனச் சந்தேககிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. அவர்களின் குருதி மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டன. அவர்களில் 6 பேருக்கு எச்1 என்1 தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

பெப்ரவரி மாத முடிவுக்குள் அதே அறிகுறிகளுடன் 35 பேரும், மார்ச் மாதம் 22 பேரும் காய்ச்சலுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு எச்1 என்1 தொற்றுக்கான சிகிச்சையே வழங்கப்பட்டது.

குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். புதுக்குடியிருப்புப் பகுதிலேயே அதிகளவாளவர்கள் பாதிக்கப்பட்டனர். தற்போது அதன் தாக்கம் மாவட்டத்தில் குறைந்துள்ளது. உயிரிழப்புகள் எவையும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற - 7)

# ஆசிரியர்களின் நேர்மையின்மை மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்

## பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஏப்.1

வகுப்பறையில் ஆசிரியர்களின் வார்த்தைப் பிரயோகங்கள், கற்பித்தல் பாணி, அணுகுமுறை மற்றும் நேர்மையற்ற செயற்பாடுகள் மாணவர்களது உள்ளத்திலே முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றன. ஒரு வகுப்பறையின் வினைத்திறன்மை ஆசிரியர்கள் பற்றிய மாணவர்களது புலக் காட்சியிலேயே தங்கியுள்ளது

இவ்வாறு பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம் தெரிவித்தார்.

கறுக்காய்த்தீவு மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

தேர்ச்சி மிகு மாணவர்களை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமெனில் வினைத்திறன் மிக்க மாற்ற முகவர்களாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்.

ஆசிரியர்களால் வழங்கப்படும் தண்டனைகளை மாணவரோ அல்லது பெற்றோரோ ஏற்றுக்கொள்வார்கள். மாறாக ஆசிரியர்கள் விமர்சனத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கக்கூடாது.

- என்றார். (ற - ய)

# பிழைகாண்பதைத் தவிர்த்து நன்மை செய்வோம்

எந்தவொரு செயற்பாட்டையும் பலர்சேர்ந்து ஒற்றுமையுடன் செயற்படுத்துகின்றபோது அந்தச் செயற்பாடானது சிறந்த பயனைத் தருவதுடன் வெற்றியும் அளிக்கின்றதை நாம் கண்கூடாக் காண்கின்றோம். அப்படி இருக்கும் போது பல விடயங்களில் ஒற்றுமைக்குப் பதிலாக பிரிவினைகளைத் தோற்றுவித்து ஒருவரையொருவர் குற்றம் சுமத்தி தமது பெயர்புகழை நிலைநாட்ட விழைகின்றமை, மனிதனிடம் மட்டுமே காணப்படுகின்ற தீயகுணமாக இருக்கின்றது.

யாராக இருந்தாலும் நாம் மற்றவர்களுக்காக வாழும்போதே நாமும் வாழமுடியும். எமக்காக வாழ்ந்தால் மகிழ்ச்சியோ, கவலையோ எம்மிடமிருந்து வெளிப்படுத்த முடியாதவர்களாகவே இருப்போம். எனவே அடுத்தவர்களுக்கு கொடுக்கின்றபோதோ, அடுத்தவரை மன்னிக்கும்போதோ தான் எமது வாழ்வு நிறைவுள்ளதாக அமையும். இதைத்தான் ஆண்டவர் இயேசுவும் கொடுங்கள் உங்களுக்கும் கொடுக்கப்படும், மன்னியுங்கள் நீங்களும் மன்னிக்கப்படுவீர்கள் என்பதை தம்முடைய வாழ்விலே வாழ்ந்து காட்டி இருக்கின்றார். ஒருவர் தன்னிடமுள்ள செல்வத்தைத் தானே அனுபவித்தால் அதிலே மகிழ்ச்சியுமில்லை பெருமையுமில்லை. மற்றவர்க்கு கொடுக்கும் போதும் பகிரும் பொதும் தான் அந்தமகிழ்ச்சியை பெருமையை அவர் அனுபவிக்கமுடியும். எனவே இன்றைக்கிருந்து



சிறிது காலங்களிலேமுடிவடைந்துவிடும் எமது வாழ்க்கையிலே நன்மை செய்து. தான தருமங்களைச் செய்து, இறைவனுக்கும் மக்களுக்கும் உகந்தவர்களாக வாழ்ந்து, இறுதியில் விண்ணக மகிமைப் பேற்றை அடைந்துகொள்ள இந்த தவக்காலத்தைப் பயனுள்ளதாகக் கடைப்பிடித்து வாழ்வுப் பயணம் தொடர்ந்திட இயேசுவின் வார்த்தையிலே நம்பிக்கையுடன் செயற்படுவோம். அருள் பெற்று வாழ்வோம்.

அன்ரனிபீற்றர், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

# முள்ளந்தண்டு வடம் பாதித்தோருக்கு தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பம்





முல்லைத்தீவு, ஏப்.1

உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றவர்கள் அமைப்பின் அலுவலகத்துடன் இணைந்த தொழில் பயிற்சிக் கட்டடம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

கனடா, பிரம்ரன் தமிழ் ஒன்றியத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட இந்த கட்டடத்தை வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி கேதீஸ்வரன் திறந்தார்.

இந்த நிகழ்வு உயிரிழை அமைப்பின் தலைவர் வி.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் சி.சிவதாஸ் உயிரிழை அமைப்பு அலுவலக பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்தார். யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் பெயர்ப் பலகைகளைத் திரைநீக்கம் செய்தனர்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், அருத் தந்தையர்கள், மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற - 7)

## முழங்காவில் ம. வித்தியாலயத்துக்கு சிற்றூழியரை நியமிக்கக் கோரிக்கை

முழங்காவிலில் உள்ள ஒரேயொரு பாடசாலையான முழங்காவில் மகாவித்தியாலயத்தில் ஆயிரம் மாணவர்கள் கற்கின்றனர். அந்தப் பாடசாலைக்கு இதுவரை சிற்றூழியர் நியமிக்கப்படவில்லை என்று தெரிவித்தார் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஜெகநாதன்.

அவர் தெரிவித்ததாவது:

முழங்காவில் பகுதியில் உள்ள ஒரேயொரு பாடசாலையான முழங்காவில் மகா வித்தியாலயமானது தற்போது தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் நிலையில் 55 ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கையில் உள்ளனர். இருப்பினும் ஒரு சிற்றூழியர் கூடக் கிடையாது. ஒரேயொரு இரவுக் காவலாளி மட்டுமே கடமையில் உள்ளார். எமது பாடசாலையில் 15 சிற்றூழியர்களுக்கான ஆளணி அங்கீகாரம் உண்டு. குறைந்தபட்சம் 5 பேராவது இருந்தால் மட்டுமே திறமையாக செயலாற்ற முடியும். ஆனால் ஒருவர் கூட இல்லாத நிலையில் ஏனைய பணிகளிலும் மாணவர்களே ஈடுபட வேண்டிய அவலம் இன்றுவரை தொடர்கின்றது. இது தொடர்பில் நாம் மாகாணத்துக்கு மட்டுமன்றி மத்திய கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் வரை தெரியப்படுத்தினோம். இதுவரை எமக்குத் தீர்வு கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்கு உரிய அதிகாரிகள் விரைவில் தீர்வு வழங்க வேண்டும். என்றார். (ற-101)

### இராமநாதபுரத்தில் அமைக்கப்பட்ட

# விவசாயக் கிணறுகளால் கால்நடைகளுக்கு ஆபத்து

### நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.1

விவசாயிகளின் நலனை மாத்திரம் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட செயலால் ஒரு மாதத்துக்குள் பெறுமதி மிக்க 10 மாடுகள் உயிரழந்துள்ளன.

இவ்வாறு வடக்கச்சி, இராமநாதபுரம் கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளடங்கும் வட்டக்கச்சி, இராமநாதபுரத்தில் சில மாதங்களுக்கு முன்னர் நிலவிய வறட்சியில் இருந்து பயிர்களைக் காக்க அவசரமாக இயந்திரங்களின் உதவியுடன் 60 கிணறுகள் தோண்டப்பட்டன. அதன் மூலம் பயிர்கள் ஓரளவு காப்பாற்றப்பட்டன.

அமைக்கப்பட்ட கிணறுகள் எந்தவித பாதுகாப்பும் இன்றி உள்ளன. அவற்றுக்குள் தினமும் கால்நடைகள் விழுந்து இறக்கின்றன என்று கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

"கடந்த மாதம் மட்டும் 10க்கும் அதிக கால்நடைகள் இவ்வாறு இறந்துள்ளன. தமது வயல்களுக்கு எமது கால்நடைகள் புகுந்தால் வாழ்வாதாரம் அழிகின்றது என்று அவற்றைப் பிடித்து நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவசாயிகள் அடுத்தவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

நேற்றும் கால்நடை ஒன்று கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்துள்ளது. அதன் பெறுமதி 90 ஆயிரம் ரூபா. இந்தக் கிணறுகளுக்கு பாதுகாப்புக் கட்டு அமைக்க வேண்டும். இல்லையெனில் அவற்றை மூட வேண்டும்.

தற்போது மாவட்டத்தில் அறுவடை முடிந்து விட்டது. தற்போது வறட்சியான கால நிலை நிலவுகின்றது. கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இல்லை. இந்த நிலையில் விவசாயிகள் வயல்களில் எஞ்சிய பயிர்களுக்கு நெருப்பிடுகின்றனர்.

இதனால் பசும் புற்களும் அழிகின்றன. அனைத்துப் பக்கங்களாலும் எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மாவட்ட அரச நிர்வாகமும், விவசாயிகளும் கூடிய கவனம் எடுக்க வேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-101)

### வவு. தமிழ் ம.ம. வித்தியாலத்தில்

## தளபாடங்கள் சீரமைப்புக்கு பெற்றோரிடம் நிதி அறவீடு

### முறையற்ற செயற்பாடு என்று இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 1

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தளபாடங்கள் திருத்துவது மற்றும் வர்ணம் பூசுதல் என்பனவற்றுக்காக தரம் 6,7,8 இல் கற்கும் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றது என்று பாதிக்கப்பட்ட பெற்றோரால் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை, "பெற்றோர் தாமாகவே வந்து பணம் செலுத்தியிருந்தனர். கட்டாயத்தின் பேரில் எவரிடமும் பணம் அறவிடவில்லை." என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவர் தெரிவித்ததாவது

"மாணவர்களின் பெற்றோரிடமிருந்து தலா 2 ஆயிரம் ரூபா பாடசாலை அதிபரால் நிதி சேகரிக்கப்படுவதும் அந்தப் பணத்துக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படாமையும் முற்றிலும் சட்டவிரோதமானது. கல்வி அமைச்சின் 2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முற்றிலும் முரணானது. பாடசாலையின் பௌதிக தேவைகளுக்காக இவ்வாறு பணம் சேகரிக்க முடியாது என்று இந்தச் சுற்றறிக்கை குறிப்பிடுகின்றது. இவ்வாறு நிதி திரட்டப்படுமானால் அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்துக்கு கல்வியமைச்சில் அனுமதி பெறப்பட்டதா?. அவ்வாறு அனுமதி பெறப்பட்டிருக்குமானால் அனுமதி வழங்கிய அதிகாரியும் சுற்றறிக்கையை மீறி செயற்பட்டுள்ளார். இது இலவசக் கல்வி முறையை தடைசெய்யும் செயற்பாடாகும். அரசால் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளுள் சகல மாணவருக்கும் தளபாடம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பற்றுச்சீட்டுக்கள் வழங்காது பணம் சேகரிப்பது மோசடிக்கு வழிவகுக்கும் செயற்பாடாக அமையும். இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக இந்தச் செயற்பாட்டைக் கண்டிக்கின்றது. இந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். என்றார்.

"எமது பாடசாலை அதிகளவாக சுமார் 3 ஆயிரம் மாணவர்களைக் கொண்டது. இந்தப் பாடசாலை தேசியப் பாடசாலை என்பதால் மாகாண அரசிடமிருந்து நிதி கிடைப்பதில்லை. கொழும்பு அரசு தான் நிதி தரவேண்டும். அண்மையில் 200 தளபாடங்களைச் சீரமைக்க கொழும்பு அரசு நிதி ஒதுக்கியிருந்தது. அந்த நிதி போதாது. பொதுவாகவே எமது கல்லூரிக்கு கொழும்பு அரசு ஒதுக்கும் நிதி போதாது.

சில வகுப்புக்களில் தளபாடங்களைச் சீரமைக்கவென ஒரு பகுதி பெற்றோர் பணம் செலுத்தினர். அதன் மூலமாகத் தளபாடங்கள் சீரமைக்கப்பட்டன. மற்றொரு தரப்புப் பெற்றோர் பணம் செலுத்துவதற்கு சம்மதிக்கவில்லை. நாங்களாக எந்தப் பெற்றோரிடமும் பணம் கேட்கவில்லை. பெறவுமில்லை. இவ்வாறு பணம் பெறுதலில் குற்றஞ்சாட்டுக்கள் காணப்பட்டதனால் தளபாடங்களைச் சீரமைப்பதனை நிறுத்தியுள்ளோம். வேறு வழிகளில் பணம் சேகரித்துத்தான் தளபாடங்களைச் சீரமைக்க வேண்டும்" என்று பாடசாலையின் அதிபர் அமிர்தலிங்கம் தெரிவித்தார். (ற-4)

## வயலில் இருந்து குண்டு மீட்பு



வவுனியா, ஏப். 1

வவுனியாவில் வயலிலிருந்து துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட மோட்டார் குண்டு ஒன்று நேற்றுமுற்பகல் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து மகாகச்சக்கொடி செல்லும் பிரதான வீதியோரத்திலிருந்த வயலில் நேற்றுக் காலை உழவு வேலை செய்து கொண்டிருந்போது துருப் பிடித்த நிலையிலிருந்த மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

அது தொடர்பாக வயல் உரிமையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர் பொலிஸாருக்குத் தெரிவித்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற மடுக்கந்த பொலிஸார் 60 மில்லிமீற்றர் துருப்பிடித்த மோட்டார் குண்டை மீட்டனர். சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் மோட்டார் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

### தெளிவற்ற சாரதி அனுமதி பத்திரம்: 4,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஏப்.1

தெளிவற்ற சாரதி அனுமதிப் பத்திரத்தை உபயோகித்தவருக்கு நீதிமன்று 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கு விசாரணைகளின்போது தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டார்.

அவருக்கு 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் உடனடியாக புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். (ற-12)

## காணிப் பிரச்சினை தொடர்பில் அதிகாரிகள் அசமந்தப் போக்கு

### தொட்டகுளம் கிராம மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஏப்.1

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தொட்டகுளம் கிராமத்தில் உள்ள காணிப் பிரச்சினை தொடர்பாக பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

எல்லைப் பகுதிக் கிராமங்களில் ஒன்றான தொட்டகுளத்தில் நீண்டகாலமாக காணிப் பிரச்சினை நிலவு கின்றது. 1984ஆம் ஆண்டு கிராமத்தைவிட்டு இடம்பெயர்ந்த மக்கள் தற்போது கிராமத்தில் மீள்குடியமர முற்பட்டனர். தற்போது காணிகள் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. தமது காணிகளைவிடுவிக்க வேண்டும் என்று காணி உரிமையாளர்கள் பல தடவைகள் வலிறுத்திய போதும் அது பயனளிக்கவில்லை. ஆனால் செல்வாக்கு மிக்க நபர்கள் அந்தக் காணிகளைப் பெற்றுச் சீர்திருத்தியுள்ளனர் என்று காணி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

அது தொடர்பாக ஆராய்வதற்கு காணி உரிமையாளர்களை கொக்குத்தொடுவாய் கிராம அலுவலர் அலுவலகத்துக்கு செவ்வாய்க்கிழமை வருமாறு காணி உத்தியோகத்தர்கள் அழைத்திருந்தனர். அவர்கள் தமது காணிகள் தொடர்பான ஆவணங்களுடன் அங்கு சென்று பல மணி நேரம் காத்திருந்த போதும் காணி உத்தியோகத்தர்கள் வரவில்லை. தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயன்றபோதும் பயன்தரவில்லை என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

"காணிப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு நாம் வருவதாக அறிவிக்கவில்லை என்று காணி உத்தியோகத்தர் கூறியுள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் இது தொடர்பாக என்னை அணுகலாம்." என்று கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் சி. குணபாலன் தெரிவித்தார். (ற-7)

### பாதசாரி கடவையில் நிறுத்தாததால் தண்டம்

யாழ்ப்பாணம், ஏப்.1

பாதசாரிகள் கடவையில் வாகனத்தை நிறுத்தாத இரு சாரதிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்று யாழ். நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விசாரணைகளின்போது தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டனர்.

அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் நீதிவான் தண்டம் விதித்தார். (ற-12)

## இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினை

# மீனவர் சிக்கல் குறித்து டில்லியில் இவ்வாரம் பேச்சு

கொழும்பு,ஏப்.1

இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வினைக் காணும் நோக்கில், இரு நாடுகளின் அரச பிரதிநிதிகள் இந்த வாரம் இறுதியில் இரு தரப்புப் பேச்சுக்களை புதுடில்லியில் முன்னெடுக்கவுள்ளனர். இதற்கிடையில் இரு நாடுகளினதும் கடற்படையினரும் பிரத்தியேகப் பேச்சு ஒன்றை முன்னெடுக்க வுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மற்றும் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளுக்கு அமைவான மீன்பிடி முறைமைகளைத் தடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை இலங்கை மீனவர்கள் தொடர்ச்சியாக அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சட்ட விரோத மற்றும் அத்துமீறிய மீன்பிடி முறைமை களைத் தடுக்கும் வகையில் கடந்த வருடம் இறுதியிலும், கடந்த பெப்ரவரி மாதமும் இலங்கை மற்றும் இந்திய அரசின் தலைமையில் இருநாட்டினதும் உயர்மட்டக் குழுவினர் பேச்சுக்களை முன்னெடுத்த னர். இந்தப் பேச்சுக்களின்போது பொது இணக்கப்பாடுகள் சில எடுக்கப்பட்டன.

குறிப்பாக தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திய மீன்பிடி முறைமைகளை முற்றாக தடுத்தல் மற்றும் எல்லை தாண்டிய மீன்பிடி முறைமைக ளைக் கண்காணிக்க இரு நாட்டு கடற்படைகளும் தொடர்ந்து ரோந்து நகர்வுகளை முன்னெடுக்கும் என்ற முக்கிய தீர்மா னங்களை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது.

எனினும் கடந்த சில காலங்களில் மீண்டும் இந்தப் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளது.

அண்மையில் இந்திய மீனவர் ஒருவர் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இரு நாடுகள் மத்தியில் மீண்டும் தளம்பல் நிலைமைகளை உருவாக்கியுள்ளன. இந்த நிலையில் இந்த வாரம் இறுதியில் இலங்கை அரசு சார்பில் கடற்தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையிலான சிறப்புப் பிரதிநிதிகள் குழுவொன்று புது டில்லிக்குப் பயணம் செய்யவுள்ளனர்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் நிரந்தரமான தீர்மானங்களை இந்த பேச்சின் மூலம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகளைச் சரியான முறை யில் கையாளும் நகர்வுகளை முன்னெடுக்க இலங்கை மற்றும் இந்தியக் கடற்படையினர் முக்கிய பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், அதனை எவ்வாறு கையாள்வது என்ற விடயம் தொடர்பிலும் கடற்படையினர் சாதகமானதும், மீனவர்களை பாதுகாக்கும் வகையிலான நகர்வுகளை கையாள்வது தொடர்பிலும் இந்தப் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளதாக இந்தியக் கடற்படைத் தலைமையகம் உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ)

## ரஷ்யாவிடமிருந்து போர்க்கப்பல் வாங்க கொழும்புக்கு வாய்ப்பில்லை

கொழும்பு,ஏப். 1

ரஷ்யாவிடம் இருந்து ஜிபாட் 3.9 ரகத்தைச் சேர்ந்த போர்க் கப்பல்களை இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்வ தற்கு வாய்ப்பில்லை என்று இலங்கைக் கடற்படைவட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு ஜிபாட் 3.9 ரகத்தைச் சேர்ந்த போார்க் கப்பல்களை வழங்குவது தொடர்பானஉடன்பாடுகுறித்தபேச்சுக்கள் இறுதிக்கட்டத்தைஅடைந்துள்ளது என்று இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ், ரஷ்ய ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

எனினும், 300 மில்லியன்டொலர் பெறுமதியான இந்தப் போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்வது சாத்தியமான விடயமல்ல என்று இலங்கைக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை இலங்கைக் கடற்படைக்காக கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளது. இதில் பயிற்சிகளைப் பெறுவதற்காக இலங்கைக் கடற்படை மாலுமிகள் இந்தியா செல்லவுள்ளதாகவும் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## சிறை வாகனம் மீது சூடு; மேலும் சந்தேகநபர்கள் கைது

களுத்துறையில் வைத்து சிறைச்சாலைப் பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் மூவர் மொரட்டுவை மற்றும் பண்டாரகமைப் பிரதேசங்களிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடத்த வந்தவர்கள் பயன்படுத்திய வானை இவர்களே, பாதுகாப்பாகவைத்திருந்ததாகக்குற்றம்சாட்டப்பட்டுள்ளது. குறித்த சந்தேகநபர்களிடமிருந்து போலியான இரு வாகன இலக்கத் தகடுகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)


தரம் 5 பரீட்சைத் தொடர் - 07

சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்

பாராட்டுப் பெறும் புலமைசாலிகள்




யாழ் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பூரண அனுசரணையுடன் கடந்த பெப்ரவரி மாதம் ஒளி அரசி மூலம் இடம்பெற்ற தேசிய ரீதியிலான தரம் – 5 தபால் மூல மாண பரீட்சைத் தொடரில் [திருத்தற் சேவையுடன்] உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமை சாலிகளை சுடர் ஒளி, ஒளிஅரசி, புலமைச் சுடர் குழுமத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| நா. அநுபாயன் | யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் | 191 |
| மு.பாத்திமா பூசிகா | மட/மம/ஹிழறியா வித்தியாலயம் | 191 |
| ம.மஸ்னவி | கம்/ திகாரிய தாருஸ்ஸலாம் ஆ.பாடசாலை | 190 |
| பா.சந்தியா | தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி | 189 |
| து.துலாகரன் | கிளி/குமுழமுனை அ.த.க பாடசாலை | 186 |
| சி.போசிதன் | மா/குமரன் ஆரம்ப பாடசாலை | 186 |
| செ. கிருஷிகன் | யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி | 183 |
| சி.பிறுசன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை | 183 |
| ஜெ. டினோஷன் | யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி | 182 |
| ஜெ.மதுரகன் | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | 179 |
| அ.எழிலன் | கிளி/முழங்காவில் ஆரம்பப்பாடசாலை | 178 |
| க.திருத்திகன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை | 177 |
| த.ரக்சஜன் | யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் | 176 |
| வி.அபிராஜ் | யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி | 175 |
| அ.அபர்ணா | யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | 174 |
| ஜ. பஜஷன் | மா/குமரன் ஆரம்பப் பாடசாலை | 173 |
| ஜ.சுபிநயா | யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி | 172 |
| பி.லகவினா | யா/இந்து ஆரம்ப பாடசாலை | 172 |
| பி.அபிசித் | யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலம் | 172 |
| க.மகிழ்நிலா | யா/கைதடி விக்னேஸ்வரா | 171 |
| ஈ.தர்சன் | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | 171 |
| சி. பிரதீபன் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 171 |
| சி.உமாசங்கர் | யா/அருணோதயாக் கல்லூரி. | 170 |
| த. சஜிந்தவி | வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை | 168 |
| பா.தனுசன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 167 |
| அ.சேகரன் | வத்தளை R.C.T.V | 167 |
| வெ.கனிநிலா | கிளி/பூநகரி மத்திய கல்லூரி | 167 |
| சி.ஆரபி | யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தி | 166 |
| தே.அபிஷாலினி | மன்/தோட்டவெளி அ.த.க | 166 |
| க.திகானா | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப படசாலை | 166 |
| கு.ஐடனுசா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 165 |
| த.சரணிகா | யா/கைதடி விக்னேஷ்வரா | 164 |
| த.தேரசிகா | வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை | 164 |
| ர.நிர்ஜா | கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி | 163 |
| பி.விபீசன் | யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | 163 |
| ஜ/விழிமதி | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 160 |
| ஜ/விழிமதி | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 160 |
| பா.பவணிலா | யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | 162 |
| சு.ஜெனிதன் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 162 |
| ஜே.பெ. கபிராஜ் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 162 |
| ந.தமிழினி | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | 161 |
| ய.தானிகா | யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலம் | 159 |
| செ.பிருந்தியா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 159 |
| மோ. ஆர்மிகா | யா/இமையாணன் அ.த.க பாடசாலை | 158 |
| கு.ஜானுசா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய | 158 |
| க. இந்திகா | யா/சாவகச்சேரிமகளிர் கல்லூரி | 157 |
| ச.ராகவி | இந்து மகளிர் கல்லூரி | 156 |
| மு.பானுஷன் | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | 156 |
| ப. ஹரிணியா | யா/இந்து ஆரம்ப பாடசாலை | 154 |
| தி.அஜேய் | கொ/ விவேகானந்தா கல்லூரி | 153 |
| ஹரி | ஷாகிரா முஸ்லிம் வித்தியாலயம் | 153 |
| ந.துவாரகன் | கிளி/பூநகரிமத்திய கல்லூரி | 152 |
| கி.அஸ்வினி | கொ/ விவேகானந்தா கல்லூரி | 151 |
| ஜீ.ஷாகம்பரி | சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 151 |
| சி.வைகறை | கிளி/பூநகரி மத்திய கல்லூரி | 148 |
| லி.சனுஸ்ரன் | யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலம் | 148 |
| சபியார் | கி/பு/அ/த/க பாடசாலை | 147 |
| ம.நஜன்சிகா | கிளி/குமுழமுனை அ.த.க பாடசாலை | 147 |
| கிசோர் | றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் | 145 |
| கி.நிலக்சன் | கிளி/பூநகரி மத்திய கல்லூரி | 144 |
| த.சாருயன் | யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 143 |
| பாத்திமா அஸ்னா | அல்முபாரக் கனிஷ்ட வித்தியாலயம் மல்வானை | 143 |
| க.மதுமிதா | யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 141 |
| இ.பிரணவி | யா/கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை | 141 |
| ம.ஷிமாக | றோயல் கல்லூரி | 140 |
| அ.சபரீசன் | வத்தளை R.C.T.V | 140 |
| தே.சிவசங்கீதன் | யா/யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை | 140 |
| பா.திவேதிகா | சைவ/மங்கையர் வித்தியாலயம். | 140 |
| ர. ஜனுர்சன் | கொ/ விவேகானந்தா கல்லூரி | 140 |
| ச. நிரோசா | கொ/ விவேகானந்தா கல்லூரி | 139 |
| கு.ரிந்தியா | கொ/புனித அன்னம்மாள் ம.வி | 139 |
| கி.ஜெனகிலன் | கிளி/பூநகரி மத்திய கல்லூரி | 139 |
| அ.தமிழினி | கிளி/குமுழமுனை அ.த.க பாடசாலை | 139 |
| கு.தமிழ்நிலா | கிளி/குமுழமுனை அ.த.க பாடசாலை | 139 |
| க. டிலுக்சானி | வத்தளை R.C.T.V | 138 |
| பா.சதுர்சனா | சைவ/மங்கயர் வித்தியாலயம். | 137 |
| பா.டனுசியா | இந்து மகளிர் கல்லூரி | 136 |
| க.லோசன் | கொ/புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி | 134 |
| கி.மிதுர்சன் | கொ/ விவேகானந்தா கல்லூரி | 133 |
| ச.கபிலாசினி | இந்து மகளிர் கல்லூரி | 132 |
| [illegible] | புனித/ வெஸ்லே கொலியா | 132 |
| பா.யானுசன் | கிளி/பூநகரி மத்திய கல்லூரி | 130 |
| த.மாதங்கி | யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலம் | 130 |
| இ.சுபீட்சா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 154 |
| பி. விபீனா | யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | 150 |
| செ. பிருந்திராஜ் | யா/சாவகச் சேரிமகளிர் கல்லூரி | 150 |
| ஐ.விழிமதி | யா/சாவகச்சேரி இந்துஆரம்ப பாடசாலை | 149 |
| த.சுரீம் | யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை | 148 |
| செ.யாழிசை | யா/சாவகச்சேரிமகளிர் கல்லூரி | 148 |
| பா.காஜனுஜன் | யா/சாவகச்சேரி இந்துஆரம்ப பாடசாலை | 145 |
| தி.மானுஷா | யா/சாவகச்சேரிமகளிர் கல்லூரி | 144 |
| கு. சஜானா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 144 |
| கே.கிரிஷா | யா/நாவற்குழி ம.வி | 144 |
| உ.கிருசன் | யா/சாவகச்சேரி இந்துஆரம்பபாடசாலை | 142 |
| இ.திருவாசகி | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 140 |
| க.சந்தியா | யா/சாவகச்சேரி இந்துஆரம்ப பாடசாலை | 138 |
| கே.நிதர்சனா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 133 |
| ஞா.கோபிகா | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 135 |
| தே.அன்புக்குமாரன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 132 |
| ஆ.சஞ்சிகா | வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை | 129 |
| ச. டிலக்சிகா | வ/ திருஞான சம்பந்தர் வித்தியாலயம். | 128 |
| வி.ஜீவிதா | வ/ திருஞான சம்பந்தர் வித்தியாலயம். | 143 |
| க.சந்தியா | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 150 |
| ச.பிரணவி | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 148 |
| இ.சுபீட்சா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 154 |
| ம.டில்சான் | யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை | 130 |
| ரோ.கபிராஜ் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 157 |
| வி.கலைமதி | வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை | 133 |
| ல.அபிநயா | கிளி/கிளிநொச்சி கிராஞ்சி அ.த.க பாடசாலை | 133 |
| ச.துளசி | கிளி/கிளிநொச்சி கிராஞ்சி அ.த.க பாடசாலை | 132 |

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் அருகிலுள்ள 'உதயன்' 'சுடர் ஒளி' முகவரிடம் ஒளி அரசி சஞ்சிகையை பெறுவதன் மூலம் பங்குபற்றலாம். மேலதிக தொடர்புகளுக்கு 0718628351 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

முக்கிய குறிப்பு: பிரபல சிங்கள ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு தமிழ் பேசும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைப்பது மிக அரிதாக உள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு இப்பரீட்சைத் தொடர் எமது பரீட்சைப் பிரிவால் நடத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப் பரீட்சைத் தொடருக்கு பூரண அனுசரணையை வழங்கி வரும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ. சரவணபவனுக்கு தரம் 5 கல்விச் சமூகத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 0718628351 / 0714273035

பொறுப்பாசிரியர், பரீட்சைப் பிரிவு, சுடர் ஒளி, ஒளி அரசி, புலமைச்சுடர்


## சில துறைமுகங்களின் அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவியையும் நாடலாம்

### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 1

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா பெறவுள்ள நிலையில் கொழும்பு, திருகோணமலை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களை இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்ய முடியும். இவ்வாறு துறைமுகங்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் ஐஏஎன்எஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தில் இந்தியா முதலீடு செய்து இலங்கை துறைமுக அதிகார சபையுடன் இணைந்து அதனை இயக்க வேண்டும் என்று இலங்கை அரசு எதிர்பார்க்கிறது. கொழும்புத் துறைமுகக் கிழக்கு முனையத்தில் இந்தியா ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

கொழும்புத் துறைமுகம் வழியாக 75 வீதமான கொள்கலன்கள் இந்தியாவுக்கே செல்கின்றன. கொழும்புத் துறைமுகத்தில் பங்காளராக இணைய இந்தியா எதிர்பார்க்கிறது. பல தனியார் நிறுவனங்கள் இது குறித்து பேச்சுக்களை நடத்தியுள்ளன. அதனை சாதகமாகப் பார்க்கிறோம். உலகின் ஐந்தாவது மிகப்பெரிய இயற்கைத் துறைமுகமான திருகோணமலை துறைமுகம் மீதும், இந்தியா மிகவும் ஆர்வம் கொண்டுள்ளது. திருகோணமலை துறைமுக நகர அபிவிருத்தி தொடர்பாக சிங்கப்பூர் நிறுவனமான சுபர்ணா ஜுரோங் சாத்திய ஆய்வு ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறது. இந்தியன் ஒயில் நிறுவனத்தால் பல ஆண்டுகளாக இயக்கப்படும் பெற்றோலியக் குதங்கள் இருப்பதால், திருகோணமலை மீது இந்தியா பெரிய ஆர்வம் கொண்டுள்ளது. சாத்திய ஆய்வு அறிக்கை மூன்று மாதங்களில் கிடைத்த பின்னர், இலங்கை அரசு அழைப்பு விடுக்கும். கேள்விப் பத்திரங்கள் கோருவதை அரசு முடிவு செய்யும்.

சீனாவுக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகம் மிகவும் வசதியானதாக உள்ளது என்று நினைக்கிறேன். கொழும்புத்துறைமுகத்தில் சீன மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு ஒரு கொள்கலன் முனையம் இருக்கிறது. அதனுடன் அம்பாந்தோட்டை அவர்களுக்கு போதுமானதாக இருக்கும். காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதிலும் இலங்கை அரசு ஆர்வம்கொண்டுள்ளது. அது இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளது. அது கொள்கலன் துறைமுகம் அல்ல. சிமெந்து மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு அதனைப் பயன்படுத்த முடியும்." என்றார். (ஐ-4)

# 2020ஆம் ஆண்டுக்குள் புகையிலைக்குத் தடை

## மதுவரித் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1
இலங்கையில் புகையிலை செய்கை 2020ஆம் ஆண்டுக்குள் முற்றாகத் தடை செய்யப்படும் என உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் இலங்கை உறுதியளித்துள்ளது. இவ்வாறு மதுவரித் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பொறுப்பதிகாரி சோதிநாதன் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் கால அட்டவணையின் அடிப்படையில் புகையிலையைக் கட்டுப்படுத்தும் அமைப்பால் கொழும்பில் கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் மாநாடு நடத்தப்பட்டது. அதில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மதுவரித் திணைக்களதின் வடக்கு மாகாண பொறுப்பதிகாரி சோதிநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தியா, இந்தோனேசியா, பங்களாதேஷ், கொரியா, தாய்லாந்து, மியன்மார் நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

" புகையிலை போதைப் பொருள்களில் ஒன்று. அவற்றால் நோய், மரணம் என்பன ஏற்படுகின்றன. புகையிலை உற்பத்தியில் கிழக்கு ஆசிய நாடுகளே முன்னிலை வகிக்கின்றன. இந்தியாவில் 820 ஆயிரம் மெற்றிக்தொன்னும், இந்தனேசியாவில் 260 ஆயிரத்து 800 மெற்றிக்தொன்னும், பங்களாதேஷில் 85 ஆயிரம் மெற்றிக்தொன்னும், கொரியாவில் 80 ஆயிரம் மெற்றிக்தொன்னும், தாய்லாந்தில் 69 ஆயிரம் மெற்றிக்தொன்னும், மியன்மாரில் 29 ஆயிரம் மெற்றிக்தொன்னும், இலங்கையில் 3 ஆயிரத்து 620 மெற்றிக்தொன்னும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை நாம் முன்னெடுத்துள்ளோம். புகையிலை பணப் பயிராக இருப்பதால் உடனடியாக நிறுத்துவது கடினம். எனினும் இந்த நடவடிக்கையில் பிரேஸில், கனடா, கென்யா, உகண்டா ஆகிய நாடுகள் வெற்றி கண்டுள்ளன." என்று மாநாட்டை நடத்திய அமைப்புச் சுட்டிக்காட்டியது.

இலங்கை 2020 ஆண்டுக்குள் புகையிலைச் செய்கையை கட்டுப்படுத்தும் என்று உறுதியளித்துள்ளது. பங்களாதேஷ் 2040 ஆம் ஆண்டுக்குள் புகையிலைச் செய்கையைக் கட்டுபடுத்தும் என்று உறுதியளித்துள்ளது. ஏனைய நாடுகள் இது தொடர்பில் எந்த கால எல்லை களையும் குறிப்பிடவில்லை.

" அரசு புகையிலைச் செய்கையைக் கட்டுப்படுத்துவதில் முனைப்புக் காட்டுகின்றது. புகையிலைச்செய்கையில் ஈடுபடுவோருக்கு மாற்றுத் தொழில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுக்கான மானியங்களையும் அரசு வழங்க வேண்டியுள்ளது." என்று மதுவரித் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பொறுப்பதிகாரி சோதிநாதன் சுட்டி க்காட்டினார். (ற -4)

## தந்தை செல்வாவின் பிறந்த தின நிகழ்வுகள் நேற்று பல இடங்களில்



யாழ்ப்பாணம், ஏப். 1
ஈழத்து காந்தி என அழைக்கப்படும் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 119 ஆவது பிறந்த தின நிகழ்வு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் பொது நூலகத்துக்கு அருகிலுள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா கலந்து கொண்டார்.

மன்னாரிலும் நிகழ்வுகள் நடைபெற்றன. மன்னார் மாவட்ட தந்தை செல்வா அறங்காவல் அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனிமார்க் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள தந்தை செல்வா உருவச் சிலைக்கு முன்பாக நிகழ்வுகள் நடைபெற்றன.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, சிறப்பு உரைகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் மதத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ மாவட்ட அமைப்பாளர் பற்றிக் வினோ, தமிழரசுக்கட்சியின் மாவட்டத் தலைவர் தி.பரஞ்சோதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் வவுனியா நகர மத்தியில் உள்ள அன்னாரது சிலையடியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும் தமிழரசுக்கட்சியின் வவுனியா கிளை தலைவருமான ப. சத்தியலிங்கத்தின் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அவரது சிலைக்கு மலர்மாலை அணிவித்ததுடன் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. சுகாதார அமைச்சரால் நினைவுரையும் நடத்தப்பட்டது. தமிழரசுக்கட்சியின் வவுனியா கிளை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். (ற - 4,101,56)

## வெளிநாட்டு பிரசை கைது

கொழும்பு, ஏப்.1
நுழைவிசைவு இன்றி நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் சீனத்துறைமுகம் கப்பல் துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சீனத்துறைமுக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 33 வயதுடைய இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ற)

## கடற்படைக் கட்டளை தளபதி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

கொழும்பு, ஏப்.1
வட மாகாண புதிய கடற்படைக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் கே.கே. ஜே.டி சில்வா வட மாகாண ஆளுநர்ரெஜினோல்குரேயை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படுகின்ற சட்டவிரோத போதைப் பொருள்கள் மற்றும் சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்து மீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பாக அதில் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## விமானத்தில் மறைக்கப்பட்டிருந்த ஹெரோயின் மீட்பு

கொழும்பு, ஏப்.1
மாலைத்தீவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வந்த விமானத்தின் கழிவறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஹெரோயின் நேற்று அதிகாலை மீட்கப்பட்டதுஎன்றுவிமானநிலைய சுங்கப் பிரிவு தெரிவித்தது. சுங்கத்தின் பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க இதனைத்தெரிவித்துள்ளார்.

நீர் புகாத வண்ணம் பாதுகாப்பான முறையில் இந்த ஹெரோயின் பொதியிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஒரு கிலோவும் 4 கிராம் ஹெரோயின் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 14 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## தொண்டராசிரியர் பிரச்சினைக்கு 3 வாரங்களில் தீர்வு எட்டப்படும்

### வடக்கு மாகாண தொண்டராசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்ரல். 1
வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான இறுதித் தீர்வு இன்னும் மூன்று வாரங்களில் எட்டப்படும் என்று வடமாகாண ஆளுநரும், கல்வி இராஜாங்க அமைச்சரும் உறுதி அளித்துள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாண தொண்டராசிரியர் சங்கத்தின் தலைவர் இ. ஜெயராஜ் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
தொண்டராசிரியர்கள் நியமனம் தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவு கின்றன. நாம் வடமாகாண ஆளுநர், வடமாகாண கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோரிடம் இது தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தோம். அதற்கமைவாக விரைவில் முடிவுகள் எட்டப்படும் என வாக்குறுதி எமக்குத் தரப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனத்துக்காக தெரிவு செய்யப்படும்தொண்டராசிரியர்களின் எண்ணிக்கையினை இறுதித் தீர்வின் போதே அறிந்து கொள்ள முடியும். வதந்திகளை நம்ப வேண்டாம். பெயர்ப் பட்டியலில் உள்ள தொண்டராசிரியர்களினது நியமனம் தொடர்பில் தொடண்டராசிரியர் சங்கம் விழிப்புடன் உள்ளது. இறுதித் தீர்வின் போது சங்கம் பெயர்ப்பட்டியலை உறுதிப்படுத்தும். - என்றார். (ற - 7)

# புதிய பேருந்து நிலையத்தை பாவனைக்கு விடவேண்டும்

## வவுனியா மாவட்ட மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.1
பெரும் நிதிச்செலவில் வவுனியாவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் பாழடைவதற்கு முன்னர் மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு அதை மக்கள் பயன்பாட்டுக்கு விட வேண்டும்என்று மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"திட்டமிடலின்மை காரணமாகவும், ஒத்துழைப்பு இன்மையாலும் 195 மில்லியன் நிதிச் செலவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் கால்நடைகளினதும் நாய்களினதும் கூடாரமாகவும் விளங்குகின்றது. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு உகந்த வகையில் பயன்படுத்த உரிய திட்டமிடலை மேற்கொண்டு ஆவன செய்ய வேண்டும். மக்களின் வரிப் பணத்தில் அமைக்கப்பட்ட இந்தத் திட்டம் வீணாகாத வகையில் பொருத்தமான முடிவை மேற்கொள்ள வேண்டும்.

பேருந்து நிலையமாகவோ அல்லது பொருத்தமான செயல்பாட்டையோ மேற்கொண்டு கட்டடம் பாதிப்படையாதவாறு பாதுகாக்க முன்வர வேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-101)





ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூல் உள்ளது. அந்த நகரில் அரச படைகளுக்கும் ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும் இடையில் தற்போது கடும் சண்டை இடம்பெற்று வருகிறது. சண்டை நடைபெற்றுவரும் மேற்கு மோசூல் நகரில் மழையில் இருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்காக ஒதுங்கியிருக்கும் சிறுவர்களின் ஒளிப்படமே இது. (ம)

# பார்க் கைது

சியோல், ஏப். 1

தென்கொரியாவின் முன்னாள் அதிபர் பார்க் கியூன் ஹை நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) கைது செய்யப்பட்டார்.

பார்க் கியூன் ஹை அதிபர் பொறுப்பில் இருந்த போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார். தனது தனிப்பட்ட இலாபத்துக்காக அரச விடயங்களை சில நிறுவனங்களுக்கு வழங்கினார் என்றும் அவரது நெருங்கிய நண்பியான சோய் சூன் சில் என்பவர், அதிபரின் நண்பி என்ற அந்தஸ்தைப் பயன்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார், அரச ஆவணங்களை ஆராய்ந்தார் என்றும் எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்தன.

இதையடுத்து பார்க் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து லட்சக்கணக்கான மக்கள் இணைந்து சியோலில் பேரணிகளை நடத்தினர். அவர்கள் பார்க்கை கைதுசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதனால் தென்கொரிய நாடாளுமன்றம் பார்க் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பதவியில் இருந்து நீக்கியது.

பார்க்கின் ஊழல் மோசடிகள் தொடர்பில் தென்கொரிய ஊழல் தடுப்புக் கண்காணிப்பகம் விசாரணைகள் நடத்தியது. அவர் குற்றவாளி என்பது உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டதும் சியோல் மத்திய நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய பார்க் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். (ம)





# ட்ரம்பின் நகர்வுக்கு நிரந்தரத் தடை

வொஷிங்டன், ஏப். 1

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் பயணத் தடைக்கு ஹவாய் மாகாண நீதிமன்றம் நிரந்தரத் தடை விதித்துள்ளது.

கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக பதவியேற்ற ட்ரம்ப், சிரியா, ஈராக், ஈரான், ஏமன், லிபியா, சோமாலியா, சூடான் ஆகிய 7 நாடுகளின் பயணிகள், அகதிகள் அமெரிக்காவில் நுழைய தடை விதித்தார். இந்த உத்தரவுக்கு வொஷிங்டன் மாகாண நீதிமன்றம் தடை விதித்தது. இதைத் தொடர்ந்து ஈராக்கை மட்டும் நீக்கிவிட்டு ஏனைய 6 நாடுகளின் பயணிகள், அகதிகளுக்கு தடை விதித்து புதிய ஆணையை பிறப்பித்தார். இந்த ஆணை கடந்த மார்ச் 15ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து 12 இற்கும் மேற்பட்ட மாகாண அரசுகள் அந்தந்த மாகாண நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடர்ந்தன. இதில் ஹவாய் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி டெரிக் வற்சன் கடந்த மார்ச் 15ஆம் திகதி ட்ரம்பின் பயணத் தடை உத்தரவுக்கு தற்காலிக தடை விதித்தார். இந்த வழக்கு நீதிபதி டெரிக் வற்சன் முன்பு நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ட்ரம்பின் பயணத் தடைக்கு நிரந்தர தடை விதிக்கப்பட்டது. (ம)

# ஜெயா வடிவில் தீபாவாம்

## அவரே சொல்கிறார்

சென்னை, ஏப். 1

மக்கள் அனைவரும் என்னை முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வடிவிலேயே காண்கிறார்கள் என்று தெரிவித்தார் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா.

ஜெயலலிதாவின் சாவை அடுத்து அவர் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் (இராதாகிருஷ்ணன் நகர்) எதிர்வரும் 12 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. எம்.ஜி.ஆர் அம்மா - தீபா பேரவையின் சார்பில் தீபா போட்டியிடுகிறார். தேர்தல் பரப்புரைகள் சூடிபிடித்துள்ளன.



இது தொடர்பாக வழங்கிய செவ்வி ஒன்றிலேயே தீபா இவ்வாறு தெரிவித்தார்.

ஆர்.கே.நகர் தொகுதியில் நான் போட்டியிட கூடாது என்று பல்வேறு தரப்பில் இருந்தும் எனக்கு மிரட்டல்கள் வந்தன. எனக்கு கொலை மிரட்டல் கூட விடுக்கப்பட்டது. அனைத்து அச்சுறுத்தல்களையுழ் மீறி நான் போட்டியிடுகிறேன். ஆர்.. கே. நகர மக்கள் எனது அத்தை ஜெயலலிதாவின் வடிவிலேயே என்னைக் காண்கிறார்கள். எனவே ஆர்.கே.நகர் தேர்தலில் நான் வெற்றி பெற பிரகாசமான வாய்ப்புள்ளது. ஜெயலலிதா விட்டுச் சென்ற பணிகளை நான் செய்து முடிப்பேன் ஓ.பி.எஸ். அணியுடன் நான் சேராததுபற்றி என்மீது கடும் விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. நான் ஏன் அந்த அணியுடன் சேர வேண்டும். அவர்கள் நீண்ட நாள்களாக சசிகலாவுடன் இருந்தவர்கள் தானே. எனவே அவர்கள் எவருடனும் சேர எனக்கு விருப்பம் இல்லை என தீபா மேலும் தெரிவித்தார். (ம)

# 50 லட்சத்தை தொட்டுள்ளது சிரிய அகதிகள் எண்ணிக்கை



சிரிய அகதிகளின் எண்ணிக்கை 50 லட்சத்தைத் தாண்டிவிட்டது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஷியா, சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கு இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அந்த நாட்டு அதிபர் அசாத், ஷியா பிரிவைச் சேர்ந்தவர். அவருக்கு எதிராக சன்னி பிரிவைச் சேர்ந்த பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் போரிட்டு வருகின்றன.

மேலும் சன்னி பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ். ஆயுததாரிகளும் சிரியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதனால் சிரியாவில் பலமுனை உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

அதிபர் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்ய ராணுவம் அங்கு முகாமிட்டு போரில் நேரடியாக ஈடுபட்டு வருகிறது. சில கிளர்ச்சிக் குழுக்களுக்கு அமெரிக்கா மறைமுகமாக ஆதரவு அளித்து வருகிறது. அதேநேரம் அமெரிக்க கூட்டுப் படைகள் ஐ.எஸ். ஆயுததாரிகளின் முகாம்கள் மீது வான்வழி தாக்குதலையும் நடத்தி வருகின்றன. இதனால் உயிருக்கு அஞ்சி சிரியாவை விட்டு அகதிகளாக வெளியேறி வாழும் மக்களின் எண்ணிக்கை 50 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (ம)

# வாயில் கறுப்புத்துணி கட்டியபடி நேற்றும் தொடர்ந்தது போராட்டம்

## தமிழக விவசாயிகளும் விடுவதாயில்லை

புதுடெல்லி, ஏப். 1

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் டெல்லியில் 18 ஆவது நாளாக நேற்றும் தமிழக விவசாயிகள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.



தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது, வறட்சி நிவாரணம் வழங்குவதில் சிறு பெரு விவசாயிகள் என வித்தியாசம் காட்டாமல் ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்குவது, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல், அண்டை மாநிலங்களிடமிருந்து தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய நீர் உரிமைகளை நிலைநாட்டுவது, நெடுவாசலில் இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு ஒப்பந்தம் போட்ட மத்திய அரசுக்கு கண்டனம், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவ சாயிகள் டெல்லியில் கடந்த 14 ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். மண்டையோட்டை வைத்துக் கொண்டும், சாவு வீடு நடத்தியும், தூக்குக் கயிறுடனும், எலி மற்றும் பாம்புகளை கடித்தக் கொண்டும் இதற்கு முன்னர் போராட்டம் நடத்தி ஊடகங்கள், மக்கள், அரசியல் கட்சிகள் ஆகிய தரப்புக்களின் கவனத்தையும் ஆதரவையும் பெற்றுள்ள இவர்கள் நேற்றும் நேற்றுமுன்தினமும் வாயில் கறுப்புத் துணி கட்டியபடி போராட்டம் நடத்தினர்.

விவசாயிகளின் கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசு உரிய பதிலை வழங்கவில்லை. இதனால் தமிழகமெங்கும் பரவலாக நாளைமறுதினம் கடையடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வன்

## தவத்துரை ஹரிஷன்

(தரம் 8 மாணவன் -
சென். ஜோன்ஸ் கல்லூரி)



மண்ணுலகில் 14.02.2003
விண்ணுலகில் 03.03.2017

கண்ணை இமை காப்பது போல
கண்ணுக்குள் உனை வைத்து வளர்க்க
காலனும் உன்னில் மையல் கொண்டு
நிமோனியா எனும் கொடும் நோயைத்தந்து
உன்னை எம்மிடமிருந்து பிரித்து
I.C வாட்டினுள் தனிமைப் படுத்தி
எட்டு மணித்தியாலத்தால் உன்னை
எமன் பறித்து விட்டான்
உன்னை இழந்து நாம்
கதறுவதும் அழுது புலம்புவதும்
உன் செவிகளுக்கு கேட்கவில்லையா?

எம்மை ஒரு சொட்டு கண்ணீர்
விட விடமாட்டாய் - இப்போ
நாம் எந்நேரமும் கண்ணீர் சிந்துவது
உன் கண்களுக்கு தெரியவில்லையா?
எம் ஹரச்சுக் குட்டியே
மறு பிறப் பெடுத்து எம்மிடம்
ஓடோடி வாடா கண்ணா……

02.04.2017 அன்று இவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.



**உன் பிரிவால் துயருறும்:**

அப்பா, அம்மா, அன்புத் தங்கை,
அப்பம்மா, மாமாமார், பெரியப்பா,
பெரியம்மாமார், மாமிமார், அக்காமார்,
அண்ணா, மச்சான்மார், மச்சாள்மார்,
குட்டி மருமகள் மற்றும் உறவினர்,
நண்பர்கள், அயலவர்கள்.

203/2, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

# இரண்டாவது செலவுகூடிய நகரமாக கொழும்பு

## பொருளாதாரப் புலனாய்வுப் பிரிவின் ஆய்வு முடிவில் தகவல் வெளியீடு

தெற்காசியாவில் உள்ளதான நாடுகளில் இரண்டாவதுசெலவுகூடியநகரமாகவும்உலகின் 108 ஆவது நகரமாகவும் கொழும்பு தெரிவாகியுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.



இதன்பிரகாரம்பொருளாதார புலனாய்வுப் பிரிவானது (EconomistIntelligenceUnit) தான் மேற்கொண்டதான ஆய்வின் முடிவிலேயே இந்த விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இந்தக் கணக்கெடுப்பானதுஉலகின்133நகரங்களில் இருந்தான 160 வகையான பொருள்களுக்கு 400 இற்கும் மேற்பட்ட விலை நிர்ணய குறிகாட்டி களை ஒப்பீட்டு நோக்கியதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தஒப்பீட்டுஅடிப்படைகளினுள்உணவு,நீர், ஆடை, வீட்டுத்தளபாடங்கள், தனிப்பட்ட பராமரிப்புப் பொருள்கள், வீட்டு வாடகை, போக்குவரத்து செலவு, பயன்பாட்டுக் கட்டணங்கள், தனியார் பாடசாலைகள் போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருந்ததமை குறித்து நோக்கத்தக்கது.

தெற்காசியாவில் செலவுகூடிய நகரங்களின் பட்டியலில் முதலிடத்தை டாக்காவும், மூன்றாவது இடத்தை காத்மண்டுவும் பெற்றுக் கொண்டுள்ளது.

பொருளாதார புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளதான இந்த ஆய்வில் புதுடில்லி, சென்னை, மும்பை, கராச்சி, பெங்களூர் உள்ளடங்கலான 8 தெற்காசியநகரங்களும்உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வணிகம்

# இலங்கை ரூபாவின் பெறுமான மதிப்பீடு குறைவடைந்துள்ளது

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை ரூபாவின் பெறுமான மதிப்பீடு மேலும் குறைவடைந்துள்ளதான தகவலை இலங்கை மத்திய வங்கி வெளிப்படுத்தியுள்ளது.




அமெரிக்கடொலரின்பெறுமானத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதியானது 3.8 வீதத்தால் குறைந்திருந்ததுஎனவும், 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதி முதல் கடந்த மார்ச் மாதம் வரை அதன் மதிப்பு என்பது மேலும் 1.2 வீதத்தால் குறை வடைந்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை தற்போது அமெரிக்கடொலரொன்றின்பெறுமானமதிப்பீடு இலங்கைரூபாவில்151.94 ஆக உள்ளது.

தவிரயூரோவுக்கு3.2வீதமும்,ஸ்டேர்லிங் பவுணுக்கு 2.8 வீதமும், ஜப்பானிய யென்னுக்கு 5.5 வீதமும், கனேடிய டொலருக்கு 1.9 வீதமும், ஆவுஸ்திரேலிய டொலருக்கு 6.1 வீதமும், இந்திய ரூபாவுக்கு 4.8 வீதமும்என்பதான விகிதாசாரத்தில் இலங்கை ரூபாவின் மதிப்பு குறைவடைந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

மேலும் இந்த நிலமைகள் மேலும் தீவிரமடையலாம்எனவும்2016ஆம்ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 2.2 வீதத்தால் குறைவடைந்து ஆயிரத்து 310 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருப்பதாகவும் மத்தியவங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# இலங்கைப் பணியாளர்களுக்கு தீர்வை வரி விலக்களிப்பு

## இலங்கை சுங்கம் தீர்மானம்

இலங்கையிலிருந்து தொழில் நிமித்தம்வெளிநாடுகளுக்குசெல்கின்ற பணியாளர்கள் நாட்டுக்கு திரும்பும் போது எடுத்துவருவதானசிலபொருள்களுக்குதீர்வை வரியை விலக்களிப்ப தற்கு இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.




குறிப்பாக தொழிலுக்காக சென்று ஒருவருடகாலத்தின்பின்பாகநாடு திரும்பும்இலங்கைப்பணியாளர்களுக்கே இந்த வரி விலக்களிக்கப்படும்எனகட்டுநாயக்கவிமானநிலைய பிரதி சுங் கப் பணிப்பாளர் பராக்ரம பஸ் நாயக்க தெரிவித்துள்ளார்.

விசேடமாக குளியலறை உபகரணங்கள், கணினி, சூரியசக்தி உபகரணங்கள் உள்ளடங்கலான மேலும்சிலபொருள்கள் இதில்உள்ளடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தவிர, ஆடை அணிகலன்களுக்காகவும் வரி நிவாரணமொன்றை வழங்குவதற்கு உத்தேசித்து வருவதான தகவலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் குளிரூட்டிகள், உள்ளிட்ட மேலும் சில பொருள்களுக்கான தீர்வை வரி அறவீடுகள் தொடர்ந்தும்நடைமுறையில்இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

# நிலையான அபிவிருத்தி இலக்குக்கான 'விசமற்ற நாடு' செயற்திட்டம் ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தி இலக்கு மற்றும் 'விசமற்ற நாடு' என்பதான மூன்றாண்டுதிட்டத்தின்அடிப்படையிலே நிலையான இலங்கையின் தேசிய நிகழ்வுகள்ஆரம்பமாகியுள்ளது.



அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனதலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளமேற்படிநிகழ்வானது இம்மாதம் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வுகளில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறான 5 தலைப்புக்களில் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் நிலையான அபிவிருத்தியை இலக்காக கொண்ட செயற்பாடுகளின்காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக சொல்லப்படுகிறது.

# 'நானோ டிஸ்க்' பரிசோதனை முறைமை

## காச நோயை குருதிப் பரிசோதனை மூலம் கண்டறியும் புதிய நடைமுறை

நுட்பம்



தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப் படிநிலைகள் மனிதனின் இயங்குநிலையில் பௌதிக ரீதியாக ஏற்படும் பாதிப்புகளை கண்டறிவதற்கும் உகந்த சிகிச்சை முறைமைகள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் உதவிபுரிகின்றது.

அந்தவகையிலே 'நானோ டிஸ்க்' எனப்படுவதான புதிய பரிசோதனை முறைமை மூலமாக காச நோயை ஒரு மணித்தியால கால இடைவெளியில் கண்டுபிடித்துக்கொள்ள முடிவதாக அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். உயிர் கொல்லி நோய்களின் வரிசையிலே காச நோய் உள்ளடங்கியுள்ளதுடன் உலகளவில்மிகக்கரிசனை கொள்ளப்படவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த நோயாக உலக சுகாதார நிறுவனம் இதனைக் குறித்துச் சொல்லியுள்ளது.




அத்துடன் பன்னாட்டு ரீதியிலே ஆண்டுதோறும் ஒரு லட்சம் பேர் வரையானோர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். 20 லட்சம் பேர் சாவடைகின்றனர். காச நோயை உருவாக்கும் பக்ரீரியாக்கள் பல ஆண்டுகளாக நோயாளியின் நுரையீரல் திசுக்களில் தங்கி உயிர் வாழ்வதாகவும் உடலில் உள்ள பல உறுப்புகளுக்கும் பரவி காச நோயை உருவாக்குவதாகவும் மருத்துவ ஆய்வுகள் கண்டறிவுகளை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் காசநோயினால் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு மடங்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும்காசநோயானது இருமலின் போது ஏற்படும்சளி, மற்றும் குருதி மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்வதன்மூலமாககண்டுபிடிக்கப்படுகிறது. அதிலும்மாதிரிகள்வழங்கப்பட்டு3நாள்கள் அல்லது ஒரு வார காலம் கழித்தே அறிய முடிவதாக சொல்லப்படுகிறது.

# பாகிஸ்தானிலிருந்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு கிடைக்கவுள்ளது

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு நிவாரண உதவியாக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



குறிப்பாகஇலங்கையில்ஏற்பட்டுள்ளவறட்சியானகால நிலையின் அவதானிப்பைத் தொடர்ந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் விடுக்கப்பட்டதான நேரடி உத்தரவுக்கு அமைவாகவே இந்த உதவி இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

அரிசி அடங்கியதான கொள்கலன்கள் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும்குறித்தகப்பலானது எதிர்வரும் மூன்றாம் திகதி நாட்டை வந்தடையமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அவசர தேவைப்பாடு கருதி கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி 25 மெற்றிக் தொன் அரிசியை பாகிஸ்தான் கொழும்புக்கு விமான மூலம் அனுப்பி வைத்திருந்ததான தகவல் அயலுறவுத்துறை அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# களைகட்டாத வடக்கு மாகாண சபையின் 89 ஆவது அமர்வு

தி.சோபிதன்

வடக்கு மாகாண சபையின் வழமையான அமர்வுகளை விட நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் வழமைக்கு மாறாகப் பல விடயங்கள் நடைபெற்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வழமையாக வடக்கு மாகாண சபை அமர்வுகள் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு முற்பகல் 11.05 மணியளவில்தேநீர் இடைவேளைவிடுவது வழக்கமாகும். ஆனால், இந்த அமர்வு தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தான் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 89 ஆவது அமர்வுக்காக உறுப்பினர்கள் பேரவைக்குள் வந்தனர். அப்போது வடக்கு மாகாண அவைத்தலைவருக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாகவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளதாகசில உறுப்பினர்கள் அறிந்தனர். பேரவை அதிகாரிகளும் சபை அமர்வை பிரதி அவைத்தலைவரின் தலைமையில் நடத்துவது எனத் தீர்மானித்தனர். அதன் படி பிரதி அவைத்தலைவருடன் பேரவை அதிகாரிகளும் தொடர்பை ஏற்படுத்தினர். அப்போது பிரதி அவைத்தலைவர் ஒரு திருமண நிகழ்வில் நிற்பதாகத்தெரிவித்துள்ளார். எனினும்நிலைமையை எடுத்துக் கூறி பிரதி அவைத்தலைவர் தலைமையில் சபையை நடத்த முடிவு செய்தனர்.

### சிற்றுண்டிகள் தயாராகவில்லை

அதற்கிடையில் சபை அமர்வு ஆரம்பிக்க முன்னரே தேநீர் இடைவேளையை எடுக்குமாறு பணிக்கப்பட்டது. அதன் படி உறுப்பினர்களும்தாங்கள்தேநீர்இடைவேளையைஎடுக்கச் சென்றனர் ஆனால் அங்கு தேநீருடன் வழங்கப்படும் சிற்றுண்டிகள் தயாராகவில்லை என சில உறுப்பினர்கள் மீண்டும் சபை மண்டபத்துக்கு வந்துவிட்டனர். இதனை அறிந்து கொண்ட பேரவை உத்தியோகத்தர்கள் சிற்றுண்டிவழங்கப்படவில்லை என்றால் அதுவும் ஒரு பிரச்சினையாகப் போய்விடும் என பேரவை அதிகாரிகளிடம் தெரிவிக்க அவர்களும் சிற்றுண்டிகளை உடனடியாக ஒழுங்குபடுத்தினார்கள். பின்னர் சபை மண்டபத்துக்குள் இருந்த உறுப்பினர்களிடம் சென்று சிற்றுண்டிகள் தயாராகி விட்டன. எனவே நீங்கள் உங்கள்தேநீர்இடைவெளியைஎடுத்துக்கொள்ளுங்கள்என அறிவுறுத்தினார் அதன் படி உறுப்பினர்களும் தேநீர் இடைவெளியை எடுத்தனர்.

தேநீர் இடைவெளிக்குசென்றஉறுப்பினர்களில்பலர்நீண்ட நேரமாகியும்சபைக்குள்வராததால்சபையில்நின்றஉறுப்பினர்கள் "ஐயோ எல்லாரும் வாங்கோவன், நேரமாகுது சபையை ஆரம்பிப்போம்" என அழைத்தனர். பின்னர் ஒரு வகையாகஅனைத்துஉறுப்பினர்களும்சபைமண்டபத்துக்குள் வந்தனர்.

### பட்டுவேட்டியுடன் பிரதி அவைத் தலைவர்

அதன் பின்னர் திருமண நிகழ்விலிருந்து பட்டு வேட்டி சால்வையுடன்வருகைதந்தபிரதிஅவைத்தலைவர்கமலேஸ்வரன் தலைமையில் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின. சபையின் அறிவித்தல்களை அறிவித்தார் பிரதி அவைத்தலைவர். அதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் தவராசாகேட்கவிருந்தகேள்வியைமுதலமைச்சர்சபையில் இல்லாததால் அடுத்த அமர்வுக்குத் தள்ளி வைப்பதாக அறிவித்தார்.

### எதிர்க்கட்சித் தலைவரின் ஆதங்கம்

இதன்போதுஎழுந்தஎதிர்க்கட்சித்தலைவர், "வடக்குமாகாண முதலமைச்சரிடம் நான் கேள்வி கேட்கவென பல அமர்வுகளின்நிகழச்சிநிரலில்உள்வாங்கப்படுகின்றபோதிலும்அவர் இல்லாததால் தள்ளிப்போகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர்நடப்பாண்டில்நடைபெற்றஎந்தவொருஅமர்விலும் பங்குபற்றவில்லை. ஒரு பொறுப்பான பதவியிலிருந்து இவ்வாறுசெய்வதுசரியல்ல. அவ்வாறுஅவருக்குநேரம்இல்லை என்றால் இதுக்கு என சிறப்பு அமர்வு நடத்துங்கள்" என கருத்தை முன்வைத்தார்.

"இந்தஆதங்கம்எனக்கும்இருக்கின்றது. எதிர்க்கட்சித்தலைவரே! என்ன செய்வது. நான் இந்த விடயத்தை முதலமைச்சரின்கவனத்துக்குக்கொண்டுவருகின்றேன், நிச்சயமாக அடுத்த அமர்வில் இந்த வினா எடுத்துக் கொள்ளப்படும்" எனதெரிவிக்கஉறுப்பினர்களுக்குஇடையில்சலசலப்பு ஏற்பட்டது.

"எல்லாரும்ஒரேடியாகதைக்காதங்கோஇண்டைக்குஇங்கு வந்திருக்கிறதுகொஞ்சஉறுப்பினர்கள்தான். ஆகவேஎல்லாரும் ஒவ்வொருவராகக் கதைப்பம் சரியோ மத்தியான சாப்பாட்டுக்கு வேறநேரமாகும். ஆகவே பொறுமையாகக் கருத்துக்களை முன்வையுங்கள்" என தவநாதன் கூறினார்.

அதன் பின்னர் முதலமைச்சர் முன்மொழிய இருந்த நியதிச் சட்டங்களை விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் முன்மொழிவார் என உறுப்பினர்கள் எதிர்பார்த்து இருந்தனர். அதன் போது பிரதி அவைத்தலைவர் முதலமைச்சர் இல்லாததால் நியதிச் சட்டங்களையும் அடுத்த அமர்வில் எடுப்போம் என அறிவித்தார்.

### நியதிச் சட்டம்

இதன்போது எழுந்த சர்வேஸ்வரன் சபை நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் விவசாய அமைச்சரே முதலமைச்சரின் நியதிச் சட்டத்தை முன்மொழிவதாக முடிவெடுக்கப்பட்டது. இங்கும்அவர்உறுப்பினர்களிடம்அதுதொடர்பாககதைத்து விட்டுஇப்போதுசபைக்குள்ளேயேஅவரைக்காணவில்லை என்றார்.

ஏனைய உறுப்பினர்களும் அமைச்சர் உடனடியாக சபைக்குள் வரவேண்டும் எனவலியுறுத்தினர்.

நான் இன்று மாகாண சபைக்கு வரும் போது 1980 ஆம் ஆண்டுகளில் பாடசாலைக்கு சென்ற நினைவுகள் தான் வந்தது. ஏனெனில் அதிபரும் வரவில்லை. ஆசிரியர்களும் வரவில்லை. அந்த நிலைமையில் தான் இருந்தது. இந்த அவையில் ஏராளமான பிரேரணைகள் வரும். அமைச்சர்கள் சம்பந்தமான பிரேரணைகள் வரும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இருக்கமாட்டார். பின்னர் அதனை இன்னொரு நாளுக்கு மாற்றுவார்கள். இப்படியேகாலம்போய்க்கொண்டிருக்குது என அகிலதாஸ்கூற, சட்டென எழும்பினார் உறுப்பினர் விந்தன். அகிலதாசின் கருத்தை நான் ஆட்சேபிக்கின்றேன் மாகாண சபை முழுமையாக எதுவும் செய்யவில்லை என அவர் கூறவருகின்றார். ஆகவே நாங்கள் தேர்தல் காலங்களில் மாகாண சபையின் ஊடாக செய்த சாதனைகளை தேர்தல் மேடைகளில் சந்திக்கத் தயார் என்று கூறினார்.

### மக்களுக்கு உதவாத மாகாண சபை

தவராசா மாகாண சபை சிறப்பாக செயற்படுகின்றதா இல்லையா என விமர்சிக்க அகிலதாசுக்கு உரிமை இருக்கின்றது. அவர் மட்டுல்ல நான் இந்த இடத்தில் ஆழமாக சொல்கின்றேன். மாகாண சபை மக்களுக்கு தேவையான எதையும்திறம்படச்செய்யவில்லை. ஆகமரம்நட்டதைவிட வேற என்ன பிரயோசனமாக செய்தது. இதுக்கு ஆளுநரிட்டையேஎல்லாம்இருந்திருந்தால்திறனாகஅபிவிருத்தி நடந்திருக்கலாம்.

பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இன்றுவரை நிறைவேற்ற முடியவில்லை என எனது மனச்சாட்சி உறுத்துகின்றது. இதே மனநிலையுடன் இனியும்தேர்தலில்போட்டியிடவேண்டும், அரசியலில் இருக்க வேண்டும் என்ற எண்ணமேஇல்லை. நான்இந்ததடவையுடனேயேஒய்வு பெறக் காத்திருக்கின்றேன். ஆகவே மாகாண சபையின் பதவிகாலம்இருக்கின்றஒருகொஞ்சநாளில்முடிந்தவற்றை மக்களுக்குசெய்துமனச்சாட்சிக்குகட்டுப்பட்டுஅரசியலிலில் இருந்து விலகப்போறேன் என ஜவாகீர் தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். இப்படியே உறுப்பினர்கள் தங்களுக்குஇடையில்மாகாணசபைஎதுவும்செய்யவில்லை என வாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

### சுகாதார அமைச்சரின் பதில்

இதற்கிடையில் அமைச்சர் சத்தியலிங்கம் "மாகாண சபை என்ன செய்திருக்கின்றது என ஆவணங்களை எடுத்துப் பாருங்கள். அதைவிடுத்து சும்மா மாகாண சபை ஒன்றும் செய்யவில்லைஎன்று கூறிக்கொண்டிருக்காதீர்கள். இங்க இருந்துஇப்படிசொல்லுறதுமல்லாக்காய்படுத்துக்கொண்டு காறித்துப்புற மாதிரி இருக்கு" என்றார்.

வடக்கு மாகாண சபையில் வழமையாக நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவகையில்தான் பெரும்பாலான விடயங்கள் ஆராயப்படும். ஆனால்கடந்தஅமர்வில்உறுப்பினர்கள்கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாது சம்பந்தம் இல்லாது பேசுவது வழக்கமாக இருந்தாலும் முழுமையாக சம்பந்த மில்லாத அநேகமான விடயங்களைக் கதைத்தனர். வழக்கமாக நிகழ்ச்சி நிரலின்விடயத்துக்குமாறாகசபைசெல்லும்போது அவைத் தலைவர் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தி விடயங்களை விரைந்து முடிப்பார். ஆனால் முழுமையான கட்டுக் கோப்பில்லாமல் நடைபெறாது சபை அமர்வு.

### அமைச்சர் நுழைந்தார்

இப்படிசபைவிறுவிறுப்பாகநடந்துகொண்டிருக்கும்போது சபைக்குள் அமைச்சர் ஐங்கரநேசன் நுழைந்தார். அந்த நேரத்தில் ரவிகரனின் நாயாற்று பகுதியில் அத்து மீறும் தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்தும் பிரேரணை தொடர்பான விவாதங்கள் நடைபெற்றன. ரவிகரனும் தொடர்ந்து கடல் வளத்தைப் பாதுகாக்க வேண்டும். முல்லைத்தீவு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்என ஆதாரத்துடன் சபையில் பலகடதாசிகளையும் காட்டி மக்களின் பிரச்சினைகளை சுட்டிக் காட்டுவார். இங்கே சும்மா அதைப்பற்றி கதைக்கிறோமே தவிர பிரச்சினை முடிந்ததாக இல்லை. என பசுபதிப்பிள்ளை தனது மனக்குமுறலைவெளிப்படுத்தினர். நான்பேருந்துஒன்றை ஒழுங்கு செய்கின்றேன். அனைத்து உறுப்பினர்களும் முல்லைத்தீவுக்குசெல்வோம். அங்குமக்களின்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாவிட்டாலும் அவர்களுக்கு ஒரு ஆறுதலையாவது கூறுங்கள் என்றால் இன்று வரை ஒருவர்கூட அதற்குத் தயாரில்லை என்றார்.

சபையில் என்னால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் எத்தனை? அதில் எத்தனை முழுமையாக நிறைவேற்றப்பட்டன? எவைநிறைவேற்றப்படவிலைஎன்பதைரவிகரன் பட்டியலிட்டுசபையில்கூறினார். அத்துடன் என்னால்சபையில்கொண்டுவரப்படும்பிரேரணைகள்மக்கள்பிரச்சினை சார்ந்தவை. அவற்றுக்கான ஆதாரங்களுடனேயே நான் இங்குவருவதுவழக்கம். வீக்லீஸ்இரகசியஆவணம்போல நானும் முழு ஆவணங்களுடனேயே சபைக்கு வருவது வழக்கம் என்றார். பின்னர் அந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டு பரஞ்சோதியின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை சபையில் முன்மொழியப்பட்டது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம்கோரல் விளம்பரத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது.

பின்னர் அதில் திருத்தங்களைச் செய்யுமாறு இச் சபை வடக்கு மாகாண ஆளுநரை கோருகின்றது என திருத்தும் போது வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா அரசமைப்பு ரீதியாக வடக்கு மாகாண ஆளுநரைக் கோர அனுமதி இல்லை எனத் தெரிவித்தார்.

வடக்குமாகாணசபைநேரடியாகஆளுநரிடம்கோரிக்கை முன்வைக்க முடியாது என வடக்கு ஆளுநர் யாழ்ப்பாணத்தில் வைத்து சொல்லுவாராயின் இலங்கையின் அரசமைப்பை அவரின் அலுவலகத்துக்கு முன்னால் தீயிட்டு கொளுத்துவேன். வடக்கு மாகாண சபையின் ஊடாக சில விடயங்கள் ஆராயப்பட்டு அரச தலைவரையும் தலைமை அமைச்சரையும் இச் சபை கோருகின்றது என சபையில் தீர்மானங்கள்எடுக்கப்படும்போது இவர்களுக்குகீழ் உள்ள ஆளுநரை ஏன் நாம் நேரடியாகக் கோரமுடியாது எனசிவாஜிலிங்கம்சூடானார். ஏனைய உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

### விவசாய அமைச்சரின் விளக்கம்

நான் இங்கு சபையில் இல்லாத போது அமைச்சர் பொறுப்பற்றவிதத்தில்செயற்படுகின்றார் அவர் நியதிச்சட்டங்களை முன்மொழியாமல் சபையை விட்டு எங்கோ சென்று விட்டார் என இங்குள்ள பல உறுப்பினர்கள் பலவாறான கருத்துக்களை முன்வைப்பதாக எனக்கு குறுந்தகவல்கள் மற்றும்தொலைபேசி அழைப்புக்களும் வந்தன என விவசாய அமைச்சர் தனது விளக்கத்தைச் சொல்ல ஆரம்பித்தார். முதமைச்சர் கடந்த சிலதினங்களுக்கு முன்னர் என்னுடன் தொடர்பு கொள்ளும் போது நியதிச் சட்டங்களை சபையில் முதலில் தாம் சமர்ப்பிப்பதாகவும் அதன் பின்னர் பிரதி அவைத்தலைவர்கொண்டுநடத்துவார்என்றும்கூறினார். ஆனால்அதற்குப்பின்னர்நடைபெற்றஒழுங்குகள்எனக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்றார். பிரதி அவைத்தலைவரும் "நான் திருமண வீடு ஒன்றில் நின்றேன். திடிரென அவையைபொறுப்பேற்றுநடத்தவேண்டியசூழ்நிலைக்கு தள்ளப்பட்டதால் நான் நிகழ்வு ஒழுங்குப் பத்திரத்தை முழுமையாகப் பார்க்கவில்லை அதனால் சிறு குழப்பநிலை ஏற்பட்டு விட்டது" என்று சொல்லி அவையை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து எல்லா உறுப்பினர்களுக்கும் மதிய போசனம் தயாராகி விட்டதாம் எல்லாரும் சாப்பிட்டு போங்கள் என அறிவித்து சபையை ஒத்திவைத்தார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# காணி விடுவிப்பின் இராணுவ அரசியல்

கேப்பாபிலவுமக்கள்தமதுநிலத்தைத்திரும்பத்தருமாறு கேட்டு நடத்திவரும் போராட்டம் ஒரு மாதத்தைக் கடந்துவிட்ட நிலையிலும் அந்த மக்களுக்குத் தீர்க்கமான ஒருமுடிவுகிட்டவில்லை.அந்தக்காணியைவிடுவிப்பதற்குப் படையினர்இணக்கம்தெரிவித்திருக்கின்றனர்என்றசெய்தி வெளியாகி இருக்கிறது. எனினும் எப்போது அது நடைபெறும்என்பது உறுதியாக அறிவிக்கப்படவில்லை. மே மாதம் 15ஆம் திகதி அரைவாசிக் காணிகள் விடுவிக்கப்படலாம் என்று அமைச்சர் எம்.சுவாமிநாதன் தெரிவித்திருக்கிறார்.

இந்த மக்கள் சுமார் 4 வருடங்களுக்கு மேலாகத் தமது காணிகளுக்குத்திரும்புவதற்காகக்காத்துக்கிடக்கிறார்கள். அவர்களின் சுமார் 500 ஏக்கர் காணியைப் படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

அரச தலைவராக மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்த காலத்தில் அந்த வளம்மிக்க காணிகளைக் கையகப்படுத்துவதற்குப் படையினர் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தனர். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது காணிகள் தமது கைகளுக்குத்திரும்பக்கிடைத்துவிடும் என்கிறநம்பிக்கையோடுதமிழ் மக்கள்காத்திருந்தார்கள். ஆனால், அது நடைபெறவில்லை. இதனால்தான்காணிகளைமீட்டெடுக்கும் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்தனர்.

இவர்களின் போராட்டம் குறித்து எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோதும் காணிகளை விடுவிக்க அவர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. தமிழ்த் தலைவர்கள் மக்களின் போராட்டங்களை எடுத்துக்கூறிக் காணிகளை விடுவிக்கக் கோரும் போதெல்லாம், உடனடியாக படைத் தளபதிகளுக்குத் தொலைபேசி அழைப்பெடுத்துக் காணிகளை எப்போது விடுவிக்க முடியும் என்று அரசதலைவர்பேசுவது வாடிக்கையாகிப் போய்விட்டது.

இலங்கையின்முப்படைத்தளபதி உண்மையிலேயே அரச தலைவர்தான் என்றபோதும், மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று இராணுவத்தை அந்த மக்களின் காணிகளில் இருந்து வெளியேறும் உத்தரவை வழங்குவதற்கு ஏனோ அரச தலைவரும் தலைமை அமைச்சரும் தயங்கி வருகின்றனர்.

அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற கடந்த 2 வருட காலத்திலும் இதுவே நடந்தது. மக்கள்தமது காணிகளைத் திரும்பத் தருமாறு போராட்டம் நடத்தும் போதெல்லாம் அது குறித்துப்படைகளின்தளபதிகளுடன் பேசுவதும், காணிகளை அவர்கள் எப்போது விடுவிப்பார்கள் என்பது தொடர்பான கால அட்டவணை ஒன்றைத் தருமாறு அரசியல் தலைவர்கள் கேட்பதும் நடக்கும். ஆனால், பின்னர் அதுவொன்றும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் பிலக்குடியிருப்பு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோதும் இதுபோன்றே நடந்தது. காணிகளை விடுவிப்பது குறித்த கால அட்டவணை படையினரிடம் கோரப்பட்டது. ஆனால், அப்படியொரு அட்டவணை வெளியிடப்படவேயில்லை. இப்போது கேப்பாபிலவு மக்கள் போராட்டம் நடத்தும்போதும் இராணுவத்தளபதியிடம்காணிகளைஎப்போதுவிடுவிப்பீர்கள் என்று அரச தலைவர் கேட்கும் நிலைதான் இருக்கிறது.

தமிழர்கள் பகுதி என்பதாலேயே பாதுகாப்புக் காரணங்களைக்கூறி இதுபோன்று நடந்துகொள்வது இலகுவானதாகவும் உள்ளது. படையினர் தொடர்பான தெற்கு அரசியல் தலைவர்களின் இந்த அணுகுமுறை தற்போது இராணுவத்தினரைமீளக்குடியமர்த்தும்நிலைக்குஇட்டுச்சென்றுள்ளது.

கேப்பாபிலவு காணியை விடுவிக்க வேண்டுமானால் அங்குள்ளஇராணுவ முகாமை அகற்றி வேறிடத்தில் அமைக்க சிறைச்சாலைகள்மறுசீரமைப்புமற்றும்மீள்குடியமர்த்துகை அமைச்சிடம் இருந்து 50 லட்சம் ரூபா பணம் கேட்கிறது இராணுவம்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களே இன்னும் மீளக்குடியமர்த்தப்படாதுள்ள நிலையில் இராணுவத்தை மீளக்குடியமர்த்தக் கேட்பது எந்தவிதத்தில் நியாயம் என்று தெரியவில்லை. ஆனாலும் இராணுவமும் அரசியல் தலைவர்களும் இதுபோன்றே நடந்துகொள்கிறார்கள். இதைப் பார்க்கும்போது இராணுவமா? ஆட்சியில்உள்ள அரசியல் வாதிகளா பெரியவர்கள் என்ற கேள்வி எழுகிறது.

# இந்தியாவின் பசப்பு வார்த்தைகள் இனியும் தேவைதானா?

சேரலாதன்



இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கு இந்தியாகடமைப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளமை இலங்கைத் தமிழர்கள் மத்தியில் எந்தவித மானபிரதிபலிப்பையும்ஏற்படுத்தவில்லை.ஏனென்றால்இந்திய அரசியல்தலைவர்களதுஇதைப் போன்றவாக்குறுதிகளைக்கேட்டுக் கேட்டுச் சலித்துப் போனவர்கள் அவர்கள்.

இலங்கையில் இந்தியாவின் தலையீடு இல்லாதிருந்தால்தமிழர்களின் பிரச்சினைக்கு எப்போதோ தீர்வு கிடைத்திருக்கும் என்பதை எவருமே மறுத்துவிட முடியாது. தானும்தீர்வைப்பெற்றுத் தராது. வேறு தரப்புக்களது தீர்வுமுயற்சிகளுக்கும்தடையாகவிருந்து தமிழர் பிரச்சினையைக் குழப்பியடித்த பெருமை இந்தியாவுக்கே உரித்தானது.

### ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்திராகாந்தியின் பங்களிப்பு கனதி மிக்கது

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர் மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமரான இந்திரா காந்தி அம்மையார். இலங்கை அரசுகளது கபடத்தனங்களை அவர் புரிந்து கொண்டதால், தமிழர்களைப் பாதுகாப்பதில் அவர் முனைப்புடன் செயற்பட்டார். இதன் காரணமாகவே தமிழ் இளைஞர்களுக்கு இந்தியாவில் வைத்து ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆயுதப் போராட்டத்தின் மூலமே இலங்கை அரசை ஒரு வழிக்குக்கொண்டுவரலாம்எனவும் அவர் நம்பினார். ஆனால் எவருமே எதிர்பார்க்காத வகையில்இந்திராகாந்திஅம்மையார் அவரது மெய்ப்பாதுகாவலராலேயே 1984 ஆம் ஆண்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரது மறைவு ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் ஈடு செய்ய முடியாத ஒன்று.

இந்திரா அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் அரசியலில் அனுபவமே இல்லாத, விமான ஓட்டியாகப் பணிபுரிந்து கொண்டிருந்த அவரது மூத்த புதல்வரான ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமரானார். அரசியலுக்குப் புதியவ ரான இவர், தமது வெளிவிவகார ஆலோசகர்களின் தவறான வழிநடத்தலின் கீழ் செயற்பட ஆரம்பித்தார். அப்போதுஇந்திய வெளிவிவகாரத்துறை மலையாளமொழிபேசுபவர்களின்கட்டுப்பாட்டின்கீழ் இருந்ததால் அவர்கள் இயல்பாகவே தமது தமிழர்விரோதப்போக்கைஈழத் தமிழர்களிடம்காட்ட ஆரம்பித்தனர்.

### இந்திய அமைதி காக்கும் படையால் இலங்கைத் தமிழர்கள் பட்ட அவஸ்தை

இதன் விளைவாகத்தான் அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்தியப்படைகள் இலங்கைக்குள் புகுந்தன. ஆனால் தமிழர் தாயகப் பகுதிகளில் அமைதியைச் சீர்குலைப்பதற்கு இவர்களே காரணமாகினர். 48 மணி நேரத்தில் புலிகளை அழிப்பதற்கென வந்த இந்தியப் படையினர் இரண்டு வருடங்கள் போராடிக் களைத்துப்பேரிழப்புக்களுடனும்,தீராத அவமானத்துடனும் நாடு திரும்பினர்.பின்னர்1991ஆம்ஆண்டு ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

அரசுகள் மாறிய போதிலும் இந்தியாவின் கொள்கையில் மாற்றம்ஏற்படவில்லை. இறுதிப்போரின்போது இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கிய உதவிகள் புலிகளை அழிக்க உதவின. அத்துடன் அப்பாவித் தமிழர்களின் உயிரிழப்புக்களுக்கும் காரணமாய் அமைந்தன.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர்இந்தியஅரசின்உயர்மட்டத் தலைவர்கள் பலர் இங்கு வந்தனர். பல்வேறு வாக்குறுதிகளை அள்ளிவீசினர். பிரதமர் நரேந்திரமோடியும் வந்தார். அவரது வாயிலிருந்தும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான வார்த்தைகள்தெறித்துவீழ்ந்தன. பின்னர் எல்லாமே ஓய்ந்துபோய் விட்டன.

இலங்கை விடயத்தில் தலையிடாது இந்தியா விலகியிருந்தாலே ஈழத்தமிழர்கள் ஏதோ ஒரு வகையில் தீர்வைக் கண்டுவிட முடியும். ஏனென்றால் இந்தியாவைமீறிச்செயற்படுவதற்கு ஏனைய உலகநாடுகள் ஒருபோதுமே விரும்பப் போவதில்லை.

### இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா கடும் அக்கறைகாட்டாது

இந்தியாவுக்குத் தலையிடிகொடுத்துக் கொண்டிருக்கின்ற பலபிரச்சினைகள்தீர்வுஏதுமின்றித்தொடர்ந்துகொண்டிருக்கின்றன.காஷ்மீர்ப்பிரச்சினைஇவற்றுள் தலையானது. 1947 ஆம் ஆண்டு பாகிஸ்தான் உருவான போதே இந்தப் பிரச்சினையும் ஆரம்பித்து விட்டது.

இமயமலையை அண்டியதாக காஷ்மீர்ப் பிரதேசம் அமைந்துள்ளதால் இயற்கையான அழகு நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இதன்ஒருபகுதியைப் பாகிஸ்தான்அடாத்தாகப்பிடித்து வைத்திருப்பதாக இந்தியா குற்றம் சாட்டி வருகின்றது. ஆனால் இந்தியாதான் தமக்குச் சொந்தமானகாஷ்மீர்ப்பகுதியை ஆக்கிரமித்துள்ளதாகப் பாகிஸ்தான் கூறி வருகின்றது. இதில் எவர் பக்கம் நியாயம் உள்ளது என்பதை எவராலும் தீர்மானிக்க முடியவில்லை. பாகிஸ்தான் வெளிநாடுகள் இதில் தலையிட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வருகின்றது. ஆனால் இந்தியாஇந்தக்கோரிக்கையை அடியோடு நிராகரித்து வருகின்றது. இதைப்போன்றுதான் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே எல்லைப் பிரச்சினை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இந்த நிலையில் இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு இந்தியா தீர்வைத் தருமென எதிர்பார்ப்பது மடமைத்தனமானது.

இந்திய இலங்கை மீனவர்கள் மத்தியில் நீண்ட காலமாகவே முரண்பாடுகள் காணப்படுகின்றன.இந்தியமீனவர்கள்எல்லை தாண்டி இலங்கையின் கடற்பரப்புக்குள் ஊடுருவுவதன் காரணமாகவே பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. இது இந்தியாவுக்கு நன்கு தெரியும். ஆனால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டாது பார்த்துக் கொள்வதற்கு இந்தியாவால் முடியவில்லை.

ஈழத்தமிழர்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு இந்தியா உதவுமென இனியும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அத்துடன் இந்தியாவின் துரோகத்தனம் தொடர்வதையும் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. இந்திய அரசியல்வாதிகளின்பசப்புவார்த்தைகளைக் கேட்டு இனியும் நாம் ஏமாற இயலாது.

அரசதலைவர்பதவியில்மகிந்த இருந்தால் என்ன? அல்லது மைத்திரி இருந்தால் என்ன? இந்தியாவுக்குஎல்லாமேஒன்றுதான்.

இந்தியாவின் நலன்களைப் பேணுபவர்களாக இலங்கைத் தலைமைகள் இருந்தாலே அதற்குப் போதுமானது. இந்த நிலையில் ஈழத்தமிழர்களைப் பற்றியசிந்தனை இந்தியாவுக்கு எவ்வாறு எழும்? இந்தியா தனது பசப்பு வார்த்தைகளை இனியும்தொடரவேண்டுமா?

# அரசியல் உள்நோக்கம் கொண்டது விமலின் உணவு ஒறுப்புப் போராட்டம்

சிங்கள மூலம் - பண்டார
(ஞாயிறு மவ்பிம)
தமிழில் - வீ.எஸ்.ரீ

ஹொங்கொங் நாட்டின் முன்னாள் தலைவர் டொனால்ட் சன்க் தம்மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களில் குற்றமிழைத்தவராக நீதிமன்றால் தீர்மானிக்கப்பட்டுள்ளார். வர்த்தக முதலீட்டாளரொருவருக்கு ஆடம்பர வீடொன்றை கூலிக்குப் பெற்றுக் கொடுத்ததில் ஊழல் புரிந்ததாக அவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்தது.

அதேவேளை, பிரான்ஸின் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் புறூணோ லெறொயுக்ஸ் தமது இரு மகள்மாருக்குத் தமது அமைச்சில் வேலை வாய்ப்பு வழங்கியதான குற்றச்சாட்டின் பேரில், தாமாகப் பதவி விலகியுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக நேரடி விசாரணை மேற்கொள்ளுமாறு பிரான்ஸ் சட்டமா அதிபர் உத்தரவிட்டிருந்தார். விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே புறுணோ தமது அமைச்சர் பதவியிலிருந்து கடந்த 22ஆம் திகதி விலகிக் கொண்டுள்ளார்.

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக, பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரொருவரான பன்கொயிஸ் பிலோன் என்பவரும் கூட இத்தகைய ஊழல் குற்றச்சாட்டொன்றுக்கு உள்ளாகியுள்ளாார். தமது செல்வாக்கைப்பயன்படுத்தி முறையற்ற விதத்தில் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு அரச வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார் என்பதே அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டாகும். அதே வேளை பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளரான மரினேலே பென் என்ற பெண்மணிக்கு எதிராகவும் அரச நிதியை முறையற்ற விதத்தில் செலவிட்டதாகக் கடும் குற்றச்சாட்டொன்றுசுமத்தப்பட்டுள்ளது. உலக அரசியலரங்கின் இத்தகைய சம்பவங்கள் இப்போது நினைவுக்கு வர நேர்ந்தமைக்கான காரணம், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, தடுப்புக் காவலில் உள்ள தமக்கு பிணை வழங்க மறுக்கப்படுவதை ஆட்சேபித்து ஆரம்பித்துள்ள உணவு ஒறுப்புப்போராட்டம்குறித்ததகவல்கள்தினம் தினம் புதுப்புது ரூபத்தில் வெளியாகி வருவதேயாகும்.

### விமலின் போராட்டம் அரசியல் உள்நோக்கம் கொண்டதொன்றே

தாம் அரசியல்ரீதியாகப்பழிவாங்கப்படுவதாகக் குற்றஞ் சாட்டியே விமல் வீரவன்ச தமது உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். ஆயினும் விமல் வீரவன்சவின் இத்தகைய போராட்டம் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட இயலாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை விமல் வீரவன்சவின் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் ராஜாங்க அமைச்சர் அஜித்பிபெரேராஒருவிடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். அரச வாகனங்களைத் தவறான விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயேவிமல்வீரவன்சநீதிமன்றத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் ஒருபோதும் அரசியல் கைதியாக அடையாளப்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே ராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா, விமல் வீரவன்சவினது விளக்கமறியல் குறித்து இவ்வாறு விளக்க மளித்திருந்தார்.

எமது நாட்டின் நீதிவான் நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரையான சகல நீதிமன்றங்களும் தமது செயற்பாடுகளைச் சுயாதீனமான விதத்தில் முன்னெடுத்து வருகின்றன. சகல நீதிபதிகளும் சட்ட விதிகளுக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றனர். எமது நாட்டில் பிணை வழங்கல் தொடர்பான சட்ட விதிகள் நடைமுறையில் உள்ளன. அதற்கான சட்டமும் வழக்கில் உள்ளது. அது குறித்து நீதிமன்றத்தில் முறைப்படி முறையீடு மேற்கொள்ளப்பட வேண்டும். உணவு ஒறுப்பில் ஈடுபடுகிறார் என்பதற்காக எவருக்கும் பிணை வழங்கப்படுவதில்லை. எதுவாயிருந்த போதிலும் விமல் வீரவன்ச நாட்டுக்காகப்போராடியதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கவில்லையே? அவர் அரசியல் கைதியுமல்லர். அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதான குற்றச்சாட்டின் பேரிலேயே விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார். எந்தவொரு சந்தேக நபருக்கும் பொருத்தமான நிபந்தனைகளின் கீழ் பொருத்தமான சந்தர்ப்பத்தில் பிணை வழங்கப்படுகிறது என ராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா விளக்கிக் கூறியிருந்தார்.

அவரது விளக்கம் முற்று முழுக்கச் சரியானதே. அரச வாகனங்களைத் தமக்கு நெருங்கியவர்களுக்கும் உறவினர்களுக்கும் சட்டபூர்வமற்ற பாவனைக்கு வழங்கிய குற்றச்சாட்டின் பேரிலான விளக்கமறியலுக்கும், அரசியல் கைதியென்ற நிலைப்பாட்டுக்குமிடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு. அதுவுமன்றி நீதிமன்றமொன்றின் உத்தரவை மாற்றுவதற்கோ அல்லது பிணை வழங்குவதற்கோவான அதிகாரம் நாடாளுமன்றத்தின் சபாநாயகருக்குக் கிடையாது. அந்த வகையில் விமல் வீரவன்சவின் இந்த உணவு ஒறுப்புப் போராட்டம் முற்றுமுழுதாக அரசியல் அடிப்படை கொண்டதே. பிரபல்யம் தேடிக்கொள்வதற்கானதொரு உத்தியே.

### சட்டம் அனைவருக்கும் சமமானதே

அந்த வகையில் நோக்குமிடத்து முதலில் குறிப்பிடப்பட்ட ஹொங்கொங் மற்றும் பிரான்ஸ் நாட்டு அரசியல்வாதிகளும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்க முடியும். சாதாரண சட்டம், ஒழுங்குக்கு மதிப்பளிக்கும் சமூகத்தில் இத்தகைய குறுக்கு வழி முயற்சிகளுக்கு ஆதரவு கிட்டாது. தம்மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமிடத்து குற்றத்துக்கான தண்டனையிலிருந்து எவருக்குமே விதிவிலக்கு அளிக்கப்படுவதில்லை.

குறித்த அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டியும், ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தும், தடுப்புக்காவலில் இருந்து கொண்டு நூலொன்றை எழுதியும், உணவு ஒறுப்பை மேற்கொண்டும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபடவோ பிணை பெற்றுக் கொள்ளவோ இயலாது.

### தமது செயற்பாடுகளை நியாயப்படுத்துவதில் வல்லவர் மகிந்த

இதேபோன்ற விதத்திலேயே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் அண்மையில் தமது இளைய மகனான யோசித ராஜபக்ச தொடர்பாக கதையொன்றை அவிழ்த்து விட்டிருந்தார்.

'நாட்டின் இளைஞர் சமூகம் பாதுகாப்புப் படைகளில் இணையப் பின்னடித்து வந்த சூழ்நிலையில், நான் எனது மகன் யோசிதவை கடற்படைக்குக் கையளித்தேன்' எனமகிந்த பெருமையடித்துக் கொண்டார். தமது செயற்பாடுகளைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளும் விதத்தில் கருத்து வெளியிடும் வழக்கம் கொண்ட மகிந்தவின் இந்த அறிவிப்பு நாட்டு மக்களை புத்தியற்றவர்களாகக் கருதும் வகையிலான ஒன்றாகும்.

யோசித ராஜபக்ச இலங்கைக் கடற்படையில் உதவி லெப்டினன்ற் பதவியில் நியமிக்கப்படுவதற்கான அடிப்படைத் தகுதி எதனையும் கொண்டிருக்கவில்லை. ஆயினும் பிரபல்யத்தின் அடிப்படையில் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட யோசித, நாட்டு மக்களது நிதியில் வெளிநாட்டுப் பயிற்சி நெறியையும் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. கடற்படையில் கடமையாற்றிய மற்றொரு வீரருக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பைத் தட்டிப் பறித்தே யோசிதவால் அந்தப் பயிற்சி நெறியில் இணைய முடிந்தது. நாடாளுமன்றத்தில் யோசிதவின் வெளிநாட்டுப் பயிற்சி நெறி தொடர்பாகக் கிளப்பப்பட்ட பிரச்சினை தொடர்பாகப் பதில் வழங்கப்பட்ட வேளை, யோசிதவின் அந்தப் பயிற்சி நெறிக்காக இலங்கை அரசு 2கோடியே 22 லட்சத்துக்கு மேலான தொகையைச் செலவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டு மக்கள் இவற்றையெல்லாம் மறந்து விடவில்லை. பிரான்ஸ் நாட்டின் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தமது மகள்மார் குறித்த பிரச்சினை காரணமாகத் தமது அமைச்சர் பதவியையே தூக்கிஎறிந்தார். எமது நாட்டின் அரசியல் தலைவர்களோ அத்தகைய அரசியல் நாகரிகத்துடன் ஒருபோதும் நடந்து கொண்டதாக வரலாறு கிடையாது. அதற்குப் பதிலாக உண்மையைத் திரிவுபடுத்தித் தமது செயற்பாடுகளை நியாயப்படுத்திக் காட்டிக் கொள்ளும் போக்கையே எமது நாட்டு அரசியல் தலைவர்கள் கடைக்கொண்டு வருகின்றனர்.

### உண்மைக்கு ஒருபோதும் அழிவு கிடையாது

அந்த வகையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டோ, ஆர்ப்பாட்ட ஊர்வலம் மேற்கொண்டோ, சுவரொட்டிப் பரப்புரை மூலமோ உண்மையை ஒருபோதும் மூடி மறைத்துவிட இயலாது என்பதை விமல் வீரவன்ச தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது.



## வாசகர் திருமுகம்

### வடக்கு விவசாய அமைச்சின் செயற்பாடுகள் பயனளிப்பவையாக அமைய வேண்டும்

இந்திய அமைதிப்படையின் வருகையோடு வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் தடம் பதித்தது பாதீனியம். அந்தப் பாதீனியம் பற்றிப் பெருகி இன்று விவசாய நிலங்களையும், வீதியோரங்களையும், குடிமக்கள் குடியிருப்புப் பிரதேசங்களையும் முழுமையாக ஆக்கிரமித்து உள்ளது. பாதீனியத்தை அழிக்க பொதுமக்களை ஊக்கப்படுத்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர், ஒருகிலோ பாதீனியச் செடிகளைச் சேகரித்து வழங்குவோருக்கு 10 ரூபா உதவு தொகையாக வழங்க முன்வந்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால்அத்தகையவிதத்தில்எத்தனை கிலோ பாதீனியச் செடிகள் அழிக்கப்பட்டன; அதற்காக எவ்வளவு தொகை நிதி வெளியே வழங்கப்பட்டது என்பவை குறித்து இன்னமும் எங்களுக்குத் தெரியாது. தற்போது பாதீனிய அழிப்புத் தொடர்பாக சட்டம் நிறைவேற்றப்பட்டு அந்தப் பணிக்குப் பொருத்தமானவர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இது சாத்தியமான நடவடிக்கையா? என்பது இன்னமும் தெளிவாகத் தெரிய வரவில்லை.

மேலும் இந்த ஆண்டைப் பனைவள அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்திப் பனம் பொருள்களை மேம்பாடு அடையச் செய்ய எடுத்த நடவடிக்கை 'தொப்' என கிடப்பில் போடப்பட்டு உள்ளதாகத் தெரியவருகின்றது. இதுவும் பாதீனியம் அழிப்புப் போன்று தொடங்கிவிட்டு, இடைநடுவில் கைவிடப்படும் ஒன்றாகுமா? என மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே வடக்கு விவசாய அமைச்சு அகலக்கால் வைக்காமல், எந்தவொரு தீர்மானம் குறித்தும் ஆறஅமரப் பரிசீலித்து சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்தறிந்து செயற்படுவதே பொருத்தமாக அமையும். இன்று கூட்டுறவுத்துறை, விவசாயத்துறை என்பவற்றின் செயற்பாடுகளின் பலாபலன்கள் மக்கள் மத்தியில் சென்றடையவில்லை. மரங்களை நடுமாறு அறிவிக்கப்படுகிறது. ஆனால் பரந்தளவில் நாற்றுக்களை வழங்குவதாகத் தெரியவில்லை.

எனவே ஊடகங்களில் அடிக்கடி கருத்துக்களை வெளியிடுவதை விடுத்து, வடக்கு மக்களது பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய விதத்தில், விவசாயிகளுக்கு பயனளிக்கத்தக்க திட்டங்களை சம்பந்தப்பட்டோர் முன்வைத்தால் பயனுள்ளதாக இருக்கும். கிளிநொச்சி இரணைமடு தண்ணீர் விடயமும் அமைச்சரால் குழப்பிய டிக்கப்பட்டமை தெரிந்ததொன்றே. இன்றுவரை மீள்எழுச்சியில்லை. வடக்குமுதலமைச்சருக்கு இதுவெல்லாம் தெரியுமோ தெரியாது?

*சா. சீலன்*
*பாசையூர்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்களால் பிரச்சினைக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சகஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**இடபம்:** பேச்சில் ஆன்மிக எண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பரிசு, பாராட்டைப் பெறுவர்.

**மிதுனம்:** வாழ்வில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிவிடயமாக வெளியூர் செல்வர். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**கடகம்:** உற்சாக மனநிலையுடன் இருப்பீர்கள். தொழிலில், லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள், விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** நேர்மை மிக்கவராக விளங்குவீர்கள். சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். மின்சார உபகரணங்களை கவனத்துடன் கையாளவும்.

**துலாம்:** நண்பர்களின் செயற்பாட்டால் சிரமப்பட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையால், திடீர் செலவு ஏற்படும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**விருச்சிகம்:** புத்துணர்வுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர். மனைவியின் அன்பில் மகிழ்வீர்கள்.

**தனுசு:** நல்லவர்களின் அன்பும் ஆசியும் கிடைக்கும். உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும்.

**மகரம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆள்ாவர்.

**கும்பம்:** சிலரது தவறான ஆலோசனையால், பிரச்சினை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் குறிப்பறிந்து நடப்பது நல்லது. உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழிலில், வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்கள், விருந்துவிழாவில் பங்கேற்பர். அரசு வகையில் நன்மை உண்டாகும்.

# தனுஷின் பவர்பாண்டி ப.பாண்டியாக மாற்றம்



நடிகர் தனுஷ் முதன்முறையாக இயக்குநராக களமிறங்கும் படம் 'பவர்பாண்டி'. 'ப.பாண்டி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள இந்தப் படத்தில் நீண்ட வருடங்களுக்குப் பிறகு, நடிகர் ராஜ்கிரண் ஹீரோவாக நடிக்கிறார். இவருடன் நடிகை ரேவதி, பிரசன்னா, சாயாசிங், செண்ட்ராயன் உள்ளிட்ட பல நடிகர்கள் நடித்துள்ளனர்.

இந்தப்படத்தின் முன்னோட்டத்தை வெளியிட்டு இந்தப் படத்தின் இயக்குநர் தனுஷ் கூறியதாவது: உலகத்தில் நம் வாழ்க்கையில் அன்பு, நிம்மதி, பாசம், கோபம் என்ற பல விடயங்கள் நம்மைச் சுற்றி உள்ளன. இதில் நன்மையான விடயங்களை மட்டுமே எடுத்துக் கொள்வதுதான் இந்த ப.பாண்டி திரைப்படம்.
இயக்குநர் பாலுமகேந்திரா எப்போதும் ஒரு விடயத்தை நம்புவார். அதாவது, ஒரு படம் தனக்குத் தேவையான விடயங்களைத் தானே எடுத்துக் கொள்ளும், அப்படி எடுத்துக் கொள்ளாத படங்கள் தான் தோல்வியைச் சந்திக்கின்றன என்று அவர் கூறுவார்.
அந்தவகையில், 'ப.பாண்டி' தனக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் அதுவாகவே தேடிக் கொண்டது. இவ்வாறாகவே இப்படத்தின் பவர்பாண்டியும் (ராஜ்கிரண்) எங்களுக்குக் கிடைத்தார் என்றார்.



இண்டைக்கு முழுவதும்
ஹெல்மட்டோட தான் சுத்தணும் எவன்
எப்ப முட்டையடிப்பான் என்றே தெரியாது.




ஸ்மார்ட் போன்னால ஒரு நன்மை என்னென்றால்...
பசங்க, பொண்ணுங்க எங்க சுத்தினாலும்
நேரத்துக்கு வீட்டுக்கு வந்துர்றாங்க...



சார்ஜ் போடவேணும் அல்லோ...

ஏப்ரல் 1
புடிச்ச பொண்ணுங்க எல்லாருக்கும் ஐ லவ்
யூ சொல்லிவிட வேண்டியதான்...




சிரிச்சா பிக்கப்பு...
மொறைச்சா ஏப்ரல் ஃபூல்
சொல்லி எஸ்கேப்பாயிற வேண்டியதான்




Mr.சின்னபுள்ள @chinnapulla
புரிந்து கொள்ள முடியாத
சூழ்நிலைகளைத்தான்
பிரச்சினையாகக் கருதுகிறது
மனிதர்களின் மனம்

# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | | 8 | | 7 | | | 3 |
| | 6 | | | | | 1 | 2 | 7 |
| 3 | | 7 | 5 | | | | 8 | |
| | | 4 | 9 | | | | | 2 |
| | 3 | | | | | | 1 | |
| 1 | | | | | 5 | 3 | | |
| | 8 | | | | 4 | 2 | | |
| | | 6 | | | | | 3 | |
| 9 | | | 1 | | 8 | | 6 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |


# அதிர்ஷ்டக் கற்கள்





## பவளம்

பவளம் கடல் வாழ் முதுகெலும்பற்ற உயிரின வகையைச் சேர்ந்ததாகும். இவற்றின் மேல் சுண்ணாம்பு அல்லது கடினமான ஓடு இருக்கும். இவைகள் இரண்டு விதமாக பிரிக்கப்பட்டுள்ளன. கடலில் விளையும் இரு ரத்தினங்களில் பவளம், பவளப்பூச்சிகள் எனப்படும் சிறிய உயிரினங்களினால் உருவாக்கப்படுகின்றது. கடினமான பாறைகளின் மேல் இந்தப் பூச்சிகள் நின்று கொண்டு இரை தேடும் போது இப்பூச்சிகளின் உடல்களிலிருந்து உண்டாகக்கூடிய எச்சங்களே பவளப் பாறைகளாக மாறுகின்றன. இதுவே பவளம் உண்மையாக உற்பத்தியாகும் முறையாகும். பவளம் கல்சியம் கார்பனேட்டினால் ஆனது. மிகச்சிறந்த பவளம் கிளியின் மூக்கு நிறத்தைப் போன்றும், செம்பருத்திப் பூவின் நிறத்தைப் போன்றும், கொவ்வைப் பழத்தைப் போன்றும் செந்நிறமாக இருக்கும். நாம் பவளம் என்றாலே சிவப்பு நிறம் மட்டும்தான் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பவளம் கருப்பு, வெள்ளை, நீலம் ஆகிய நிறங்களிலும் கிடைக்கிறது. வெண் பவளம் என்றால் முருக்கம் பூ போன்ற நிறத்துடன் காணப்படும். பவளத்துக்கு ஆங்கிலத்தில் கோரல் என்று பெயர். பவளத்தின் அமைப்பைக் கொண்டு 6 அல்லது 8 காங்கள் உடையதென இருவகையாக பிரிக்கப்படுகிறது. சிவப்பு பவளமானது 8 காரங்கள் பிரிவைச் சார்ந்ததாகும். முன்பு நம் நாட்டு கடல் பகுதிகளில் பவளம் நிறைய கிடைக்கப் பெற்றது. தற்போதோ இத்தாலி மற்றும் ஜப்பான் கடல் பகுதிகளில் கிடைக்கப் பெறுகிறது. பவளம், அமிலமானது பட்டால் உடனே கரைந்துவிடக்கூடிய தன்மை கொண்டது.



## நாளை

**பங்குனி-20**
ஞாயிற்றுக்கிழமை -02.04.2017
திதி:ஷஷ்டி மு.இ.07.55
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ.05.30
சுபநேரம்:09.11-10.41 வரை
ராகுகாலம்:04.41-06.11 வரை
ஷஷ்டி விரதம்

## வரலாற்றில் இன்றைய தினம்

### 01.04.2017

325 -கிழக்கு ஜின் வம்ச அரசராக இளவல் ஜின் செங்டிதனது 4ஆவது வயதில் தந்தையார் ஜின் மிங்டியின் இடத்துக்குப் பேரரசராக நியமிக்கப்பட்டார்.

1826 -சாமுவேல் மோறி வாயு இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

1854 -"கவுஸ் கோல்ட் வேட்ஸ்" எனும் தனது சஞ்சிகையில் ஹாட் ரைம் தொடரை எழுதத் தொடங்கினார் சாள்ஸ் டிக்கென்ஸ்.

1867-சிங்கப்பூர், பிரிட்டன் முடியாட்சியின் காலனித்துவ நாடாகியது.

1873 -19ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய கடல் விபத்தாக வைற் ஸ்டார் நீராவிக் கப்பல் RMS அத்லாந்திக் நோவா ஸ்கொட்டியாவுக்கு அப்பால் மூழ்கியதில் 547 பேர் உயிரிழந்தனர்.

1895-இந்தியஇராணுவப்படைஉருவாக்கப்பட்டது.

1918 -றோயல் பறக்கும் படையணியும் றோயல் கடல் விமான சேவையும் ஒன்றிணைக்கப்பட்டு றோயல் விமானப்படை உருவாக்கப்பட்டது.

1924-அடொல்ப்ஹிட்லருக்கு, பீர்மண்டபபுட்ச்சதிப் புரட்சியில் பங்கேற்றார் எனக் கூறப்பட்டு ஐந்து ஆண்டுசிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஆயினும் ஒன்பது மாதங்கள் மட்டுமே சிறையில் கழித்தார். இதன்போது மெயின் காம்ப் புத்தக்கத்தை எழுதினார்.

1924-றோயல்கனடியன் விமானப்படை உருவாக்கப்பட்டது.

1935 -இந்தியாவின் மத்திய வங்கி நிறுவனமான இந்திய றிசேவ் வங்கி உருவாக்கப்பட்டது.

1936 -கலிங்கம் அல்லது உற்கல் என அறியப்பட்ட ஒடிசா, இந்திய மாநிலமானது.

1937-றோயல் நியூசிலாந்து விமானப்படை சுதந்திரமான விமானப்படையாக உருவாக்கப்பட்டது.

1941 - 200 -2000 வரையான ரோமானியர்கள் ரஷ்ய எல்லைக் காவற்படையால் கொல்லப்பட்டனர்.

1941-ஈராக்கில்அப்ட்அல்லாவின் அதிகாரம் இராணுவப் புரட்சியில் வீழ்த்தப்பட்டு ரஷீட் அலி அல் கய்லானி முதன்மை அமைச்சரானார்.

1949-ஐரிஸ்சுதந்திரமாநிலம் 26 மாகாணங்களை இணைத்து அயர்லாந்து ஆகியது.

1960-விண்ணிலிருந்து TIROS-1 விண்கலம் மூலம் முதன்முதலாகத் தொலைக்காட்சிப்படங்கள் அனுப்பப்பட்டன.

1970 -1971 ஜனவரியிலிருந்து செயற்படத்தக்கதாக தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் சிகரெட் விளம்பரத்தைத் தடைசெய்வதுடன் புகையிலை உற்பத்திப்பொருள்களில் வைத்திய அதிகாரியின் எச்சரிக்கையும் இடம்பெற வேண்டுமென்கின்ற பொதுச் சுகாதார புகைத்தல் சட்டத்தில் அரசதலைவர் றிச்சாட் நிக்ஸன் ஒப்பமிட்டார்.

1971-பங்களாதேஷ் விடுதலைப்போர்; பாகிஸ்தான் இராணுவத்தினரால் 1000க்கு மேற்பட்ட மக்கள் பங்களாதேஷ் உப்ஷிலா கேரனிகன் ஜ்ஜில் கொல்லப்பட்டனர்.

1973 -இந்தியா ஜிம் கோர்பெற் தேசிய பூங்காவில் புலிகளைப் பாதுகாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

1979-ஷா ஆட்சியை வீழ்த்தி ஈரானில் இஸ்லாமியக் குடியரசு 99 வீத வாக்குகளுடன் கொண்டு வரப்பட்டது.

1989 -ஸ்கொட்லாந்தில் மாக்கிரட் தட்சரால் புதிய உள்ளூராட்சி வரி விதிப்புமுறை சமூகக் கட்டணம் எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1993 -கனடாவில் கோஷ்டி மோதல் 8 தமிழ் இளைஞர்கள் கைது

1995-சமாதான முயற்சிகளைக் குழப்பும் விதத்தில் ஊடகங்கள் செயற்படுவதாக அரச தலைவர் சந்திரிகா தெரிவிப்பு.

1997 -தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக அரசிலிருந்து வெளியேறப் போவதாக லங்காசம சமாஜக் கட்சி எச்சரிக்கை.

2000-பளையிலிருந்து மக்களை வெளியேற படையினர் அனுமதிக்க வேண்டுமென அரசதலைவரிடம் ஆனந்தசங்கரி அவசர கோரிக்கை.

2001-யூகோஸ்லோவியா குடியரசின் அதிபர் ஸ்லோபேடன் மிலசொவிக் பொலிஸ் சிறப்புபடையினரிடம் சரணடைந்ததையடுத்து போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட்டார்.

2004 -கூகிள் பொதுமக்களுக்கான ஜிமெயிலை அறிவித்தது.



# சளி, இருமல் நொடியில் பறந்து போக

குளிர்காலத்தில் எம்மைப் பாடாய்ப்படுத்தும் பிரச்சினைகளில் முதன்மை வகிப்பது சளியும், இருமலும். இதை எதிர்க்கொள்வதே பெரும் சிரமமாக இருக்கும். பொதுவாக ஓரிரு நாள்கள் வதைக்கும் இந்தப் பிரச்சனை குளிர் காலத்தில் ஓரிரு வாரங்கள் கூடத் தொடரும்.

இது பெரிய உடல்நலக் கோளாறு அல்ல எனிலும், குளிர் காலத்தில் சாதாரண வேலைகளைக் கூடச் செய்ய விடாமல் செய்யும். குளிர் காலத்தில் பெரும் சிக்கலாக இருக்கும் இந்தச் சளி, இருமல், தொண்டை கரகரப்பு, வயிறுப் பிரச்சனைகளுக்குத் தீர்வு தரும் ஓர் இயற்கை மருந்து பற்றி இங்கு காணலாம்.

**தேவையான பொருள்கள்:**

400 மில்லி லீற்றர் வெந்நீர்.
கருப்பு புள்ளி உள்ள பழுத்த வாழைப்பழம் இரண்டு.
இரண்டு மேசைக்கரண்டி தேன்.

**செய்முறை:**

கரும்புள்ளி விழுந்த பழுத்த வாழைப்பழத்தை தோல் நீக்கி, மசிக்க வேண்டும். மசிக்கும் போது மரத்தாலான கரண்டியைப் பயன்படுத்துங்கள். இரும்பு வகையிலான கரண்டியை பயன்படுத்தும் போது பழம் சீக்கிரமாக கருமையாகிவிடும்.

மசித்த வாழைப்பழத்தை ஒரு மண் பானையில் போட்டு வையுங்கள். அதில் வெந்நீரைச் சேர்க்கவும். இதை 30 நிமிடங்கள் விட்டுவிடவும். வெந்நீரில் கலந்த மசித்த வாழைப்பழம் குளுமை அடைந்தவுடன், தேன் சேர்க்கவும். பிறகு நன்கு கலக்கவும். தேனை முன்கூட்டியே சேர்த்துவிட வேண்டாம். வெந்நீர் சூடாக இருக்கும் போது மசித்த வாழைப்பழத்தில் தேன் கலந்தால், தேனின் நற்குணங்கள் கெட்டுவிடும்.

**உட்கொள்ளும் முறை:**

நூறு மில்லி அளவில் ஒரு நாளுக்கு நான்கு முறை உட்கொள்ள வேண்டும். (ஒரு நாளுக்கு நானூறு மில்லி)
ஒரு நாளுக்கு நானூறு மில்லி போதுமானது. தினமும் புதியதாகத் தயாரித்து உட்கொள்ள வேண்டும்.
இதன் பயன் ஐந்து நாள்களில் தெரியவரும். இது முழுக்க முழுக்க இயற்கை மருந்து என்பதால் எந்தவிதமான பக்கவிளைவுகளும் உண்டாகாது.

## இது புதுசு



சிறு பெண்குழந்தைகளுக்கான பாவாடை சட்டை வகை ஆடை தற்பொழுது விற்பனையில் உள்ளது. இது பல வண்ணங்களிலும் கிடைக்கின்றது. இது 800 ரூபா தொடக்கம் 900 ரூபா வரையில் விற்பனையாகின்றன.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி: 31.03.2017
வெற்றி இலக்கங்கள்
08 15 38 49 N
ரூ. 24,979,451/-

சாதனையாளனை
வாழ்த்துகின்றோம்
2016 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில்



அகில இலங்கை ரீதியில்
முதலிடம் பெற்ற
(தமிழ்மொழி)
அ. அபிநந்தன்
(யாழ். இந்துக்கல்லூரி)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது நிறுவனத்தில் தரம் 6 முதல் O/L வரை தொடர்ச்சியாக கல்வி கற்று இச் சாதனையைப் புரிந்துள்ளார்.

றோயல் அக்கடமி
Royal Academy
யாழ்ப்பாணம், நல்லூர் Jaffna, Nallur

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
**ஜெனகன்** அவர்களின்
அன்புத் தந்தையார்

**பூதம்பிள்ளை விஜயகாந்தன்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம், யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

உதிப்பு 24 . 06 . 1977



உதிர்வு 01 . 04 . 2009


**செல்வி வசந்தமாலா சுப்பிரமணியம்**
(ஆசிரியை, கிளி/விவேகானந்தா தமிழ் வித்தியாலயம்)

எமது குலவிளக்கே!
நீர் எம்மைவிட்டுச் சென்றாலும்
அகலாது உமது ஞாபகங்கள்.

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

சாவகச்சேரி வடக்கு,
சங்கத்தானை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு 03.02.1922 உதிர்வு 12.04.2016

அமரர்
**சின்னப்பா ஐயாத்துரை**
(பூர்வபக்க பஞ்சமி 01.04.2017)

அன்பின் திருவுருவே பூவுலகில் வந்திருந்தபோது
எம்மையெல்லாம் அரவணைத்து அறிவூட்டி
வழிகாட்டி வாழ வைத்த எம் குலவிளக்கே!
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் மனதில் நிலைத்து நிற்கும்

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை விஜயகுமார்

(Toronto-Canada)

வடமராட்சி, கோவிற்கடவை துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் Toronto Canada வை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விஜயகுமார் நேற்று (31.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னத்துரை (உடுப்பிட்டி) - நாகரத்தினம் (துன்னாலை மத்தி) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் வத்சலாவின் அன்புக் கணவரும் சனகனின் அன்புத்தந்தையும் அனுஷா, தயாவதி, ரவிக்குமார், அனுராதா, Dr.மித்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தகவல் :- ச.உருத்திரகுமார்
(ஆசிரியர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி)

## வேலன் மார்க்கண்டன்

(ஓய்வு பெற்ற தென்மராட்சி ப.நோ.கூ.சங்க ஊழியர்)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் மார்க்கண்டன் நேற்று (31.03.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும் வேலன் - மேனகா தம்பதியரின் மூத்தபுதல்வனும் கந்தன் - வள்ளி தம்பதியரின் அன்புமருமகனும் சந்திரகுமார் (ஜேர்மனி) ரவீந்திரன் (சுவிஸ்), ரஜனி, றோகினி, சியாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேந்திரம், யோகேஸ்வரன், தேவராஜா, பரமேஸ்வரி, கனகலிங்கம், லலிதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பாலசிங்கம், வினோராஜ், தாரணி, கவிதா ஆகியோரின் மாமனாரும் சிவானுஜன், தர்சாந், கர்பனா, ஹர்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2017) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்க எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி.
077 4893 900

தகவல்:
குடும்பத்தினர்.

## அருளானந்தம் சாந்தா ஜெயரட்ணம்

(சாந்தன்)



புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் சாந்தா ஜெயரட்ணம் (சாந்தன்) (30.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தம் காலஞ்சென்ற நட்சத்திரம் தம்பதியரின் அன்பு மகனும் யோசேப்பு - சலேற்றம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் றீற்றம்மா - றதி யின் அன்புக் கணவரும் நிசாந்தன், ஜெம்சிலா, ஜெனிஸ்ரலா (ஆசிரியை ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அமலன் காலஞ்சென்ற வசந்தன், றீகன், அன்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் யூட், பாஸ்கரன், அருட்சகோதரி ராஜேஸ்வரி, பத்மநாதன், அருட்தந்தை அன்ரன் ஜஸ்ரின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மசீலியின் அன்பு மாமனும் கென்றிஸ்போல், கென்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2017) சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

09 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 1236 676

*சிலரின்...*

இந்த நடவடிக்கை பல்கலைக்கழகச் சமூகத்துக்கு பெரும் கவலையளிக்கின்றது"

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் க.சுதாகர் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் 13 பேருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை உத்தரவைத் தற்காலிகமாக நீக்கி, அவர்கள் மீதான விசாரணை யைத் தொடர வேண்டும். கலைப்பீட மாணவர் ஒன்றியம் தொடர்ந்து செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்" என்று யாழ்ப் பாணப்பல்கலைக்கழகதுணைவேந்தருக்கு கலைப்பீட சபை பரிந்துரை வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கலைப்பீடாதிபதி மேலும் தெரிவித்ததாவது:
13 மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை மூலமாக விதிக்கப்பட்ட தற்காலிக வகுப்புத்தடையை எதிர்த்து கலைப்பீட மாணவர்கள் சிலரால் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு ஒறுப்புப் போராட்டத்தால் எவருக்கும் தீங்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காகவே மேற்படி தீர்மானத்துக்கு கலைப்பீட சபை வந்துள்ளது.

அதேவேளை, குறித்த மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய சூழல் உருவாகிய நிலைமைகளைப் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும், பெற்றோருக்கும் கலைப்பீட மாணவர்களுக்கும் எடுத்துக் கூறவும் கலைப்பீடச் சபை தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி புதுமுக மாணவர்களுக்கு இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வுக்கு முதல்நாள் மாலை நேரம் கூடிய மாணவர்கள் சிலர் மது போதைக்கு ஆளாகியிருந்தனர். நிகழ்வைக் கண்காணிப்பதற்காக சம்பவ இடத்தில் கடமையிலிருந்த மூத்த மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள் மற்றும் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்களை நோக்கித் தவறான வார்த்தைகளைப் பிரயோகித்து அநாகரிகமாக அவர்கள் நடந்துகொண்டனர். அனுமதிக்கப்பட்ட நேரத்துக்குப் பின்னரும் அவர்கள் இவ்வாறு செயற்பட்டனர். மாணவர்களில் சிலர், மோட்டார் சைக்கிள்களை மிக வேகமாக விரிவுரையாளர்களை நோக்கிச் செலுத்தி அவர்களை அவமதிக்கும் விதத்தில் நடந்துகொண்டனர். பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் இடையூறுகள் விளைவித்தனர். (23ஆம் பக்கம் பார்க்க)

**அனெக்ஸ் வாடகைக்கு**

நாவலர் வீதியில் TCT சுப்பர்மார்க்கட் அருகில் ஒரு அறை இணைந்த குளியலறை, திறந்த விறாந்தையுடன் தனி வழியுடன் அனெக்ஸ் உண்டு.
தொடர்பு - 076 6604 584

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி, அத்தியார் இந்துக்கல்லூரிக்கு முன் ஒழுங்கையில் உள்ள 9 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 077 220 8449



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**வேலைவாய்ப்பு**

1. Technical Officer [(NCT (Civil)-3year Experience or Equivalent]
2. படவரைஞர் Certificate in Draughtsman and AutoCAD 2D,3D with Quantity surveying Experience

Your CV and Covering letter must be send Before 08th April 2017

தொடர்புகளுக்கு:
077 712 0945, 0212213663
No. 207, Navalar Road, Jaffna.
E-Mail-vacancynsc@gmail.com

*சிலரின்...* **(22ஆம் பக்கத் தோடர்ச்சி)**

சம்பவதினத்தன்று இரவு விஞ்ஞானபீட இரசாயனவியல் ஆய்வுகூடத்தின் ஜன்னல் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. ஆய்வுகூடத்தில் பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான, ஆபத்து விளைவிக்கக்கூடிய இரசாயனங்கள் வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விஞ்ஞான பீடாதிபதியும் துணைவேந்தரிடம் முறையிட்டுள்ளார். அசம்பாவிதங்களும் முறைகேடான செயற்பாடுகளும் இடம்பெறுவதைத் தவிர்க்கும் நோக்குடன், உரியபீட அதிகாரிகள் மற்றும் மாணவ ஆலோசகர்கள், விரிவுரையாளர் களின் ஆலோசனையின் பின்னர், புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வுக் கான அனுமதி துணைவேந்தரால் நிறுத்தப் பட்டது. இதுபற்றி கலைப்பீட மாணவர் ஒன்றிய நிர்வாகக் குழுவினருக்கும் நேரடியாக உரிய முறையில் அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பைம் மீறி சம்பந்தப்பட்ட ஏனைய மாணவர்களுக்கு துணை வேந்தரின் அறிவிப்பை எடுத்துச் சொல்லாது, வரவேற்பு நிகழ்வை நடத்த கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் முனைந்தனர். இந்தச் சமயத்திலும் நிகழ்வை ஒத்திவைக்குமாறும், ஏற்பாடு செய்யப்பட்ட உணவை அருந்திவிட்டு மாணவர்களை வீடுசெல்ல அனுமதிக்குமாறும் கலைப்பீடாதிபதி, பதிவாளர், மாணவ ஆலோசகர்கள், விரிவரையாளர்கள் நேரடியாக விநயமாக எடுத்துக் கூறியும், மாணவர்கள் அக்கறை கொள்ளவில்லை.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக விதிகளை மீறியும் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களைப் புறந்தள்ளியும் செயற்பட்ட கலைப்பீட மாணவர் ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கான அறிவிப்பு துணைவேந்தரால் விடுக்கப்பட்டது.

சம்பவங்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட விரிவுரையாளர்கள், மாணவ ஆலோசகர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, கடந்த 14 ஆம் திகதியன்று ஒழுக்காற்று விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டு இனங்காணப்பட்ட மாணவர்களையும், நேரில் கண்ணுற்ற விரிவுரையாளர்களையும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் விசாரணைசெய்த ஒழுக்காற்று விசாரணைக்குழு தனது ஆரம்ப அறிக்கையை கடந்த 27ஆம் திகதி துணைவேந்தரிடம் வழங்கியது.

அதன்படி, முகத்தோற்றம் அளவில் ஒழுக்கவிதிகளை மீறியதாக இனங்காணப்பட்ட கலைப்பீட மாணவர்கள் 13 பேர் உள்ளடங்கலாக 15 மாணவர்களுக்குத் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த இரண்டு மாணவர்களுக்கு எதிரான பாரதூரமான முகத்தோற்ற அளவிலான ஒழுக்க விதிமீறல் தொடர்பான ஆதாரங்கள் இனங்காணப்படாத நிலையில், அவர்களுக்கு எதிரான இடைக்கால நடவடிக்கை எதுவும் பரிந்துரைக்கப்படவில்லை.

வகுப்புத் தடையானது முழு விசாரணையும் நடைபெற்று முடியும் வரையான இடைக்கால நடவடிக்கை. இது,அனைத்துப்பல்கலைக்கழகங்களாலும் பின்பற்றப்படும் ஒழுக்கஉபவிதிகளின் பால் அமைந்ததும் இயற்கை நீதித் தத்துவங்களுக்கு உட்பட்டதுமான நடவடிக்கை. ஒழுங்குவிதிகளை மீறிய சில மாணவர்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை பொதுவெளியில் வெளியிட்டு, தாம் இழைத்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவிக்காமலும் அவற்றை மூடிமறைத்தும், ஏனைய ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்விக்குக் குந்தகம் விளைவித்தும் கற்றல் செயற்பாடுகளை முடக்கியும் வைத்திருப்பது குறித்து கலைப்பீடச் சபை கவலை கொள்கிறது.

உண்மையான அறத்தின் பாற்பட்டு மேற்கொள்ளப்படவேண்டிய உணவு ஒறுப்புப் போராட்டம், மாணவர்கள் சிலரின் ஒழுக்க மீறல்களை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவது, கலைப்பீட மாணவர்கள் இந்தச் சமூகம் தொடர்பில் காட்டிவரும் பொது அக்கறைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியது. ஒழுக்காற்று நடவடிக்கைகளை மாணவர் உரிமைகளுக்கு எதிரானது எனக்காட்ட முயற்சிப்பது துரதிர்ஷ்டவசமானது.

இதனைக் கலைப்பீட மாணவர் சமூகமும் தமிழ்ச் சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும். கலைப்பீட மாணவர்கள் அனைவரும் கற்றல் நடவடிக்கைகளுக்குத் திரும்பவேண்டும் என்பதும் கலைப்பீடச் சபையின் விநயமான வேண்டுகோள் என்றார்.

**மாணவர் ஒன்றியம் மன்னிப்பு கோரல்**

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகத்திடம் மன்னிப்புக் கோருவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்தது.

இதுதொடர்பில் ஒன்றியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த 3 மற்றும் 4ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வின் போது மாணவர்கள் விரிவுரையாளர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாட்டில் ஈடுபட்டதன் காரணமாக கலைப்பீட மாணவர்கள் விரிவுரையாளர்களிடமும் நிர்வாகத்திடமும் மன்னிப்பு கோரியிருக்கின்றனர். அதே சமயம் மாணவர் ஒன்றியமும் தமது கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றது.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதென மாணவர் ஒன்றியமானது உறுதிப்படுத்துகின்றது. கலைப்பீட விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களைப் பொது மன்னிப்பு வழங்கி சுதந்திரமான பல்கலைக்கழக செயற்பாட்டை மேற்கொள்ளவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தரிடம் மாணவர் ஒன்றியம் வேண்டி நிற்கின்றது என்றுள்ளது.

(வ-4-101)

IIS இன் 22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

Certificate in JAVA
Certificate in .NET
Certificate in C#
Certificate in C/C++
Certificate in AutoCAD

புதிய பிரிவுகள் ஆரம்பம்
15 . 04 . 2017

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்
021 222 8060 , 021 4900 900
iis@iis.edu.lk , info@iis.edu.lk
0717773444

## மரண அறிவித்தல்



### திருமதி
### அழகம்மா ஆறுமுகம்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா ஆறுமுகம் 30.03.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கே.எஸ். ஆறுமுகம் (JP) அவர்களின் அன்பு மனைவியும் செல்லையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் வீரசுதனின் (UK) பாசமிகு அன்னையும் மனோஜாவின் அன்பு மாமியும் அனோஜன் (UK), தீபிசா (UK), சயந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் செல்லையா வைரவநாதன், செல்வராசா கருணாதேவி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, இராசமணி, சிதம்பரராசா, மயில்வாகனம்மற்றும்சிவஞானம்(பூநகரி)ஆகியோரின்பாசமிகுசகோதரியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் மீசாலை கிழக்கு, வைரவநாதன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- **கே. எஸ். ஆறுமுகம், நுணாவில் மேற்கு.**
**செ. வைரவநாதன், மீசாலை கிழக்கு.**

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணப்பிள்ளை இராஜரட்ணம்



மலர்வு 08.12.1948 உதிர்வு 31.03.2017

துன்னாலை மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணப்பிள்ளை இராஜரட்ணம் நேற்று (31.03.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும் சோமு தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் இராஜ்கண்ணன் (விவசாயதிணைக்களம், பரந்தன்), பிரதீபா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும்வரூதினி, ரவிசங்கர்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சாரிஹன், சாயித்தியன், மாதங்கி மற்றும் பிரவீனா(லண்டன்), பிரவீன் (லண்டன்), ஹர்சனா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் புஸ்பராணி, புஸ்பலீலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கவடிவேல், தர்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2017) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேரூண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ராஜ்மகால்,**
**துன்னாலை மத்தி, கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 119
சீட்டிழுப்பு திகதி: 31.03.2017
ரூ. 81,423,824/-
L 20 53 66 69

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
31.03.2017 | 2115 | சிவப்பு
08 15 22 41
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 15, 427, 037/=
2017.04.02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

ST. ANTONY'S

15.6", 4GB, DUAL CORE WEBCAM, DVDWR, 500GB → 47 990/=

15.6", 4GB, ITB DVDWR, WEBCAM, i3 7TH GEN → 65 990/=

15.6", 4GB, ITB, DVDWR WEBCAM, i5 7TH GEN → 83 990/=
மூன்று வருட உத்தரவாதம்
FREE - BAG/8GB PEN 3.0 / H.PHONE
187, K.K.S ROAD, JAFFNA TOWN. 021 222 4865

## பன்னாட்டு...

பன்னாட்டுக் கண்காணிப்பாளர்களை அரசு அனுமதிக்கவேண்டும். அது அவசியமானது. இவ்வாறு புதிய அரசமைப்பு குறித்து மக்களின் கருத்துக்களை அறிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க 'உதயனுக்கு' நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்குப் பன்னாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை அவசியம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை வலியுறுத்தியுள்ளது. அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும் இதே விடயத்தைக் குறிப்பிட்டுள்ளன. எனினும், கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு இடமில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இந்த நிலையில், இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட சட்டத்தரணி லால் விஜேநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதில் இலங்கைக்குப் போதிய அனுபவம் இல்லை. எனவே, பன்னாட்டு ஆலோசனைகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம். நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகப் பன்னாட்டுக் கண்காணிப்பாளர்கள் அவசியம்.

இலங்கையின் அரசமைப்பின்படி பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது. இலங்கையர் குறித்து பன்னாட்டு நீதிபதிகளுக்கு விசாரணை நடத்தவும் முடியாதென்பதால் கலப்பு நீதிமன்ற யோசனை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கின்றது.

அதேவேளை, வழங்கப்பட்டுள்ள இரண்டு வருட காலப் பகுதிக்குள் அரசு உரிய வகையில் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்தவேண்டும். இந்த விடயத்தில் அரசு அலட்சியமாகச் செயற்பட்டால் பெரும் நெருக்கடிகள் ஏற்படும். பொறுப்புக்கூறலை உரிய வகையில் வெளிப்படுத்தினால் கலப்பு நீதிமன்ற யோசனை நிராகரிக்கப்பட்டதற்கான நியாயத்தை பன்னாட்டுக்கு அரசால் வழங்கக் கூடியதாக இருக்கும் என்றார். (த-4)

## மைத்திரிக்கு...

நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நிதிமோசடி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் நாமல் ராஜபக்ச நேற்று முன்னிலையாகினார். அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு சார்பாகச் செயற்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்த்து என்னையும் சிறையில் அடைப்பதன் ஊடாக நாட்டு மக்களின் வயிறு நிறையப்போவதில்லை.

கடந்த ஆட்சியின்போது நில்பலகாய என்ற நீலப்படையணியில் மேற்கொள்ளப்பட்ட நிதிமோசடி தொடர்பாக என்னிடம் விசாரணை நடத்தப்படுகின்றது. நீலப்படையணி என்ற இளைஞர் குழுவை எனது தலைமையில் இயக்கிய நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின் அந்தப் படையணியின் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டன.

இளைஞர் அமைப்பின் ஊடாக தவறு இடம்பெற்றிருந்தால் என்னைச் சிறையில் அடைப்பதால் மக்களின் வயிறு நிறையாது. 10 இலட்சம் வேலைவாய்ப்புக்களும் உருவாகாது. சிறிய காரொன்றை வாங்கச் சென்ற அந்த சிறிய பெண்ணுக்கு காரும் வாங்க முடியாது. அதனால் எம்மைப் பற்றி தேடுங்கள். எங்களை சிறைக்குத் தள்ளுங்கள். அது பிரச்சினையில்லை. அமைச்சர்களான ராஜிதவும், எஸ்.பி. திசாநாயக்கவும், அமரர் எம்.கே.டி.எஸ் ஆகியோர் இந்த இளைஞர் அமைப்பு நிகழ்ச்சியில் பேச்சாளர்களாக இருந்ததை இன்றைய விசாரணையில்தான் தெரிந்துகொண்டேன்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாதிருக்கவே எனது தந்தைக்கு வாக்களிக்காமல் மக்கள் அனைவரும் மைத்திரிபாலவுக்கு வாக்களித்தனர். அப்படி வழங்கியும் அவற்றை இவரும் செய்தால் அதைப்பற்றி பேசிப் பயனில்லை. அதனால் மக்களுக்கு வயிற்றைக் கட்டிக் கொள்ளுமாறு கூறி அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களை அரசு கொள்வனவு செய்கிறது. உரமானியத்தை நிறுத்திவிட்டு விவசாய அமைச்சுக்கு ஒன்றரை கோடி ரூபா கட்டடத்தை வாடகைக்கு அமர்த்துகிறது. கூட்டு அரசு திருடர்களைப் பிடிப்பதாகக் கூறிய போதும், மத்திய வங்கி மோசடிக்காரர்கள் சுதந்திரமாக உலகம் சுற்றுகின்றனர். இது குறித்து அரச தலைவர் ஆணைக்குழு விசாரணை செய்கிறது. ஆனால் விசாரணையின் இறுதியில் அலோசியஸ் இலங்கையில் பாதியைக் கொள்வனவு செய்துவிடுவார். இது தான் கூட்டு அரசு என்றால் ஒரு சிறையில் அல்ல பல சிறைகளில் எம்மை அடைத்தாலும் அரசைக் கவிழ்க்கும் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என ரணிலுக்கும், மைத்திரிபாலவுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றார். (வ-4)

## கடனில்...

தெரிவித்தார்.

கொடகாவலையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

3 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது. முன்னாள் அரசின் வினைத்திறனற்ற ஆட்சியில் பெற்றுக்கொண்ட கடன்களே இவ்வாறு பெருக்கமடைந்துள்ளன.

2026ஆம் ஆண்டுக்குள் இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடனைச் செலுத்த வேண்டும். நல்லாட்சி அரசு மேற்படி கடனைச் செலுத்தும் பொருளாதார முறைமைகளைக் கண்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே பன்னாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கையில் முதலீட்டை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்து வருகின்றோம்.

கடனை மீளச் செலுத்தும் முறைமைகள் தொடர்பில் வாரந்தோறும் அரசு பேச்சுக்களை நடத்துகின்றது. கடனைச் செலுத்தும் காலப் பகுதியில் நாட்டில் அபிவிருத்தியையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவ்வருடம் தொடக்கம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்காக முன்னாள் அரசு பெற்றுக்கொண்டுள்ள கடனின் வட்டித்தொகையும் அதிகரித்துள்ளது என்றார். (த-4)

## ரகசிய...

கள் மீது தாக்குதல் நடத்தியமை, கடத்தியமை, கொலை செய்தமை தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இரகசியக் குழுவே தொடர்புபட்டது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்தார் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கபில ஹெந்தவிதாரண மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இரகசிய இராணுவக் குழுக்களைப் புலனாய்வுப் பிரிவினர் செயற்படுத்தியிருந்தால் அது குறித்து அப்போதைய இராணுவத் தளபதியும், புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரும் நிச்சயம் அறிந்திருக்கவேண்டும்.

மனிதப் படுகொலைகள், கடத்தல்கள் போன்றவற்றுக்கு இரகசியக் குழுவொன்றை நான் ஈடுபடுத்தியதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா சுமத்தியுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களையும் நிராகரிக்கின்றேன்.

கீத் நொயார் மீது தாக்குதல், லசந்த கொலை உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தொடர்பு உண்டு என்றால் அந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து அப்போதைய இராணுவத் தளபதி தப்பித்துக் கொள்ள முடியாது என்றார் கபில. (த-5)

## அமைச்சரின்...

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்த) தனிநபர் சட்டவரைவு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டவரைவுக்கு மாகாண சபைகளின் ஒப்புதல்கள் பெறப்பட்டிருந்தன. நாடாளுமன்றத்திலும் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இதன் பின்னர் நாடாளுமன்றத்தினால், கடற்றொழில் நீரியல்வள அமைச்சுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது. கடற்றொழில் நீரியல் வள அமைச்சு, தனிநபர் சட்டவரைவில் சில மாற்றங்களைச் செய்து பெப்ரவரி மாதம் 17ஆம்திகதிவர்த்தமானியில்பிரசுரித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட சட்டவரைவில், இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு 5 வருடச் சிறைத் தண்டனையும் 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட வேண்டும் என்று இருந்தது. அதனைக் கடற்றொழில் அமைச்சு 2 வருடச் சிறைத் தண்டனையாகக் குறைத்துள்ளது.

இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தவறாக இருந்தமையால், திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பின்னர், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியதும் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று தெரிய வருகின்றது. (த-5)

## முதலமைச்சரும்...

கப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதியின் விசாரணை அறிக்கையை வழங்குமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்தது. அதனை முதலமைச்சரின் அமைச்சு வழங்கியிருந்தது. அதில், ஸ்ரான்லி வீதிச் சந்தியில் முன்னர் லிடோ தியேட்டர் இருந்த இடத்தில் தனியாரால் கட்டப்பட்ட கட்டடத்துக்கான காணி யாழ்ப்பாண மாநகர சபைக்கு உரியது என்றும், இதற்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் கட்டடத்துக்கு குடிபுகு சான்றிதழ் (சி.ஓ.சி) இதுவரை வழங்கப்படவில்லை என்றும், வாகனத் தரிப்பிடம் இந்தக் கட்டடத் தொகுதியில் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இது சட்டமுறைப்படி செய்யப்படவில்லை என்று முடிவு செய்கின்றேன் என்று விசாரணையாளரான முன்னாள் நீதிபதி விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் கட்டடத் தொகுதி அமைந்துள்ள காணி யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமானதா என்று யாழ்ப்பாண மாநகர சபைக்குத் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாகக் கேட்கப்பட்டதற்கு, கட்டடம் அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்று பதில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கட்டடத்துக்கான குடிபுகு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண மாநகர சபையின் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## போர்க்குற்றங்கள்...

ரணி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்துகொண்டு இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்றும், இலங்கை இராணுவத்தின் மீது உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என்றும் வலியுறுத்தியிருந்த முன்னாள் பிரதி அமைச்சரான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர. பத்தரமுல்லை- நெலும் மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். இதில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார். (த-4)

## தேர்தலை...

வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிச் சபைச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவதாக அரசு கூறியது. இதுவரை அவற்றை நிவர்த்தி செய்ய எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை.

எல்லை நிர்ணய அறிக்கையில் திருத்தங்களை மேற்கொள்ளாது அரசு ஒருபோதும் தேர்தலுக்குச் செல்லாது. அரசின் திட்டம் மக்களுக்குச் சேவை செய்வதா? அல்லது தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதா? என்றார்.

எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி துறைசார் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. குறித்த எல்லை நிர்ணயத்தால் சிறுபான்மை இன மக்களின் பிரதி நிதித்துவம் பாதிப்படையும் என்று சிறுபான்மைக் கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## கிடைக்குமா...

மாதம் ஐரோப்பிய ஆணைக்குழுவால் ஐரோப்பிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கை அரசு மீளப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் 27 நிபந்தனைகளில் முன்னேற்றம் காணவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால் டஸ்கி தெரிவித்திருந்தார். குறித்த உடன்படிக்கையிலும் இலங்கை கைச்சாத்திட்டிருந்தது.

இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நிபந்தனைகளில் முன்னேற்றம் காண இலங்கை அரசுக்கு 6 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அதன்படி அடுத்த மே மாதத்துடன் 6 மாதங்கள் ஆகவுள்ள நிலையிலேயே மேற்படி அறிவிப்பு வந்துள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் சூன் லெய் மார்க் கூறியுள்ளதாவது:

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவது தொடர்பில் அடுத்த மே மாதம் 15ஆம் திகதியின் பின்னர் அறிவிக்கப்படும். அதுவரை ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்குவது குறித்து கருத்துக் கூற முடியும். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் எதிர்க்கும் பட்சத்தில் இலங்கைக்குக் குறித்த வரிச்சலுகை கிடைக்காது. எனவே, அரசு மேற்கொண்டுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகளின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இலங்கை தொடர்பில் தீர்மானிக்கும்.

எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிவரை எந்தவொரு நாடும் எதிர்ப்புத் தெரிவிக்காவிடின் இலங்கைக்குப் பூரணமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்கும்என்றார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 7 ஆயிரத்து 300 பொருள்களை ஐரோப்பிய நாடுகளின் சந்தையில் வரியின்றி ஏற்றுமதி செய்யும் முகமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது. மகிந்த அரசின் காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறைகள் மீறப்பட்டதால் மேற்படி வரி இல்லாமல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## நிச்சயம்...

கேப்பாபிலவில் உள்ள 468 ஏக்கர் காணியை இராணுவத்தினர் கைப்பற்றி வைத்துள்ளனர். இராணுவத் தலைமையகமும் அதில் அமைந்துள்ளது. இந்தக் காணியை விடுவிக்குமாறு கோரி கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை இரவு, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, இராணுவத் தளபதியுடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பேச்சு நடத்தியுள்ளார். கேப்பாபிலவுக் காணி விடுவிப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரால் வினவப்பட்டது.

அதற்கு இராணுவத் தளபதி, அந்தக் காணிகளை விடுவிப்போம் என்று பதிலளித்துள்ளார். அங்கு அமைந்துள்ள இராணுவ முகாமை இடமாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும், அது முடிவடைந்ததுமே அந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என்றும் அவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதியளித்துள்ளார். (த-5)

## மோடி...

ளனர். இந்திய நடுவண் அரசின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இந்த நிகழ்வில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளார்.

'இந்தியாவின் தலைமை அமைச்சரின் இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக, கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்வார் என்று கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (த-5)

# சுவர் இருந்தால்தான்...



புத்தகப் பையுடன் பள்ளிக் கூடம் புறப்பட்டான் அப்பு. "அப்பு குளிக்கேல்லையா" என்றாள் சமையல் அறையில் இருந்து அம்மா. "நேரம் போச்சம்மா நாளைக்கு இன்றைக்கும் சேர்த்துக் குளிக்கிறேனே" என்று சொல்லி விட்டு அப்பு ஓடி விட்டான். அப்பு ஐந்தாம் தரம் படிக்கிறான். வகுப்பில் முதல் மாணவன் அவன்தான். அவனது அம்மாவுக்கும் அது பெருமைதான் என்றாலும், அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை என்பதில் அவளுக்கு மிகவும் கவலை. காலையில் குளிப்பதில் விருப்பமில்லை; பல்துலக்குவதில் அக்கறையில்லை; அம்மாவின் கட்டாயத்துக்காக பல்துலக்குவது போல பசாங்கு செய்வான். அவனது நண்பர்கள் "ஏன் நீ பல்துலக்குவதில்லை?" என்று கேட்டால் ஆடு, மாடு, பூனை நாய்க்குக் கூட பல் இருக்கிறது. அவை பல்துலக்குவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என கிண்டலாகப் பதில் கூறுவான். வகுப்பாசியர் கூட "அப்பு இன்றைக்கு குளிச்சியா?" என இரகசியமாக அவனுக்கு மட்டும் கேட்கும்படி கேட்டால் அதே இரகசிய பாணியில் "மறந்திட்டேன் சார்" என்று பதில் கூறுவான். அப்பு நன்றாகப் படிப்பதால் ஆசிரியர் கூட அவனிடத்தில் இது விடயங்களில் கண்டிப்பாக நடந்து கொள்வதில்லை. நாளாக நாளாக வயது ஏற அவன் திருந்தி விடுவான் என நினைத்துக் கொள்வார்.

அரையாண்டுப் பரீட்சை வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருந்தான். முதல் மாணவன் என்ற இடத்தைத் தன்னைத் தவிர எவரும் எடுத்து விடக் கூடாது என்பதில் அவன் மிக்க கவனமாக இருந்தான். "அப்பு குளிச்சுப் போட்டு இருந்து படிச்சுப்பார். இன்னும் உற்சாகமாகப் படிக்கலாம்" என்றாள் அம்மா. "குளிக்கிற நேரத்தில ஒரு பாடமாவது படிச்சிடலாம் அம்மா "இது அவன் பதில். "சரி பல்லை விளக்கி விட்டாவது படிக்கலாமே" அம்மாவுக்கு கொஞ்சம் கோபம் ஏறி விட்டது. "அப்பு நீ மட்டுமா எனக்குப் பிள்ளை. உன் தம்பி தங்கைகளையும் நான் கவனிக்க வேண்டாமோ" என்று அலுத்துக் கொண்டாள். "சரி சரி... நான் எல்லாம் செய்யுறன். ஆனா படிக்கமாட்டன். போதுமா?" என்றான் அப்பு. "சரி நீ போய்ப்படி" எங்கே அவன் படிக்காது விட்டு விடுவானோ என்ற பயம் அம்மாவுக்கு. அப்பா வெளிநாடு. மூன்று பிள்ளைகளோடும் அம்மா படும்பாடு. அப்பு மூத்தவன் என்பதால் கொஞ்சம் செல்லமும்தான்.

பரீட்சைக்கு இரண்டு நாள் இருக்கையில் அப்புவுக்கு பல் வலி ஏற்பட்டது. அன்று பாடசாலை சென்று திரும்பும்போது அவன் தாடைப் பகுதி வீங்கி வலியும் கூடியிருந்தது. உடலும் கொஞ்சம் கொதிக்கத் தொடங்கியது. ஆசிரியரின் ஆலோசனைப் படி அம்மா அவனை மருத்துவமனையில் சேர்த்தார். பற்களைப் பரிசோதித்த வைத்தியர் பற்களை ஒழுங்காகக் கவனிக்காததால் பற்சூத்தை ஏற்பட்டுள்ளதென்றும் அது பல்வேரை பாதித்துள்ள தென்றும்; உடனேயே பல்லை எடுக்க வேண்டும் இல்லையேல் ஆபத்தென்றும் கூறினார்.




சொத்தைப்பல் நீக்கப்பட்டது. ஒரு வாரம் வரை அப்பு வைத்தியசாலையில் இருந்தான். பரீட்சை எழுதவில்லை தேர்ச்சி அறிக்கை வழங்கப்பட்டது. தான் முதல் மாணவனாக வராததையிட்டு அப்பு தேம்பித் தேம்பி அழுதான்.



"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். முதலில் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்" என்று ஆசிரியர் அப்புவை சமாதானம் செய்தார்.

**சுத்தம் சுகம் தரும்.**
**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**

# காலந்தவறாமை




- காலம் பொன் போன்றது என்பர் பெரியோர். காலத்தின் அருமையை உணர்த்தும் பொன்மொழி இதுவாகும்.
- இன்று சிறியோர் முதல் பெரியோர் வரை கடைப்பிடிக்க வேண்டிய பழக்கம் காலந் தவறாமையாகும்.
- எதையும் குறித்த காலத்தில் செய்ய வேண்டும் என்பதை இப்பொன் மொழி வலியுறுத்துகிறது.
- பருவத்தே பயிர் செய் என்ற பழமொழியும் காலந் தவறாமையையே உணர்த்துகின்றது.
- எல்லாப் பயிர்களும் எல்லாக் காலத்திலும் விளைந்து விடுவதில்லை. உரிய காலத்தில் செய்யப்படாத பயிர் உரிய பயனைத் தராது. அது போல் உரிய காலத்தில் உரிய செயல்களை நாம் செய்யாது விடில் அவை பயன்தரா.
- 'இளமையிற் கல்" என்றார் ஔவையார். கற்கும் பருவம் இளமைப்பருவம். அது கழிந்து விட்டால் கற்பது சிரமமாகும்.
- விமானப் பயணம் செய்யும் பயணி ஒருவர் குறித்த நேரத்துக்கு உரிய விமான நிலையத்துக்கு வராது விட்டால் அவரது பயணம் தடைப்படும்.
- பரீட்சை எழுதும் மாணவன் குறித்த நேரத்துக்கு பரீட்சைக்குத் தோற்றாவிடின் அவனது படிப்பு பாதிப்படை யும்.
- எதிலும் நேரத்தை, காலத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தவறின் அதன் பயன் சிறப்பானதாக இருக்க மாட்டாது.
- மாணவராகிய நாம் என்றும் காலந் தவறாமையைக்கைக்கொண்டு நடத்தல் வேண்டும். அதன் மூலமே வாழ்வில் நலம் பெற முடியும்.


# கானல் நீர்



நல்ல வெயில் உள்ள மத்தியான வேளையில் தார் வீதியில் தூர நின்று பார்க்கும் போது சில இடங்களில் நீர் இருப்பது போலத் தோன்றும். இதுவே கானல் நீராகும். இது ஏற்படுவது எவ்வாறெனில் நிலம் வெப்பமடையும் பொழுது அதற்கு அண்மையில் உள்ள வளி சூடடையும். இதனால் வளியின் அடர்த்தி குறைந்து. சூடான வளி மேலே செல்லும். மேலே செல்லும் பொழுது வளியின் அடர்த்தி கூடிச் செல்லும். இதனால் ஒரு பொருளின் இருந்து வரும் ஒளிக்கதிர் கீழ் நோக்கி வளைந்து பின் மேல் நோக்கி வளைந்தே எமது கண்ணை அடையும். இவ்வாறு ஒளித்தெறிப்பு நிகழ்வதால் அப்பொருள் நிலத்தின் கீழ் இருந்து தோன்றுவது போல இருக்கும். இதனால் அவ்விடத்தில் நீர் இருப்பது போல் தோன்றும். பாலைவனப் பகுதிகளில் இவ்வாறு கானல் நீர் தோன்றி பயணிகளை ஏமாற்றுகின்றது. சில சமயங்களில் தாகத்தால் நீர் தேடி அலையும் விலங்குகள் குறிப்பாக மான்கள் இந்த கானல் நீரால் ஏமாந்து போகின்றன.


# ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. அந்தணர் | - | பிராமணர், வேதியர், மறையவர் |
| 2. அரசன் | - | வேந்தன், காவலன், மன்னன், கொற்றவன் |
| 3. அழகு | - | வடிவு, வனப்பு, சுந்தரம், எழில் |
| 4. ஆனந்தம் | - | களிப்பு, உவகை, மகிழ்ச்சி |
| 5. உதயம் | - | விடியல், வைகறை, புலரி, அதிகாலை |
| 6. ஆகாயம் | - | வானம், விண், ககனம், விசும்பு |
| 7. அடி | - | பாதம், தாள், கால் |
| 8. குளம் | - | தடாகம், பொய்கை, வாவி |
| 9. மேகம் | - | முகில், கொண்டல், கார், மஞ்சு |
| 10. கடல் | - | சமுத்திரம், ஆழி, வேலை, சாகரம் |
| 11. மனம் | - | உள்ளம், சிந்தை, அகம் |
| 12. பாம்பு | - | அரவம், கட்செவி, பணி, சற்பம் |
| 13. குருதி | - | இரத்தம், சோரி, செந்நீர், உதிரம் |
| 14. கடை | - | இறுதி, முடிவு, ஈறு, கடைசி |
| 15. சோலை | - | பொழில், கா, பூங்காவனம் |
| 16. சிநேகம் | - | நட்பு, கேண்மை, தோழமை |
| 17. சிங்கம் | - | கேசரி, அரி, சீயம் |
| 18. சத்தம் | - | ஒலி, ஓசை, அரவம் |
| 19. கூந்தல் | - | குழல், கேசம், அளகம் |
| 20. துயில் | - | உறக்கம், சயனம், நித்திரை |




# வடிவங்களை இனங் காண்போம்

ஒத்த வடிவங்களையும் அவற்றுக்கான பாதைகளையும் வேறுபடுத்தி நிறம் தீட்டுவோம்

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்றது. தீவுகள் துடுப்பெடுத்தாடும் போது வல்டன் ஓட்டமொன்றைப் பெறுவதற்காக விரைவாக ஓடிவர பந்தைப் பிடிப்பதற்காகச் சென்ற பாகிஸ்தான் வீரர் செசாட் அவருடன் மோதுண்டார். செசாட் நிலைகுலைந்து நிலத்தில் சரிந்ததை அடுத்து அவர் நோயாளர் காவு வண்டியின் மூலம் அருகிலிருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம)



## அம்பாள், வளர்மதி காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப்.1
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழகம் மற்றும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் என்பன காலிறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளன.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் முதற்செற்றை வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக்கழகம் 25:22 புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. அடுத்த செற்றை 25:21 என வெற்றி கொண்டு ஆட்டத்தை சமப்படுத்தியது கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது அம்பாள்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 25:23 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 நேர் செற்கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியது புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம். (ம-108)

# நவஜீவன்ஸ் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.1
பருத்தித்துறை தம்புறுவளை விளையாட்டுக் கழகக் கரப்பந்தாட்டத் தொடரில் விவேகானந்தாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

வடமராட்சி ரீதியாக நடத்தப்படும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக்கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது நவஜீவன்ஸ் அணி. இரண்டாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் விவேகானந்தா அணி கைப்பற்ற செற் கணக்கு 1:1 என்றானது.

மூன்றாவது செற்றைக் கைப்பற்றுபவரே வெற்றியாளர் என்ற நிலையில் அந்த செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது நவஜீவன்ஸ் அணி. (ம-108)



## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஏப்.1
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் வலைப்பந்தாட்டத் தொடரும், யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரும் விரைவில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி தொடர்களில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப்.1

**திக்கம் மத்தியின் கபடித் தொடர்**

திக்கம் மத்திய சனசமுக நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் பகலிரவாக இடம்பெற்று வருகின்றன.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் சென். தோமஸ் ஏ அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும் சிறைச்சாலை பாதுகாப்பு அலுவலர் அணியை எதிர்த்து மன்னார் எவர்கிறின் அணியும் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி உழவர் விளையாட்டுக் கழகமும் சென். தோமஸ் பி அணியை எதிர்த்து துள்ளுமீன் ஏ அணியும் மோதவுள்ளன.

**வை.எம்.ஏச்.ஏ. கரம் தொடர்**

திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ. நடத்தும் திறந்த வயதுப் பிரிவினருக்கான இருபாலாருக்குமான கரம் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளை யாட்டரங்கில் இன்று நடைபெறவுள்ளது.

**எப்.ஏ. கிண்ணம்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியாக நடத்தும் ஏவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தளம் விம்பிள்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-108-422)



## சைக்கிளோட்டம்

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் நடத்தும் மாவட்ட அணிகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான சைக்கிளோட்டம் இன்று நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு சந்தியில் ஆரம்பமாகும் இந்தப் போட்டி மாங்குளம் சந்திக்குச் சென்று மீண்டும் முல்லைத்தீவு சந்தியில் நிறைவடையவுள்ளது. ஒட்டுமொத்தமாக 110 கிலோ மீற்றர் தூரமுடையதாக இந்தப்போட்டி அமையவுள்ளது. இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் பிரணவநாதன், கணக்காளர் ஜேசி றெஜினோல்ட், மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள் ரவிதரன், சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

# மீண்டும் வென்றது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் முதல் இலக்கை இழந்தது. ரி-20 பாணியில் அதிரடி அமையாது போக முடிவில் அந்த அணி 132 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மலிக் 28 ஓட்டங்களையும், பாபர் அசாம் 27 ஓட்டங்களையும், ரியாஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நரைன், பீரத்வைட் இருவரும் தலா 3 இலக்குகளையும், பத்ரி 2 இலக்குகளையும், வில்லியம்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளும் ஆரம்பம் முதல் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. 20 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் முடிவில் அந்த அணி 129 ஓட்டங்களை மட்டுமே பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சாமுவேல்ஸ் 44 ஓட்டங்களையும், கோல்டர் 26 ஓட்டங்களையும், வல்டன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சடப்கான் 4 இலக்குகளையும் ரியாஸ், ஹசன் அலி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடரில் நான்கு ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்திலும் பாகிஸ்தானே வெற்றிபெற்றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் தீவுகள் வென்றால் மட்டுமே சொந்த மண்ணில் வைத்து குறைந்த பட்சம் தொடரை சமநிலையிலாவது முடிக்க அந்த அணியால் முடியும். (ம)





# அரையிறுதிக்கு சென்றார் நடால்

மியாமி ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெய்னின் நட்சத்திர வீரர் ரபேல் நடால் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற ரென்னிஸ் தொடர்களில் மியாமித் தொடரும் ஒன்று. ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் 5 ஆம் இடத்திலுள்ள ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடாலை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 13 ஆம் இடத்திலுள்ள அமெரிக்க வீரர் ஜேக் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.

முன்னணி வீரரான நடால் பன்னாட்டு அந்தஸ்துபெற்ற அல்லது முக்கியத் தொடரொன்றைக் கைப்பற்றி பல மாதங்களாகிறது. எனவே அவர் மியாமித் தொடரையாவது கைப்பற்றுவாரா என்ற எதிர்பார்ப்பு பரவலாக நிலவுகிறது. இந்தத் தொடரைக் கைப்பற்றும் பட்சத்தில் தரப்படுத்தலிலும் நடால் முன்னேற்றம் காண்பார். (ம)

# ஐக்கியம் விளையாட்டுக் கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப் 1

பருத்தித்துறை ஐக்கியத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கலைமதி, கொலின்ஸ், நவஜீவன்ஸ், திக்கம் இளைஞர் அணிகள் வெற்றிபெற்றன.

**கலைமதி - இளைஞர்**

பருத்தித்துறை ஐக்கியம் விளை யாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் கரணவாய் மத்தி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தை ஆரம்பத்திலிருந்து இறுதி வரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கலைமதி அணி எதிரணிக்கு கோல் பதிவுசெய்ய சந்தர்ப்பம் வழங்காமல் முதல் பாதியில் 2 கோல்களையும் இரண்டாம் பாதியில் 2 கோல்களையும் பதிவுசெய்து 4:0 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பானுஜன் தெரிவானார்.

**கொலின்ஸ் - நக்கீரன்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவசெய்ததால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக தொலின்ஸ் அணியின் நிவேதன் தெரிவானார்.

**நவஜீவன்ஸ் - யுத்**

பிறிதொரு ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் எந்த அணியும் கோல்களைப் பதிவுசெய்யவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது நவஜீவன்ஸ் அணி. ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணியின் சுரேஸ் தெரிவானார்.

**இளைஞர் - ஆதிசக்தி**

மற்றறொரு ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் அபாரமாக விளையாடிய திக்கம் இளைஞர் அணி 4:1 என வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக திக்கம் இளைஞரின் அகிலதீபன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-108)

# இறுதி ஆட்டம் இன்று

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. எனவே இன்று நடைபெறும் ஆட்டத்தில் வென்றால் மட்டுமே தொடரை 1:1 என்று இலங்கை அணி யால் சமப்படுத்த முடியும். (ம)



# ராகுல் விலகல்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியில் இருந்து விலகினார் லோகேஸ் ராகுல்.

எதிர்வரும் 5 ஆம் திகதி ஐ.பி.எல். தொடரின் ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன. தொடர் ஆரம்பமாகும் முன்னர் பெங்களூர் அணி பலம் வாய்ந்த அணியாக இனங்காணப்பட்டது. அந்த அணியின் தலைவர் கோக்லி காயமடைந்ததால் ஒரு சில ஆட்டங்களில் அவர் விளையாடாத நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் காயம் காரணமாக ராகுல் தொடர் முழுவதிலும் இருந்து விலகினார். (ம)

# இந்த வருடம் இந்தியா - பாக். தொடர்?

இந்த வருடம் கடைசிப் பகுதியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே இருதரப்புத் தொடரொன்று நடத்தப்பட சாத்தியப்பாடு உள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா பாகிஸ்தானுடன் இருதரப்புத் தொடரில் விளையாட மறுத்து வருகிறது. 2009 ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தான் சென்று விளையாடிய போது இலங்கை அணி வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இது இந்தியாவுக்கு மேலும் சாதகமாய் அமைய கிரிக்கெட்டின் போர்களில் ஒன்றான இந்தியா - பாகிஸ்தான் இருதரப்புத் தொடர் கைவிடப்பட்டது.

கடந்த வருடம் இருநாட்டின் கிரிக்கெட் சபைகளும் மீண்டும் தொடரை நடத்திட எத்தனித்தன. எனினும் எல்லைகளில் நிலவிய பதற்றமான சூழ்நிலை காரணமாக தொடரை நடத்துவதில் இருந்து இந்தியா பின்வாங்கியது. ஆனால் தம்முடன் இந்தியா கிரிக்கெட் விளையாடவேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தி வருகிறது. இந்தியா இருதரப்புத் தொடரில் விளையாட வராததால் ஏற்பட்டுள்ள இழப்பை பாகிஸ்தான் சுட்டிக்காட்டி வருகிறது. இந்த நிலையில் இந்தியா - பாகிஸ்தான் தொடரை பொதுவான இடமான துபாயில் நடத்திட அனுமதி தரவேண்டும் என்று இந்திய உள்துறை அமைச்சகத்துக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிக்கை அனுப்பியுள்ளது. இந்த அறிக்கைக்கு ஒப்புதல் கிடைத்தால் இந்த வருடம் இறுதிப் பகுதியில் இந்தியா - பாகிஸ்தானுடன் இருதரப்புத் தொடரில் விளையாடும்.

எனினும் உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்குமா என்பதே அடுத்ததாக உள்ள தடை. இந்திய, பாகிஸ்தான் ரசிகர்கள் மட்டுமல்லாமல் உலக கிரிக்கெட் ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இந்தியா - பாகிஸ்தான் தொடர் நடைபெறுமா இல்லையா என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்துவிடும். (ம)

# வோஸ்னியாக்கி இறுதியாட்டத்தில்

மியாமி ரென்னிஸ் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றார் முன்னணி வீராங்கனையான வோஸ்னியாக்கி.

நேற்று அதிகாலை நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 12ஆம் இடத்தில் உள்ளவரான டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கியை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 3 ஆம் இடத்தில் உள்ளவரான செக் குடியரசின் பிளிஸ்கோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது செற்றை 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் வோஸ்னியாக்கி. ஆனால் அவர் சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரு செற்களையும் முறையே 6:1, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

கடந்த மாதம் நடந்த கட்டார் ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் கரோலினா வோஸ்னியாக்கியை, கரோலினா பிளிஸ்கோவா வீழ்த்தியிருந்தார். நேற்றுக் கிடைத்த வெற்றியின் மூலம் கரோலினா வோஸ்னியாக்கி அதற்கு பழி தீர்த்துக் கொண்டார். (ம)

## வீடு தேவை

கொழும்பில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு யாழ். நகரப்பகுதியில் கல்வி நிறுவனம் நடத்துவதற்கு உகந்த வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு-071 432 5002**

## மரண அறிவித்தல்

### பூதப்பிள்ளை விஜயகாந்தன்

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)



ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாக கொண்டவரும் கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை விஜயகாந்தன் நேற்று (31.03.2017) வெள்ளிக்கிழமை காலமாகி.விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப் பிள்ளை - தங்கநாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகாதேவியின் அன்புக்கணவரும் விஜயரோகினி, மாலவன் (கடற்தொழில் பரிசோதகர், கிளிநொச்சி), ஜெனகன் (ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), வர்சிகன் (பொறியியலாளர் மகாவலி அதிகாரசபை) ஆகியோரின் அன்புத்தந்தையும் வேனுஜா (commercial bank - மானிப்பாய்) அன்பு மாமனும் அகரவனின் அன்புப்பேரனும் திருமலர்ச்செல்வி, விமலகாந்தன், மைதிலி (ஆசிரியர், தந்தை செல்வா பாடசாலை தெல்லிப்பழை), மதனகாந்தன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற லவக்குமார் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஜெயராணி, புஸ்பராணி (கனடா), சரோஜினி தேவி (பிரான்ஸ்), இந்திரா, சாந்தினி தேவி (லண்டன்), தர்மஜெயகாந்தன், கலாதேவி (கனடா), அருணவிசயம் (பிரான்ஸ்), அருணஸ்ரீ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.03.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 224 3148.

யாழ். நகரின் "Super Grade" கல்வி நிறுவனம்
புதிய **நாவலர்** கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**O/L DAY CLASS**
(பகல்நேர வகுப்பு)
ஆரம்பம்:- 03.04.2017
திங்கள் காலை 8.00 மணி

- எமது வழமையான ஆசிரியர் குழாம்
- அனுமதிகள் இன்றுமுதல் வழங்கப்படும்.

**தொடர்பு:- 077 459 8440**

# AUTO CAD



**Specially Designed For:**
Engineering,Architecture Students
Draught,Technical Personnel
Surveyors

Level 1.Elementary Draughting,
Level 2.Advanced Draughting & Visualizations(3D).

பொறியியற்பீடத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு அத்தியவசியமானது.

**New Batch starts on 08.04.2017**

உங்கள் தேவைக்கேற்ப வரையறையற்ற செய்முறை பயிற்சி நேரம்

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11.09.1949 மறைவு 02.03.2017



கடந்த 02.03.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி
**சீதாலஷ்மி ஜெயபாலரட்ணம்**

(ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு இயக்குனர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.04.2017) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் (76/5 ஒட்டுமடம் வீதி) இல்லத்தில் நடைபெறும் என்பதையும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**அத்துடன் அன்னாரின் இழப்பின் போது நேரில் கலந்து கொண்டும் தொலைபேசியிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளை இருகரம் கூப்பித் தெரிவித்துக்கொள்கிறோம்.**

76/5, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 4940 814, 021 222 3691

## யாழ்ப்பாணத்தில்......
## திறமையின் தேடல்

ஊடகத்துறையில் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

# Dip.in Mass Media

**தயாராகுங்கள்...**



இலங்கையிலும், சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஓர் அறிவிப்பாளராக வெற்றியடையுங்கள்.

**3 - Months**

வயதெல்லை கிடையாது.

- வானொலித்துறை
- செய்தித்துறை
- பத்திரிகைத்துறை
- ஒலிப்பதிவுத்துறை
- விளம்பரத்துறை

**ஊடகத்துறையில் ஒரு புதிய பரிணாமம்.**

பதிவுகளுக்கு முந்துங்கள்.

BRC
BRITISH ROYAL COLLEGE

20,Kannathitty Lane, Jaffna.
(New Science Hall அருகில்)

T: 021 492 7456 M: 071 432 5002

## சதாபொன்ஸ்
கல்வி நிலையம்
அல்வாய்

O/L துரித மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம் -
**31.03.2017**
வெள்ளிக்கிழமை காலை
7.30 மணிக்கு

A/L கலை. வர்த்தகப் பிரிவுகள் நடைபெறுகின்றன.

யாழில் புகழ்பூத்த No-1 நிறுவனம்
## விக்னா
கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ். 077 662 9137

**O/L DAY CLASS** (8.00-2.00)
ஆரம்பம் 03.04.2017 (8 மணி)

- எமது நிறுவனத்தில் கற்ற 99% மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.
- அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.
- யாழ். நகரில் O/L Day Class இங்கு மட்டுமே.
- இவ்வருடம் பிரிவு 4 மட்டும்.
- அனுமதிகள் இன்று முதல்.
60 மாணவர்களுக்கு மட்டும்.

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினிதேவி கதிர்காமநாதன்

(சறோ அக்கா)



பிறப்பு 24.09.1947 இறப்பு 31.03.2017

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை தட்டாதெரு, கனடா, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி கதிர்காமநாதன் நேற்று (31.03.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் மகேஸ்வரி (கொழும்பு) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அன்பு மனைவியும் பாலேந்திரன் (பாபு), இராஜேந்திரம் (ராஜ்- கனடா), யோகேந்திரன் (யோகன்), காலஞ்சென்ற குலேந்திரன் (குலேந்தி) ஆகியோரின் அன்புத்தாயும் அஜந்தா, ஜெயதீபா (கனடா), சுபனா ஆகியோரின் அன்பு மாமியும் திவ்யா, வித்யா, பிரீத்தி, குலேன், ஷாரணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் Dr.பாலசிங்கத்தின் அன்புச்சகோதரியும் மங்கையற்கரசியின் பாசமிகு மைத்துனியும் Dr.சுதந்திரமதன், பாலமுரளி, Dr.பிரசாந்தி ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 11 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மு.ப 11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை ஈமைக்கிரியைகள் இடம்பெற்று பி.ப. 1.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ராஜ் (+1647 545 3815)
0094 76 901 7266

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.